REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2021 மார்ச் 19 வெள்ளிக்கிழமை

89 1932 - 2021

வரு. 89 இல. 67 | March 19, Friday, 2021 | 24 பக்கங்கள் | 30/-

தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய

## தனியார் துறைக்கும் அனுமதி வழங்கவும்



கொரோனா தடுப்பூசியை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கு அனுமதி வழங்கப் பட வேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து கண்டறியப்படும் 06



பிரேசிலில் ஒரே நாளில் 90,303 பேருக்கு கொரோனா 02

புலமைக் கதிர் தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான 13-14

ஆலமுல் இஸ்லாம் – அஜ்வாத் பாஸி aalamulislam.tkn@lakehouse.lk 15



இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்தியா 24

## தடுப்பூசி பெற்று நாடு திரும்புவோருக்கு 07 நாட்கள் மட்டுமே தனிமைப்படுத்தல்

புதிய சுற்றுநிருபத்தை நேற்று வெளியிட்டது சுகாதார அமைச்சு

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தருவோர் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரத்துறை வழிகாட்டல்கள் அடங்கிய மறுசீரமைக்கப்பட்ட சுற்று நிருபத்தை சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் மற்றும் சர்வதேச நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ள ஒருவர் 14 நாட்களுக்குப் பின்னரே இலங்கைக்கு வரமுடியும். அத்தகைய நபர் இலங்கைக்கு வருகை தரும் முதல் நாளில் தனியார் விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதன்பின்னர் 7 நாட்கள் அவர் தொடர்ந்தும் குறித்த விடுதியில் தங்க வைக்கப்படுவார். ஏழு நாட்களிலும் சுகாதாரத்துறை பாதுகாப்பு வழங்கப்பட்ட முக்கிய இடங்களுக்கு செல்ல அவருக்கு அனுமதி உண்டு எனினும் அவர் மீண்டும் அதே 06

## பிரதமர் மஹிந்த இன்று பங்களாதேஷ் பயணம்

சுதந்திர பொன்விழாவில் பங்குபற்றுவார்

லோரன்ஸ் செல்வநாயகம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பங்களாதேஷ் செல்லவுள்ளார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அழைப்பி பேரில் அங்கு விஜயம் செய்யும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று 19 மற்றும் நாளை 20ஆம் திகதிகளில் பங்களாதேஷில் தங்கியிருப்பதுடன் அந்நாட்டின் தேச பிதாவான ஷெய்க் முஜிபுர் ரஹ்மானின் ஜனன தின நூற்றாண்டு 06

## அயோத்தி ஸ்ரீ இராமர் கோவிலுக்கு பூஜிக்கப்பட்ட புனித சின்னம் வழங்கல்



கோபால் பாக்லே முன்னிலையில் மிலிந்த மொரகொடவிடம் கையளிப்பு

இந்தியாவின் அயோத்தி நகரில் அமைக்கப்படவுள்ள ஸ்ரீ ராமர் கோவிலின் கட்டுமானப் பணிகளுக்காக நுவரெலியாவில் அமைந்துள்ள 'சீதா எலிய' ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தின் 06

நாட்டில் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு எதுவுமில்லை

# 'காஸ்' விலை அதிகரிப்புக்கு எவ்வித அவசியமும் இல்லை

பண்டிகை காலத்தில் மக்கள் நலனுக்கு பிரதமர் முக்கியத்துவம்



லோரன்ஸ் செல்வநாயகம்

அரிசி, சீனி, பால்மா, பருப்பு வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு தொடர்பிலும் பிரதமர் ஆராய்வு

நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு இல்லையென்றும் பண்டிகை காலங்களில் சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கான எவ்வித அவசியமும் இல்லையெனவும் நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் சந்தைவாய்ப்பு தொடர்பில் அலரி மாளிகையில் (17) நடைபெற்ற மறுஆய்வு கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அரிசி, தேங்காய், பால்மா, மீன், இறைச்சி, முட்டை, பருப்பு மற்றும் தானிய வகை, பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம், கிழங்கு, மரக் 06

சிங்கப்பூர் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில்

## அர்ஜுனை நாடு கடத்தும் ஆவணங்கள் பரிசீலனை

மேல்நீதிமன்றில் மேலதிக சொலிசிட்டர் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மத்திய வங்கி பிணைமுறிகள் மோசடியுடன் தொடர்புடைய முதலாவது பிரதிவாதியான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு நாடு கடத்துவதற்காக, சட்ட மா அதிபரால் மூன்றாவது தடவையாகவும் அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் 06

## இன, மத அடிப்படையிலான கட்சிகள் பதிவில் கவனம்

ஏற்கனவே பதிவிலுள்ள கட்சிகள் குறித்தும் ஆராய்வு

சுப்பிரமணியம் நிசாந்தன்



மதம் மற்றும் இனத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகளை எதிர்வரும் காலங்களில் பதிவு செய்யாதிருப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது விரிவாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். 06

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட

## அசாத் சாலியை 18 மாதங்கள் வரை வைத்து விசாரிக்கலாம்

விசாரணை முடிந்ததும் நீதிமன்றில் ஆஜர்

சுப்பிரமணியம் நிஷாந்தன்



பங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலியை 18 மாதங்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள முடியுமென பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். 06



ரூபாவின் பெறுமதி இழப்பால் நாடு வீழ்ச்சியடையும் நிலை 03

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை

கொரோனாவால் தொழில்களை இழந்த

## தனியார் துறையினருக்கு நிவாரணம் வழங்க தொழில் திணைக்களம் தயார்




தகவல்களை வழங்குமாறு வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் பாதிப்பினால் தொழில்களை இழந்தவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அவர்களது விபரங்கள் தொழில் திணைக்களத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

அவ்வாறான ஊழியர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் 06

காணாமல் போனோரின் உறவுகளுக்கான எனது அழைப்பு;

## பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான அழைப்பே தவிர பதாகைகளுக்கல்ல!



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டமான பதில்

காணாமல் போனோரது உறவுகளுக்கு நான் விடுத்திருக்கும் அழைப்பு, பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான அழைப்பேயன்றி பதாகைகளுக்கான அழைப்பல்ல என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது உறவுகளையும், நான் நேசிக்கும் மக்களையும் நானும் இழந்தவன் என்ற வகையில் அத்தகைய இழப்புக்கள், வலிகளின் வேதனைகளையும், துயரங்களையும் நன்கு அறிந்தவன். எனவேதான் காணாமல்போன உறவுகளின் தேடலுக்கும், கோரிக்கைக்கும் 06

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை;

### சிறிதரன் எம்.பியிடம் நேற்றும் வாக்குமூலம்



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டமை 06

### பெற்ற குழந்தையை மண்ணில் புதைத்த தாய்



வவுனியா, பம்பைமடுவில் பெற்ற குழந்தையை மண்ணுக்குள் புதைத்த தாயொருவர் 06

விக்கல் வீராச்சாமி



அனுராதபுரத்துக்கு இரவோடிரவாக போன காணி ஆவணங்கள் திரும்ப யாழ்ப்பாணம் வந்துட்டுதாமே....

ஓம், மஹிந்தானந்த ஐயா ஒரே ஒரு டெலிபோன் கோல்தான் கொடுத்தவர், அதிகாரிகள் கொண்டு ஓடி வந்துட்டி–னம்...!!!

போக்குவரத்து அமைச்சருடன் ஏற்பட்ட இணக்கப்பாடு

## முடிவுக்கு வந்தது ரயில்வே தொழிற்சங்க பணிப் பகிஷ்கரிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ரயில் சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்ட ரயில்வே ஊழியர்கள் நேற்று முன்தினம் முதல் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று மதியம் கைவிடப்பட்டதாக ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. 06

## தங்குமிட விடுதியில் மறைத்து வைத்திருந்த 386 கிலோ கஞ்சா

அனுராதபுரத்தில் பொலிஸாரால் மீட்பு; 200 பொதிகளுடன் 09 பேர் கைது



சுப்பிரமணியம் நிசாந்தன், அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம், புதிய கண்டி வீதி பிரதேசத்திலுள்ள தங்குமிட விடுதியொன்றையும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றையும் சோதனைக்கு உட்படுத்திய போது 386 கிலோ கேரள கஞ்சாவை பொலிஸார் 06

# சர்வதேச செய்திகள்

## நூற்றாண்டில் முதல்முறையாக ஆஸி. சனத்தொகையில் சரிவு



கொரோனா தொற்றினால் எல்லைகள் மூடப்பட்டு வெளிநாட்டு குடியேறிகளின் வருகை தடைப்பட்ட நிலையில் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மோலான காலத்தில் அவுஸ்திரேலிய சனத்தொகையில் முதல் முறை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த 2020 செப்டெம்பர் வரையான ஓர் ஆண்டில் நாட்டின் சனத்தொகை வளர்ச்சி ஒரு வீதத்திற்கும் குறைவாகவே இருந்துள்ளதாக அவுஸ்திரேலிய புள்ளிவிபர பணியகம் தெரிவித்துள்ளது.

“கடைசியாக 1916 டிசம்பர் வரையான அண்டில் முதலாம் உலகப் போரின் போதே சனத்தொகை வீழ்ச்சியை காணமுடிந்தது” என்று அந்தப் பணியகத்தின் சனத்தொகை பணிப்பாளர் பில் பிரவுனிங் தெரிவித்தார்.

கடந்த நூற்றாண்டுகளாக ஐரோப்பா, ஆசியா அதற்கு அப்பாலிருந்து படையெடுத்த பாரிய குடியெற்றங்கள் மற்றும் சுரங்கத் தொழில் மற்றும் விவசாயத்தினாலேயே அவுஸ்திரேலிய பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது.

உலகில் மிகப்பெரிய தீவாக இருந்தபோதும் 25.7 மில்லியன் மக்கள் தொகையை மாத்திரமே கொண்டிருக்கும் அவுஸ்திரேலியா, கொரோனா தொற்று ஆரம்பித்தபோது நாட்டு எல்லையை மூடி வெளி உலகுடனான தொடர்பை குறைத்துக்கொண்டது.

## பாட மறந்த குயில்கள்



அவுஸ்திரேலியாவின் அரிய ரீஜண்ட் ஹனியீட்டர் குயில்கள் அவற்றின் பாட்டை மறந்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இந்தப் பறவைகள் அழிந்து போகும் விளிம்பில் இருப்பதை அது குறிக்கலாம் என்று அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெரிய பறவைகள் அருகி வருவதால் குஞ்சுகள் பாடக் கற்றுக்கொள்வதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பாடத் தெரியாத இளங்குயில்கள் இனப்பெருக்கம் செய்யும் சாத்தியமும் குறைவதாக ஆய்வு சுட்டிக்காட்டியது.

எஞ்சியுள்ள ஆண் ஹனியீட்டர் குயில்களில் சுமார் 12 வீதமான குயில்கள் மற்ற இனப் பறவைகளின் பாடல்களைப் பாடி வருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ஒரே இனத்துடன் தொடர்பு கொள்ளத் தெரியாத முதல் விலங்கினம் அதுவே என்று ஆய்வு குறிப்பிட்டது. இயற்கையில் சில நூறு குயில்கள் மட்டுமே எஞ்சியுள்ளதாக நம்பப்படுகிறது.

கிழக்கு அவுஸ்திரேலியாவில் எங்கும் காணப்பட்ட பறவைகள் இப்போது யூகலிப்டஸ் காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன. பாதுகாப்பில் இருக்கும் குயில்களுக்கு ஒலிப்பதிவுகளின் மூலம் பாட்டுகளைக் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் ஆய்வாளர்கள்.

## சூறாவளி பெயர்களுக்கு ஓய்வு



டோரியன், லாரா, எட்டா, ஐயோட்டா ஆகிய பெயர்கள் சூட்டப்பட்ட சூறாவளிகள் பெரிய அளவில் மரணங்களையும் பேரழிவையும் ஏற்படுத்தியதால் அந்தப் பெயர்களுக்கு ஓய்வு அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 நாள்கள் இணையம் வழி நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பின் சூறாவளிக் குழுச் சந்திப்பின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் குழுவில் வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரீபியன் ஆகிய பகுதிகள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு வீசிய 30 சூறாவளிகளில், குறைந்தது 400 பேர் உயிரிழந்துள்ளனர். 41 பில்லியன் டொலர் மதிப்பிலான சேதம் ஏற்பட்டது.

ஆண்டுதோறும் ஜூன் முதல் நவம்பர் வரை நீடிக்கும் அட்லாண்டிக் சூறாவளிப் பருவத்தின்போது, சூறாவளிகளுக்குப் பெயர் சூட்டப்படுவது வழக்கம்.

எச்சரிக்கை செய்திகளில் அவற்றை அடையாளம் காண எளிதாக இருக்கும் என்பதால், அவை பெயரிடப்படுகின்றன. சூறாவளிகளுக்கு ஆங்கில எழுத்துகளின் வரிசையில், ஆண் பெயர், பெண் பெயர் மாற்றி மாற்றி வைக்கப்படும்.

ஒவ்வொரு 6 ஆண்டுகளுக்கு, அந்தப் பெயர்கள் மீண்டும் பயன்படுத்தப்படும்.

# புட்டினுக்கு பைடன் எச்சரிக்கை: ரஷ்ய - அமெ. உறவில் முறுகல்

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா தலையிட்டதாகக் கூறப்படுவது குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

பைடனுக்கு எதிராக ரஷ்யா, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் ஆதரவாளர்களைத் தூண்டியதாக அமெரிக்க உளவுப் பிரிவின் அறிக்கை ஒன்று கூறியதைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ரஷ்யாவைத் தண்டிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்றும் பைடன் குறிப்பிட்டார்.

இதன்போது ரஷ்ய ஜனாதிபதியை கொலைகாரர் என்று பைடன் சாடி இருந்தார்.

டிரம்ப் நிர்வாகத்துடன் ஒப்பிடும்போது, பைடன் நிர்வாகத்தின் கீழ் ரஷ்யாவுடனான உறவுகள் மிகவும் மாறுபட்டிருக்கும் என்று வெள்ளை மாளிகை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த உளவுப் பிரிவு அறிக்கை தவறானது என்று ரஷ்யா கூறியது. தன் மீதான குற்றச்சாட்டுகளையும் அது மறுத்தது. அவற்றுக்கு எந்த அடிப்படையும் ஆதாரமும் இல்லை என அது குறிப்பிட்டது.



இதன் எதிரொலியாக அமெரிக்காவுக்கான தனது தூதர் அனடோலி அன்டனோவை ரஷ்யா திரும்ப அழைத்துக் கொண்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவுடனான உறவுகளின் பின்னணியில் என்ன செய்ய வேண்டும் என்பதை பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் ஆலோசனை நடத்துவதற்காக ரஷ்ய தூதர் மொஸ்கோவுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ் கூறும்போது, “ரஷ்ய அமெரிக்க உறவுகள் மேலும் மோசமடைவதற்கான பொறுப்பு அமெரிக்காவிடம்தான் முழுமையாக உள்ளது” என்றார்.

ஏற்கனவே ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னிக்கு விஷம் கொடுக்கப்பட்ட விவகாரத்தில் ஜனாதிபதி புட்டினுக்கும், அவரது நிர்வாகத்துக்கும் அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

மேலும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அலெக்சி நவால்னியை விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையே ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பான அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பிரேசிலில் ஒரே தினத்தில் 90,303 பேருக்கு கொரோனா



தென் அமெரிக்க நாடுகளில் கொரோனா தொற்று பரவல் உச்சமடைந்து வரும் நிலையில், பிரேசிலில் ஒரே நாளில் சாதனை எண்ணிக்கையாக கடந்த புதனன்று 90,303 கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

தவிர, கடந்த புதனன்று 2,648 உயிரிழப்புகள் இடம்பெற்றதாக பிரேசில் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி அந்நாட்டின் மொத்த கொரோனா உயிரிழப்பு சம்பவங்கள் 282,000க்கு மேல் பதிவாகி உள்ளது. இது அமெரிக்காவுக்கு மாத்திரமே இரண்டாவதாக உள்ளது.

இதற்கு முந்தைய நாளில் பிரேசிலில் இதுவரை இல்லாத அளவில் ஒரே நாளில் கொரோனா தொற்றினால் 2,841 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வைரஸ் தொற்றை குறைத்து மதிப்பிட்டு வரும் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோவுக்கு அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. நோய்த் தொற்று ஆரம்பித்தது தொடக்க பிரேசிலில் நான்கு சுகாதார அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் பொது முடக்கத்தை கொண்டு வர பிராந்திய அரசுகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரேசிலில் கொரோனா தடுப்பு மருந்து திட்டமும் தாமதிப்பது பொது மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

### கொரோனா வதந்தி:

## தன்சானிய ஜனாதிபதி மகுபுலி காலமானார்



தன்சானிய ஜனாதிபதி ஜோன் மகுபுலி தனது 61 ஆவது வயதில் காலமானார் என அந்நாட்டு பிரதமர் சமியா சுலுஹு ஹசன் அறிவித்துள்ளார். இதயப் பிரச்சினைகள் காரணமாக தாரஸ்ஸலாமில் உள்ள மருத்தவமனை ஒன்றில் அவர் கடந்த புதன்கிழமை மரணித்ததாக பிரதமர் தொலைக்காட்சி உரையில் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேல் பொது நிகழ்வுகளில் பங்கேற்காத மகுபுலியின் உடல் நிலை குறித்து வாதந்திகள் பரவி இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டபோதும் அது உறுதி செய்யப்படவில்லை.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் பற்றி சந்தேகங்களை வெளியிட்டு வந்தவராகவே மகுபுலி இருந்தார். அந்தத் தொற்றுக்கு எதிராக பிரார்த்திப்பதற்கும் மூலிகையாலான நீராவி சிகிச்சைக்கும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

தன்சானியாவில் 14 நாட்கள் துக்க தினம் அறிவிக்கப்பட்டிருப்பதோடு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

தன்சானிய அரசியல் அமைப்பின் படி பிரதமர் சமியா புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவிருப்பதோடு கடந்த ஆண்டு ஆரம்பித்த மகுபுலியின் ஐந்து ஆண்டு தவணை முழுவதும் அவர் பதவி வகிக்கவுள்ளார்.

## ஆங் சான் சூச்சி மீது புதிய குற்றச்சாட்டு



மியன்மாரில் இராணுவத்தால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பதவி கவிழ்க்கப்பட்ட ஆளும் கட்சித் தலைவி ஆங் சான் சூச்சி கையூட்டு பெற்றதாகப் புதிய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சொத்து மேம்பாட்டாளரான பிரபல தொழிலதிபர் மோங் வேக், சூச்சியிடம் சட்டவிரோதமாக அரை மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையைக் கொடுத்ததாகக் கூறியுள்ளார்.

அந்தப் பணத்தைக் கறுப்பு உறைகளில் வைத்து, சூச்சியிடம் அவரின் வீட்டில் கொடுத்ததாக மோங் கூறினார். ஒரு முறை 100,000 டொலரையும், 2019ஆம் ஆண்டில் வேறோரு முறை 150,000 டொலரையும் கொடுத்ததாக அவர் கூறினார்.

இந்த புதிய கையூட்டுக் குற்றச்சாட்டைத் தவிர்த்து, சூச்சி மீது சட்டவிரோதமாகத் தொலைத்தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்ததாகவும், வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் விதிகளை மீறியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நாடெங்கும் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன.

கடந்த புதனன்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் மேலும் 9 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதுவரை மொத்தம் சுமார் 220 பேர் பலியாகியுள்ளனர்.

இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும்படி கோரி, மியன்மார் மீது பிராந்திய அளவிலான நெருக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

## பிரிட்டனின் தடுப்பூசி திட்டத்தில் ஏப்ரலில் தாமதம் ஏற்பட வாய்ப்பு

பிரிட்டனின் தடுப்பூசி உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இம்மாத இறுதியில் கிடைக்கவிருந்த தடுப்பூசிகள் கணிசமாகக் குறையக்கூடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசித் திட்டத்தை மிக விரைவாகச் செயல்படுத்திய உலக நாடுகளில் பிரிட்டனும் ஒன்று.

அங்கு இதுவரை 25 மில்லியன் பேருக்கு முதல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களுக்குள், பிரிட்டனில் வாழும் பெரியவர்களில் பாதிப் பேருக்கு முதல் தடுப்பூசி போடப்பட்டிருக்கும்.

முன்னுரிமை வழங்கப்படும் பிரிவினருக்கு அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் தடுப்பூசி போட அது இலக்கு கொண்டுள்ளது.

அனைத்துப் பெரியவர்களுக்கும் ஜூலை இறுதிக்குள் தடுப்பூசி போட பிரிட்டன் திட்டமிடுகிறது.




இந்நிலையில் இந்தியாவில் இருந்து கிடைக்க வேண்டிய ஐந்து மில்லியன் அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தில் தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் பிரிட்டனில் கொரோனா தடுப்பு மருந்து விநியோகத்தில் ஏப்ரல் மாதத்தில் குறையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தடுப்பு மருந்து விநியோகத்தை இந்தியாவின் சீரம் நிறுவனம் நான்கு வாரங்களுக்கு நிறுத்தி வைத்திருப்பதாக தெரியவந்துள்ளது.

## அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு வலியுறுத்து

அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசி தொடர்பாக எழுந்துள்ள அச்சங்களை உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து நிராகரித்து வருகிறது. தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதால் ஏற்படும் பயன்கள், அதன் அபாயங்களை விட அதிகம் என நிறுவனம் குறிப்பிட்டது.

அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுவோர், அதைப் போட்டுக்கொள்ளுமாறு நிறுவனம் அறிவுறுத்தியது.

அந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டவர்களுக்கு இரத்தக்கட்டு ஏற்பட்டதாகத் தகவல்கள் வந்ததைத் தொடர்ந்து, 10க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகள் அதன் பயன்பாட்டை நிறுத்திவைத்துள்ளன.



ஐரோப்பிய வட்டார நாடுகளில் 5 மில்லியனுக்கும் மேற்பட்டோருக்கு அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசி போடப்பட்டது. அவர்களில் 30 பேருக்கு, வழக்கத்துக்கு மாறான இரத்தக் கோளாறுகள் இருப்பது தெரியவந்தது. அது குறித்து விசாரணை மேற்கொள்வதாக ஐரோப்பிய மருந்து ஆணையம் குறிப்பிட்டது.

அவுஸ்திரேலியா, இந்தியா, தாய்லந்து ஆகிய நாடுகள், அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசிக்கு ஆதரவு தந்துள்ளன. இந்தோனேசியா, உலக சுகாதார அமைப்பின் மறுஆய்வு முடிவுகளுக்குக் காத்திருக்கப் போவதாகத் தெரிவித்தது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 19 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.01
லுஹர் - 12.20
அஸர் - 03.33
மஃரிப் - 06.22
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# நீதிமன்ற கட்டமைப்பின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 2021இல் ரூ. 20பில். ஒதுக்கீடு

## நீதியமைச்சர் அலி சப்ரி





**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதிமன்ற கட்டமைப்பின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக இந்த வருடத்தில் 20 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை நீதிமன்ற கட்டமைப்பின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கையின்போது நீதிமன்றத்தின் நீதிபதிகள், சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ள நீதியமைச்சர், அந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை அவர்களின் கருத்துக்கள் ஆலோசனை

06



## தவக்கால சிந்தனை

# யோசேப்பிடமிருந்து கற்றுக்கொள்வோம்

தவக்காலத்தில் நாம் கொண்டாடும் விழாக்களில் மிகவும் முக்கியமானது தூய வளனாரின் பெருவிழா. இத்தவக்காலத்தில் இவரை நாம் நினைவு கூர்வது இன்னும் அதிகமாக இத்தவக்காலத்தை வாழ்வாக்க எளிதாக இருக்கும்.

காரணம் இவர் மௌனத்தில் பேசியவர், பேசியதைக் காட்டிலும் செயலினால் அதிகம் இறைத் திருவுளத்தை நிறைவேற்றியவர். உப்பாக, ஒளியாக இருங்கள் என்று சொன்ன நம் ஆண்டவரின் வார்த்தைகளை உலகின் உப்பாக இருந்து வாழ்ந்து காட்டியவர். நேற்றைய நற்செய்தியில் ‘தீர்ப்பிடாதீர்கள்’ என்ற இறைவார்த்தையை தன் வாழ்க்கை மந்திரமாகக் கொண்டவர். உன் உள் அறைக்கு சென்று செபி என்ற இறைவார்த்தை தன்வார்த்தையாக்கியவர். இதுவரைக்கும் இத்தவக்காலத்தில் நாம் பார்த்த அனைத்து நற்செய்தியின் மதிப்பீடுகளின் மறுஉருவமே இன்றைய விழா நாயகர் தூய வளனார்.

தன் விருப்பு வெறுப்புகளை இறைவனின் விருப்பத்திற்காக கரைத்துக் கொண்டவர். தன்னால் முடிந்தவரை நல்லவர்களின் நற்பெயருக்கு கலங்கம் வராதபடி தன்னையே கட்டி கோட்டையாகப் பார்த்துக் கொண்டவர். மொத்தத்தில் இத்தவக்காலம் நம் கண்முன் காட்டுகிற தூய வளனார், நம் அனைவருக்கும் ஒரு முன் உதாரணம். இறைவனின் திருவுளத்தை எப்படி அறிந்து செயல்படுவது என்பதற்கு அவரே நம் அனைவரின் மாதிரி. அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரின் அன்பு மகன் இயேசுவின் மதிப்பீடுகளை நம் வாழ்வாக்குவோம்.

பொறுமைக்கு சிறந்த எடுத்துக் காட்டு யோசேப்பு. வாழ்வை பொறுமையோடு அணுகுவதுதான் யோசேப்பின் வெற்றி. இந்த உலகம் வேகமான உலகம். இதிலே நிதானத்திற்கு இடமில்லை. எடுத்தோம், கவிழ்த்தோம் என்கிற நிலைதான். இன்றைக்கு பல திருமணங்கள் உடைவதற்கு காரணம் இந்த வேகம் தான். பொறுமை வாழ்விற்கு அவசியம். முடிவெடுக்கும் தருணங்களில், வாழ்க்கைத்துணையை தேர்வு செய்வதில், தேர்வு எழுதுவதில், கடவுளிடம் செபித்து காத்திருப்பதில் பொறுமை அவசியம். அத்தகைய பொறுமையை யோசேப்பிடமிருந்து கற்றுக்கொள்வோம்.

அருட்பணி பேர்னாட் ஜீவா...





இந்தியாவின் அயோத்தியில் அமைக்கப்படவுள்ள ஸ்ரீ இராமர் கோவிலின் கட்டுமானப் பணிகளுக்காக நுவரெலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலய கர்ப்பக்கிரகத்தில் பூஜிக்கப்பட்ட புராதன நினைவுச்சின்னம் நேற்று வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலய மண்டபத்தில் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே,இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# ரூபாவின் பெறுமதி இழப்பால் நாடு வீழ்ச்சியடையும் நிலை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை

இலங்கை ரூபா பெறுமதி இழப்பதால் நாடு வீழ்ச்சியடையும் நிலையை எதிர்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். மொரட்டுவையில் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி இழப்பை தவிர்ப்பதற்காக தங்களிடமுள்ள வழிமுறைகள் என்னவென்பதை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டுமென அவர் தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் வீழ்ச்சி காரணமாக இலங்கை பல பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார்.

06

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

# ஜே.வி.பி. தலைவரிடமும் வாக்குமூலம் பெறப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட நபர் ஒருவருடனான தொடர்பு குறித்து ஜே.வி.பி தலைவர் அனுர குமார திசாநாயக்கவிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட தற்கொலை குண்டுதாரிகள் இருவரும் அந்தத் தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக மூன்று கோடிக்கும் அதிகமான நிதியை செலவிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு புறக்கோட்டை சுயதொழில் வர்த்தகர்கள் சங்கத்தின் அலுவலகம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட தற்கொலை குண்டுதாரிகளான மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஷாப் ஆகிய இளம் வர்த்தகர்களின் தந்தையான மொஹமட் இப்ராஹிம் என்ற கோடீஸ்வர வர்த்தகர் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக பெயர் குறிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவிடம் எதிர்காலத்தில் வாக்குமூலம் பெறப்படுமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

# ஞாயிறு தினக்குரல் முன்னாள் ஆசிரியர் பாரதியின் சகோதரர் காலமானார்

ஞாயிறு தினக்குரல் முன்னாள் ஆசிரியரும் தற்போதைய ஈழநாடு பத்திரிகையாளருமான இராஜநாயகம் பாரதியின் சகோதரர் இராஜநாயகம் பரதன் தனது 60ஆவது வயதில் லண்டனில் காலமானார். விடுதலைப்புலிகளின் "நிதர்சனம்" பொறுப்பாளராக இருந்த பரதனுக்கு மனைவியும் இரு பிள்ளைகள் உண்டு. தற்போது லண்டனில் வசித்து வந்த நிலையில் ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக நேற்று வியாழக்கிழமை பிற்பகல் காலமானார் .

# இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம முல்லைத்தீவு விஜயம்

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று(18) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் முல்லைத்தீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். முல்லைத்தீவு மாவட்ட செயலக போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திற்கு சென்ற இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து மாவட்ட அரச பேருந்து சாலைக்கு சென்று அங்குள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் ஊழியர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

### 183 வருட வரலாற்றைக் கொண்ட

# கிராண்ட் ஓரியண்டல் பிரதமரால் நேற்று திறப்பு



தொல்பொருள் பெறுமதிவாய்ந்ததும்183 ஆண்டு கால வரலாற்றை கொண்டதுமான கொழும்பில் அமைந்துள்ள கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல், புனரமைக்கப்பட்ட பின்னர் நேற்று (18) மாலை 6.00 மணிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மீள திறக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள செலன்டிவா இன்வெஸ்ட்மென்ட் நிறுவனம் மற்றும் இலங்கை அரச கூட்டுத்தாபனம் ஆகியவை ஒன்றிணைந்து இந்த கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல் புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்காக 225 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில், கொழும்பு நகரின் பழைமை வாய்ந்த கட்டிடங்களை அவற்றின் தொல்பொருள் மதிப்பு பாதுகாக்கும் வகையில் புனரமைக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல் அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட ஒன்றாகும்.

### சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மன்னன்

# கெசல்வத்த தினுகவின் சடலம் மாற்று பெயரில் நாட்டுக்குள்

## விமான நிலையத்தில் தடுத்து வைப்பு; DNA பரிசோதனை செய்ய தீர்மானம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

டுபாயிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய சடலமொன்று கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் சடலம் இன்டர்போலால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட சர்வதேச போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய கெசல்வத்த தினுக என்று அழைக்கப்படும் ராஜபக்ஷ ஆராய்ச்சிகே தினுக மதுசான் என்பவருடைய சடலமாக இருக்கக்கூடுமென பொலிஸார் சந்தேகிப்பதாக பிரதி பொலிஸ் மாஅதிபரும் பொலிஸ் ஊடகப்பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே

06

# சுகாதார வழிகாட்டுதல்களுடன் பண்டிகை கொண்டாட்டங்கள்

## விழிப்புடன் செயற்பட DIG அஜித் ரோஹண வலியுறுத்து

**சுப்பிரமணியம் நிசாந்தன்**



கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் இருப்பதால், வரவிருக்கும் பண்டிகைக் காலங்களில் விழிப்புடன் இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பண்டிகையை கொண்டாட விரும்பினால் சுகாதார வழிகாட்டல்களை கடைபிடிக்க வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடந்த ஆண்டு பொதுமக்களால் தமிழ், சிங்கள புத்தாண்டைக் கொண்டாட முடியவில்லை. இருப்பினும் இந்த ஆண்டு தொற்றுநோயின் பரவல் தொடர்ந்தாலும் பொதுமக்களுக்கு பண்டிகையைக் கொண்டாட வாய்ப்பு வழங்கப்படுமென்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கே இலங்கையில் வைரஸ் பரவல் காணப்படுவதால் இது சாத்தியமானதென்றும் அவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் நாட்டில் இன்னமும் கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் எச்சரிக்கையாக இருக்குமாறும் பொருட்கள் கொள்வனவில் ஈடுபடும்போதும் வெளியில் செல்லும்போது தனிமைப்படுத்தல் சட்டத்தை கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 152.85 | 159.34 |
| கனடியன் டொலர் | 157.01 | 163.86 |
| யூரோ | 233.12 | 241.95 |
| ஜப்பான் யென் | 1.7987 | 1.8585 |
| சிங்கப்பூர் டொலர் | 144.55 | 151.08 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 272.31 | 282.24 |
| சுவிஸ் பிராங்க் | 210.76 | 219.85 |
| அமெரிக்க டொலர் | 195.30 | 201.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 523.74 | கட்டார் ரியால் | 54.21 |
| குவைத் டினார் | 653.95 | சவூதி ரியால் | 52.63 |
| ஓமான் ரியால் | 512.87 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 53.75 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 05

**குறள் தரும் சிந்தனை**

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம் நீரால் நிறைந்தாற் போன்றது.

# விமர்சனங்கள், குழப்பங்கள் இனிமேல் அவசியமில்லை!

நாட்டில் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கையின் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்படுமென நிலவி வந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில், அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இப்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

முன்னைய அரசாங்கத்தினால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பிரேரணையையடுத்து, அத்தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. இதன் காரணமாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதில் ஏற்பட்டுள்ள சட்டரீதியான தடைகளை இப்போது நீக்க வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும், தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எனவே மாகாண சபைத் தேர்தல் சாத்தியமானளவு விரைவில் நடத்தப்படுமென நாம் எதிர்பார்க்க முடியும். இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் முறைமையானது சர்ச்சைகள் நிறைந்ததாகும். 1987ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தத்தின் வாயிலாக 13ஆவது திருத்தத்துக்கிணங்க நாட்டில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமை அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இந்தியாவின் யோசனையின் பேரில் மாகாண சபை முறைமை இலங்கையில் கொண்டு வரப்பட்ட போதிலும், முழுநாட்டுக்குமென மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டதால், அதன் பலாபலன்களை தமிழர்கள் மாத்திரமன்றி நாட்டின் அனைத்து மக்களுமே அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறிருக்கையில், மாகாண சபை முறைமை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை அதனை தென்னிலங்கை பெரும்பான்மை கடும்போக்காளர்கள் 'வெள்ளை யானை' என்றே விமர்சித்து வருகின்றனர். சிறியதொரு நாட்டுக்குள் மாகாண சபை என்ற நிர்வாக முறைமை அவசியமற்றதென்பதும், அதனால் தேவையற்ற செலவினங்கள் ஏற்படுகின்றதென்பதும் தென்னிலங்கையில் ஒரு தரப்பாரின் கருத்தாக உள்ளது.

ஆனால் அவர்களது அவ்வாறான விமர்சனத்தின் பின்னால் மற்றொரு பிரதான காரணமும் உள்ளது. மற்றொரு நாட்டின் அழுத்தத்தின் பேரில் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையை இலங்கை பின்பற்றுவதானது எமது இறைமைக்கு சவாலான விடயமாகுமென்பதே கடும்போக்காளர்களின் வாதமாக உள்ளது. மாகாண சபை முறைமைக்கு எதிராக தென்னிலங்கை தரப்பில் இருந்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதிலும், மாகாண சபை முறைமை இன்னுமே ஒழிக்கப்பட்டதில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனியான மாகாண சபையாக இணைந்து செயற்பட்ட நாள் தொடக்கம் அம்மாகாணம் தனித்தனியாக பிரிக்கப்பட்டதன் பின்னரும் கூட இதுகால வரை வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆனால் கடந்த நல்லாட்சி காலத்தில் உண்டான இடையூறு காரணமாகவே மாகாண சபைத் தேர்தல் தாமதம் அடைந்தது.

இவ்வாறான நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உருவாகியதும், மாகாண சபை முறைமை இலங்கையில் தொடர்ந்தும் நீடிக்குமா என்பது குறித்து எதிரும் புதிருமான கருத்துகள் நிலவி வந்தன. மாகாண சபை முறைமை ஒழிக்கப்படும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படுமென்ற கருத்தும் நிலவியது. ஆனால் அவ்வாறான சந்தேகங்களுக்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே 13ஆவது திருத்தத்தை நீக்கும் விடயத்தில் அரசாங்கம் தயங்குவதாகவும், அதனாலேயே மாகாண சபை முறைமையை தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் அரசியல் களத்தில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எனவேதான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்ற தீர்மானத்துக்கு அரசாங்கம் வந்துள்ளதாகவும் அந்த விமர்சனங்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல்ல இந்த விமர்சனங்களை மறுத்திருக்கின்றார். எந்தவொரு நாட்டினதும் அழுத்தத்தின் பேரில், மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் முடிவு செய்யவில்லையென்று அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் நடைபெறுவதற்கும், மாகாண சபைத் தேர்தல் நடத்துவதென்ற முடிவுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்பதே அமைச்சரின் விளக்கம் ஆகும்.

இவ்வாறான நிலையில், வருடக்கணக்கில் நிலவிய சர்ச்சையொன்று இப்போது முடிவுக்கு வந்துள்ளது. அது பற்றிய வீண்குழப்பங்கள் இனிமேல் அவசியமில்லை. மாகாண சபைகள் ஊடாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதையிட்டே இனிமேல் கவனம் செலுத்தப்படுவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் AMAN-21 பயிற்சி

## பாகிஸ்தான் கராச்சி கடல் பிராந்தியத்தில் வெற்றிகரமாக முன்னெடுப்பு: இலங்கை உட்பட 43 நாடுகள் பங்கேற்பு





சமாதானம் என்னும் அர்த்தத்தைக் கொண்டு வரும் `அமான்`21(AMAN21) என பெயரிடப்பட்ட பன்னாட்டு கடற்படை பயிற்சி அண்மையில் பாகிஸ்தான் கராச்சி கடற்கரை பிராந்தியத்தில் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. விசேடமாக இந்திய பெருங் கடற் பிராந்தியத்தில் செயற்படும் மற்றும் பிராந்தியத்தை சாராத மாலுமிகளுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் ஊக்குவித்தலே இந்த கடற்படைப் பயிற்சியின் அடிப்படை நோக்கமாகும்.

2007ஆம் ஆண்டு இந்த கடற்படை பயிற்சி பாகிஸ்தானால் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் சர்வதேச ஒத்துழைப்பு மேலும் வலுவடைய வழி பிறந்தது. நாம் வாழும் பிராந்தியத்தில் மாத்திரமல்லாது அதற்கு அப்பால் உள்ள பிராந்தியங்களில் ஒத்துழைப்பையும் மற்றும் உறுதித் தன்மையையும் நிலைநாட்ட இதன் மூலம் அத்திவாரம் இடப்பட்டுள்ளது என்பது கண்கூடாகத் தெரிகின்றது.



கடற்கொள்ளைகள், பயங்கரவாதம்.சமுத்திர ஆக்கிரமிப்பு மற்றும் குற்றங்களுக்கு எதிராக ஐக்கியமாக செயல்படுவது இந்த கடற்படை பயிற்சியில் ஒப்புக் கொள்ளப்பட்டமை சிறந்த விடயமாக தெரிகின்றது. இந்த ஒப்புதல் மூலம் சமுத்திரத்தில் இடம் பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், மற்றும் கடற்கொள்ளைகளுக்கு எதிரான நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த நீர்மூழ்கி பயிற்சிகள், தொலைத்தொடர்பு உத்திகள், வான்பாதுகாப்பு, கடற்படை உத்திகள், வினைத்திறன் மற்றும் வழிமுறைகளை பாவித்து கடற் பிராந்தியத்தியத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவது`AMAN` கொள்கையின் அடிப்படை



நோக்கம் ஆகும்.

`AMAN`21 7வது இருதரப்பு கடற்படை பயிற்சியாகும். 2007 ஆம் ஆண்டு `AMAN` கடற்படை பயிற்சி முதன்முறையாக நடைபெற்ற போது தமது கப்பல்களுடன் 28 நாடுகள் அதில் இணைந்து கொண்டன. 28 நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். 2009ஆம் ஆண்டு `AMAN` இரண்டாவது கடற்படை பயிற்சியில் பயிற்சிக்காக 24 நாடுகளும், கண்காணிப்புகாக 29 நாடுகளும் இணைந்து கொண்டன.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற`AMAN` மூன்றாவது பயிற்சியில் 28 நாடுகளும் 43 நாடுகளின் கண்காணிப்பாளர்களும் கலந்து கொண்டது விசேட அம்சமாகும். 2013ஆம் ஆண்டு நடைபெற்ற `AMAN` நான்காவது கடற்பயிற்சில் 29 நாடுகள் இணைந்து கொண்டதோடு கண்காணிப்பாளர்களாக 36 நாடுகள்இணைந்து கொண்டன.

ஐந்தாவது`AMAN` பயிற்சி 2017ஆம் ஆண்டு நடைபெற்ற தோடு அதில் 34 நாடுகள் தங்களது கப்பல்களுடன் கலந்து கொண்டன. கண்காணிப்பு நாடுகளாக 67 நாடுகள் கலந்து கொண்டன. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது `AMAN`கடற்படை பயிற்சியில் 46 நாடுகளும் கண்காணிப்பு நாடுகளாக 113 நாடுகளும் கலந்து கொண்டன. தொடர்ந்து அவற்றின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததோடு அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், ஜப்பான், பிரித்தானியா,துருக்கி, அவுஸ்திரேலியா, போன்ற பிரபல நாடுகள் தங்களது கப்பல்களுடன் இப்பயிற்சியில் கலந்து கொள்வதும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதும் இதன் வெற்றிக்கான காரணங்களாகும்.

`AMAN`21 கடற் பயிற்சியில் 43 நாடுகள் கலந்து கொண்டதோடு, இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 'கஜபாகு' என்னும் தாக்குதல் கப்பல் கப்டன் ஹர்ஷ த சில்வா தலைமையில் 180 மாலுமிகளுடன் கலந்து கொண்டது விசேட அம்சமாகும். கஜபாகு கப்பலின் அதிகார பலம் கிடைத்த பின்னர் முதற் தடவையாக வெளிநாட்டு பயணத்தை `AMAN` 21 பயிற்சியில் இணைந்ததன்மூலம் அடையாளப்படுத்தியது விசேட அம்சமாகும்.



**சந்தன விஜேகோன்**
(பாகிஸ்தானுக்கான பயண அனுபவங்களில் இருந்து...)
தமிழில்: **வயலட்**

உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் கப்பல்களுக்கு இணையாக கஜபாகு கப்பலின் மாலுமிகள் தோளோடு தோள் சேர்த்து செயற்பட்ட காட்சியை காண வந்த அனைவரையும் ஆச்சரியப்பட செய்தது. இலங்கை சிறிய நாடாக காணப்பட்ட போதிலும் அதன் கடற்படையிடம் காணப்படும் திறமை மற்றும் அனுபவம் மிகவும் அதிகமாகும். விசேடமாக 30 வருட கால எல்.ரீ.ரீ.ஈ உடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மற்றும் இலங்கை மாலுமிகளின் அனுபவம் இப்பயிற்சியின் போது வெளிப்பட்டமை அனைவரினதும் பாராட்டைப் பெற்றது.

எவ்வாறாயினும் AMAN கொள்கை, சமுத்திர பாதுகாப்புடன் இணைந்துள்ளதோடு கடற்படை இராஜதந்திர தன்மையையும்(Naval Diplomacy) உருவாக்க பங்களிப்பை வழங்குகின்றது. கடற்படை பலமும், மிகவும் நெகிழ்வுப் போக்கும், நடமாடும் தன்மை போன்ற பண்புகளை வளர்ப்பதன் மூலம் போசணை அடைய வேண்டியது இந்த சுதந்திரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்காகும். இதனை கருத்திற் கொண்டு பார்க்கும்போது`AMAN` பயிற்சி என்பது இராஜதந்திரத்தை நடைமுறைப்படுத்த மிகவும் சிறப்பாக செயல்படும் சக்தி என்பதை சுட்டிக் காட்டுவது மிகவும் சரியானது. சரியான காலத்துக்கேற்ற பாகிஸ்தானின் வெளிநாட்டு கொள்கையின் நோக்கம் இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுவது கண்கூடாகத் தெரியும் இன்னொரு விடயமாகும்.

நாம் வாழும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் புவிசார் அரசியல், புவிசார் பொருளாதார மாற்றம்,பிராந்திய கடற் படைகளுக்கு சவால் மிகுந்ததாகும். எவ்வேளையிலும் பாதுகாப்பான சூழல் காணப்பட வேண்டியது பிராந்திய ரீதியில் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியிலும் கடற் சார் வர்த்தகத்துக்கு அவசியமாகும். அத்துடன் அதிகரித்து வரும் ஆயுத விற்பனை, ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல், கடற்கொள்ளைகள்,மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க கடல் பிராந்திய இராஜதந்திரத்தால் மாத்திரமே முடியும் என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போது கடல் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்று வரும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உலகளாவிய ரீதியில் பலம் வாய்ந்த நாடுகளால் கூட முடியாது போயுள்ளது. இவ்வாறான பின்னணியில் `AMAN` பயிற்சி மூலம் சமுத்திர பாதுகாப்பு மற்றும் அதிகாரம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் விசேடமாக சம்பிரதாயம் அல்லாத விடயங்கள் தொடர்பாக தனித்து செயற்பட முடியாத நிலைமையில் இணைந்து செயல்பட வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் இராஜதந்திர பாடத்தை எமக்கு நன்றாக கற்றுத் தருகின்றன.

அதேபோல் பிராந்திய ரீதியாக சமாதானம் மற்றும் உறுதித்தன்மையை பேணுவதற்காக பாகிஸ்தான் பங்கேற்பதில், செயல்படுவதில் காணப்படும் நேர்மறை தன்மை சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது என்பதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

# புதிய தோற்றத்தில் கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை பசுமைக் கட்டடம்

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை நடவடிக்கைகள் 1930களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அதே முகவரியில், அண்மையில் மீள ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வரலாற்றின் பக்கங்கள் மீளப் புரட்டப்பட்டன.

சூழலுக்கு நேசமான வங்கிச் செயற்பாடுகளுக்காக முழுதாக மீள நிர்மாணிக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, ஏற்பாடுகளைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்துக்கான இப்புதிய கிளைக் கட்டடம், இல. 474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளதோடு, வங்கிச் சேவைகளில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்திய மெர்கென்டைல் வங்கியின் மூன்று கிளைகளை 1973ஆம் ஆண்டு கொமர்ஷல் வங்கி கொள்வனவு செய்த போது, இந்த முகவரியில் அமைந்திருந்த கட்டடம், கொமர்ஷல் வங்கியின் சொத்தாகியதோடு, பல தலைமுறைகளாக வாடிக்கையாளர்களுக்குச் சேவையளித்துள்ளது. இக்கிளையானது 1973ஆம் ஆண்டிலிருந்து எவ்விதத் தடங்கல்களுமின்றிச் சேவையில் ஈடுபட்டு வருகிறது. கொமர்ஷல் வங்கி தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் 12 கிளைகளையும் வடக்குப் பிராந்தியத்தில் 18 கிளைகளையும் செயற்படுத்துகிறது.

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கான புதியதாக அமைக்கப்பட்ட இந்த ஐந்து மாடிக் கட்டடம் மார்ச் 15, 2021 அன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இக்கிளையில் தானியக்க வங்கி நிலையமொன்று, பண வைப்பு மற்றும் மீளப் பெறும் இயந்திரங்கள் ஐந்து, காசோலைச்



கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். ரெங்கநாதன் (இடது), பிரதம செயற்பாட்டு அதிகாரி சனத் மனதுங்க ஆகியோர் சகிதம், வங்கியின் தலைவர் நீதியரசர் கே.ஸ்ரீபவன், வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கான புதிய கட்டடத்தை வங்கியின் கூட்டாண்மை, சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கிறார்.

சேகரிப்பு வசதியொன்று, காசோலை வைப்பு இயந்திரமொன்று ஆகியவற்றுடன் அமைந்துள்ளதோடு, ஆண்டின் 365 நாட்களிலும் எந்நேரமும் பண வைப்பு மற்றும் மீளப்பெறல் வசதிகளும் உள்ளன.

இக்கட்டடத்தின் கூரையில் சூரியக்கலங்கள் பொருத்தப்படவுள்ளதோடு, கட்டடச் செயற்பாட்டுக்குத் தேவையான பெரும்பான்மையான மின்சாரத்தை அச்சூரியக் கலங்களே உற்பத்தி செய்யும். அத்தோடு, மழைநீர்ச் சேகரிப்பு வசதி, கழிவுநீரைத் தோட்டத்துக்குப் பாய்ச்சக் கூடிய நீராக மாற்றக் கூடிய கட்டடத்துக்கென அமைக்கப்பட்ட கழிவுநீர்ச் சுத்திகரிப்பு வசதி ஆகியவற்றையும் இக்கட்டடம் கொண்டுள்ளதோடு, சக்தி நுகர்வை மேலும் குறைப்பதற்காகப் பகல் நேரத்தில் இயற்கை ஒளியை உச்ச அளவில் பயன்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம், சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வளிச் சீராக்கிக் கட்டமைப்புகளையும் கொண்டுள்ளதோடு, குளியலறைகளில் காணப்படும் அனைத்துக் கருவிகளும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. இவை அனைத்தும் கிளையின் பசுமை இயல்புக்கு மெருகூட்டுகின்றன. மேலதிகமாக, இக்கட்டட நிர்மாணத்தின் போது பல பசுமை, மீள்பயன்படுத்தப்படக் கூடிய பொருட்கள் பயன்படுத்தப்பட்டன எனவும் வங்கி தெரிவித்தது.

புதிய கட்டடத்தை கொமர்ஷல் வங்கியின் தலைவர் நீதியரசர் கே. ஸ்ரீபவன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்ததோடு, இந்நிகழ்வில் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். ரெங்கநாதன், பிரதம செயற்பாட்டு அதிகாரி சனத் மனதுங்க, கூட்டாண்மை முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கொமர்ஷல் வங்கி அதன் திருகோணமலைக் கிளையை, வங்கியால் உரிமைப்படுத்தப்பட்ட காணியில் அதற்கென வடிவமைக்கப்பட்ட, சூழலுக்கு நேசமான கட்டடமொன்றுக்கு அண்மையில் இடமாற்றியிருந்தது.

உலகின் முதல் 1,000 வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும் அப்பட்டியலில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும் 887 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக் கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியான்மாரின் நேய்பியுடோவில் நுண்நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மைப் பங்குரிமையோடு வங்கி கொண்டுள்ளது.

# இஸ்லாமிய கலை, கலாசார அபிவிருத்தி வேலைத் திட்டம்

**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து இவ்வருடம் இஸ்லாமிய கலை, கலாசார அபிவிருத்தி திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.**

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் முஸ்லிம்களின் பாரம்பரிய கலையான பொல்லடி, பக்கீர் பைத், கசீதா, குரவை, மாப்பிள்ளை பைத், வாள் வீச்சு என பல வகையான கலைகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றில் முக்கிய கலை அம்சமாகக் காணப்படுகின்ற பொல்லடி, பக்கீர்பைத், கசீதா போன்ற மூன்று துறைகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கிழக்கு மாகாணத்தை மையமாக வைத்து செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றில் பொல்லடிக்கான அண்ணாவிமார், பக்கீர்பைத் பாவாமார், கசீதாவிற்கான மௌலவிமார் போன்றோரை இனங்கண்டு அவர்களுடைய அனுபவங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்ளும் நிகழ்வும், மூன்று துறைகளிலும் அனுபவம் வாய்ந்த எழுத்தாளர்களைக் கொண்டு மூன்று நூல்களை வெளியிடும் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

அதுமாத்திரமன்றி, பாடசாலை மற்றும் திறந்த மட்டங்களில் பொல்லடிக் குழுக்கள், கசீதாக் குழுக்களை அமைக்கும் நோக்கில் இத்துறைகளில் ஆர்வமுள்ளவர்களை இணைத்து பயிற்சிப்பட்டறைகளை நடத்தி அதற்கான குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றோடு இக்கலைகள் சம்பந்தமான ஆவணம் ஒன்றும் ஒலி,ஒளி வடிவில் வெளியிடப்படவுள்ளது.

2021 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தை மையமாக வைத்து நடத்தப்படவுள்ள வேலைத் திட்டத்தின் இணைப்பாளராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்டத்திற்கான மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு இரு திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளார்கள்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பள்ளிவாசல்களை, மத்ரசாக்களை பரிபாலிப்பதும், ஹஜ், உம்றா, மீலாத் விழாக்களை நடத்துவதுமான ஒரு நிறுவனமாகவே மக்கள் மத்தியில் எண்ணக்கருவை ஏற்படுத்தியிருந்தது. இருந்த போதிலும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளராக கடமையாற்றி வரும் ஏ.பி.எம்.அஷ்ரப், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிகள் பரந்துபட்டவை. வெறுமென குறுகிய வட்டத்தினுள் இல்லாமல் பல்வேறு பணிகளை ஆற்ற முடியும் என்பதனை அண்மைக் காலமாக மக்களுக்கு தெரியப்படுத்தி வருகிறார்.

தலைநகரில் உள்ள அலுவலகத்தில் மாத்திரம் அமர்ந்து கடமைகளை மேற்கொள்ளாது நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று முஸ்லிம் மக்களின் பல்வேறுபட்ட விடயங்களில் கலந்து கொள்வதுடன், அவர்களுடைய திணைக்களம் சார்ந்த பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கி வருவது முஸ்லிம் மக்களிடத்தில் பெருவரவேற்பை பெற்றுள்ளது.

இவ்வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது, சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகங்களில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், கலைஞர்கள், திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு



இங்கு கலந்து கொண்ட பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் கூறும் போது, கிழக்கு மாகாணம்தான் முஸ்லிம் கலைஞர்களை அதிகமாகக் கொண்ட ஒரு தளம். இந்த மாகாணத்தில்தான் இவ்வகையான வேலைத் திட்டங்களை செயற்படுத்தலாம். இதனடிப்படையில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினரோடும், அதன் பணிப்பாளரோடும் பேசி அதற்கான நிதியையும் எமது திணைக்ளத்திலிருந்து கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளேன். இதன் மூலம் பொல்லடி, பக்கீர் பைத், கசீதா போன்ற 3 கலைகளை இந்த வருடம் எடுத்திருக்கிறோம். இன்னும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியை சேர்த்துக் கொள்ளலாம். மாகாண மட்டத்தில் முஸ்லிம் கலைகளை மட்டும் மையப்படுத்திய ஒரு கலைவிழாவை நடத்தலாம். இதனை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நேரடியாக மேற்கொள்ளும். அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடுகளையும் செய்து வைத்த பின்னர் கொவிட்19 நிலைமை சீரானதும் அந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம். இரண்டு திணைக்களங்களும் இணைந்து தற்போது மேற்கொள்ள திட்டமிட்டுள்ள கலாசார வேலைத் திட்டத்தில் வெளியிடப்படவுள்ள நூல் ஒரு வரலாற்று நூலாக மாத்திரமல்லாமல் ஒரு கைநூலாக எழுதப்பட வேண்டும். இதற்கு கலைஞர்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமானதாகும். எழுத்தாளர்களோடு கலைஞர்களும் இணைந்தே இவ்வேலைத் திட்டங்களை மேற்கொள்வது மிக முக்கியமானதாகும்" என்றார்.

இதன் போது கலைஞர்களினால் எழுதப்பட்ட நூல்களும் பணிப்பாளருக்கு வழங்கி வைக்கப்பட்டன.





**எம்.எல்.சரிப்டீன்...**
*(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)*

# புர்கா, மத்ரஸாக்களை தடை செய்வது சட்டவிரோதமானது

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்துள்ள சில அவதானங்களும் பரிந்துரைகளும் இலங்கை அரசியலமைப்பின் 10 வது பிரிவின் கீழ் ஒவ்வொரு தனிநபருக்கும் தெளிவாக வழங்கப்பட்டுள்ள முழுமையான பாதுகாப்பை இல்லாமலாக்குகின்றன. ஆணைக்குழுவின் அறிக்கையை பகுதிவாரியாக நோக்கும்போது சிறந்ததாக இருப்பினும் கூட, சில தற்கொலை குண்டுதாரிகள் செய்த கொடூரமான குற்றங்கள் காரணமாக இஸ்லாத்தின் மீது பாதிப்பை உண்டாக்குகின்றது.**

அரசியலமைப்பின் பிரிவு 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுதந்திரத்திற்கான உரிமை 9 வது பிரிவின் கீழ் 'அனைத்து மதங்களுக்கும் உத்தரவாதம்' வழங்குகிறது. 10 வது பிரிவின் கீழ் உத்தரவாதம் தரப்பட்டுள்ள சுதந்திரத்தை யாரும் எந்த நிலையிலும் மீற முடியாது. ஜனாதிபதி ஆணைக்குழு கூட மேற்படி 10வது பிரிவில் கூறப்பட்டுள்ள உத்தரவாதத்தை மீறும் வகையில் அழைப்பு விடுக்கவோ அல்லது ஊக்குவிக்கவோ முடியாது.

அரசியலமைப்பு ரீதியாக நாட்டு மக்களின் மத சுதந்திரம் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட இந்த பின்னணியில், பெண்களுக்குரிய புர்கா அணியும் உரிமையை தடை செய்யும் பத்திரத்தில் அமைச்சர் ஒருவர் கடந்த சனிக்கிழமை கையெழுத்திட்டுள்ளதாகவும், மதரஸாக்களும் தடை செய்யப்படும் என்ற கூற்றும் அரசியலமைப்பின் 10வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள சுதந்திரங்களை மீறுகின்றன.

இந்த நடவடிக்கை அரசியலமைப்பு சட்டங்களை மீறுவதற்கு அப்பால், அது சட்டவிரோதமானது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 17வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 'பெண்களின் மரியாதை மற்றும் நற்பெயருக்கு' எதிரான வரம்பு மீறலாகும். (ஐ.சி.சி.பி.ஆர்) இவ்வுடன்படிக்கையில் இலங்கை அரசு ஒருதரப்பாக கையொப்பமிட்டுள்ளது

எமது அரசியலமைப்பின் 9 மற்றும் 10 வது பிரிவுகளில் யாப்பின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்டுள்ள விடயங்களை தேசிய பாதுகாப்பு அல்லது பிற அடிப்படைகளை வைத்து ஏனைய அடிப்படை உரிமைகளைப் போல் எத்தகைய கட்டுப்படுத்தலும் செய்ய உரிமை கிடையாது. அரசியலமைப்பை நிலைநிறுத்த எடுக்கப்பட்ட உறுதிமொழியை யாரும் மீற முடியாது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இங்கிலாந்து பிரதிநிதி பெண்கள் முகமூடி அணிவதை தடை செய்வது குறித்து தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருந்தார். இலங்கையில் 'தனிமைப்பட்டுள்ள முஸ்லீம் பெண்களுக்கு அது அவமானமாக அமையும்' என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு குறித்த கரிசனைகள் மிக முக்கியமானவை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் அது இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கைகளாக அமைந்து விடக் கூடாது.

ஜனாதிபதி சட்டத்தரணி **எம்.எம். ஸுஹைர்**
*(முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்)*
**லதீப் பாறூக்**
*(மூத்த ஊடகவியலாளர் மற்றும் எழுத்தாளர்)*
**மாஸ் எல். யூஸுப்**
*(சட்டத்தரணி, பத்தி எழுத்தாளர்)*
**மன்ஸூர் தஹ்லான்**
*(சமய அறிஞர்)*

# கல்வி, ஊடக துறைகளில் பணியாற்றும் அப்துல் சமட் 81 ஆவது அகவையில்

**இலத்திரனியல் ஊடகங்களினூடாகவும், பத்திரிகைகள், மொழி பெயர்ப்பு மற்றும் கல்வியல் செயற்பாட்டிலும் நீண்ட கால ஈடுபாடு கொண்டிருந்த அப்துல் சமட் அவர்கள் தனது 81 ஆவது அகவையில் காலடி வைத்துள்ளார்.**

சாய்ந்தமருதில் வைத்தியராக திகழ்ந்த மீரா சாஹிபு முகம்மது ஹுஸைன் மற்றும் மீரா லெப்பை கதீஜா உம்மா தம்பதிகளுக்கு புதல்வனாக அப்துல் சமட் 1940.01.13 இல் பிறந்தார். தனது இரண்டு வயதில் தாயை இழந்த இவர், தந்தையின் தாயாரின் அரவணைப்பிலும், தந்தையின் ஆதரவிலும் வளர்ந்தார்.

அப்போதைய நிந்தவூர் யூனியர் ஆங்கிலப் பாடசாலையில் (தற்போதைய அல் அஸ்ரக்) தரம் 01 முதல் 05 வரையான ஆரம்பக் கல்வியைக் கற்றார். தரம் 06 முதல் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். இங்கு பிற்காலத்தில் மருதமுனையின் அடையாளங்களாக காணப்பட்ட மருதூர்க் கனி, மருதூர் கொத்தன், யூ.எல்.ஏ. மஜீட் ஆகியோருடன் சக மாணவனானார்.

இங்கு தங்களுக்கு கற்பித்த புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் ஆசிரியரின் கற்பித்தல் போக்கில் ஈர்க்கப்பட்டு அவரது விருப்பத்துக்குரிய மாணவனானார். புலவர்மணி ஆ.மு சரிபுத்தீனுக்கு ஆசிரியர் இடமாற்றம் வழங்கப்பட்ட போது, இவர் தரம் 07 இல் இப்பாடசாலையிலிருந்து விலகினார்.

புலவர்மணி ஆ.மு சரிபுத்தீன் அப்போதைய கல்முனை அரசினர் ஆண்கள் கலவன் பாடசாலைக்கு (தற்போதைய அல் அஸ்ஹர்) இடம் மாற்றம் பெற்ற போது அப்துல் சமட் அவர்களும் அப்பாடசாலையில் சேர்ந்து தரம் 08 முதல் எஸ்.எஸ்.சி வரையான கல்வியை தொடர்ந்தார்.

எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தியெய்திய இவர், 1961 இல் ஆசிரியராக நியமனம் பெற்று, மாவடிப்பள்ளி முஸ்லிம் வித்தியாலத்தில் ஆசிரியர் கடமையை ஆரம்பித்து ஒரு வருடம் கடமையாற்றினார். பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1962 முதல் 1964 வரையில் பயிற்சி பெற்று சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ், கல்முனை சாஹிறா கல்லூரி, அநுராதபுரம் விவேகானந்தா கல்லூரிகளில் பயிற்றப்பட்ட ஆசிரியராக கடமையாற்றினார்.





தொடர்ந்து அநுராதபுரம், மிகிந்தலவிலுள்ள மிகிந்து சிங்கள மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்தை கற்பித்தார். அதன் பின்னா் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றினார்.

ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டருந்த இக்காலப் பகுதியில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய இவருக்கு பேராதனை பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. பட்டப்படிப்பை தொடர கண்டி உடதும்பர ஜாமிஉல் அஸ்ஹர் மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டு முழு நேரமும் பல்கலைக்கழத்தில் கற்க முடியாத காரணத்தினால் வெளிவாரியாக பல்கலைக்கழகப் படிப்பை தொடர்ந்தார்.

பல்கலைக்கழத்தில் முதல் வருடம் பொருளியல் பாடத்தில் இவர் பெற்ற 'ஏ' சித்தி காரணமாக அப்பாடத்தை விசேடமாக ஆங்கிலத்தில் கற்றார். பி.கொம் கற்கையை நிறைவு செய்தார்.

பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வரையில் பாடசாலை ஆசிரியராக சுமார் 12 வருடங்கள் தொழில் புரிந்து வந்த இவர், பின்னர் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் வணிக விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். சில வருடங்கள் இங்கு கடமையாற்றிய பின்னர் நாவலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தொலைக் கல்வி நிறுவனத்திற்கு (தற்போதைய திறந்த பல்கலைக்கழகம்) தமிழ்மொழிப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். பின்னர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 1977 முதல் 1980 வரையில் பணிபுரிந்தார்.

கல்வி பயிற்சிக்காக வெளிநாடுகள் பலவற்றுக்கு சென்றுள்ள இவர், 1980 களில் நைஜீரியா, கம்பியா ஆகிய நாடுகளில் விரிவுரையாளராக 1983 வரையில் கடமை புரிந்தார். 1983 இல் நாடு திரும்பி சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், அதிபராகவும் 1990 வரையில் கடமையாற்றினார்.

1990 முதல் 1991 வரையில் தெஹிவளை தொழில்நுட்பக் கல்லூரியில் அதிபராகவும், மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் உப அதிபராகவும் கடமையாற்றினார். முன்னாள் உயர் கல்வியமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீட் ஆலோசனையின் பேரில் கண்டி கொழும்பு வாழ் மாணவர்களின் நன்மை கருதி தமிழ் மொழிமூல மாணவர்களுக்கான தமிழ்ப் பிரிவொன்று அமைவதில் முன்னின்று உழைத்ததோடு அப்பிரிவில் விரிவுரையாளராக கற்பித்து 1992 இல் ஓய்வு பெற்றார்.

அப்துல் சமட் (B.Com(cey), MBA, FBIM, Dip in English, Dip in commerce, Trained teacher) உள்ளிட்ட கல்வித் தகமைகளைப் பெற்றுள்ளார். ஓய்வு பெற்ற பின்னர் நழீம் ஹாஜியாரின் வேண்டுகோளுக்கமைய இக்றா தொழில்நுட்பக் கல்லூரியின் ஸ்தாபக அதிபராக 1992 முதல் 1995 வரை பணியாற்றினார்.

எம்.எச்.எம்.அஷ்ரஃப் அமைச்சராக பதவி வகித்த காலத்தினுள் அமைச்சின் ஆலோசகராக இருந்ததோடு மட்டுமல்லாது, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தொழில் பயிற்சி அதிகார சபையின் RVTC, DVTC பயிற்சி மையங்கள் அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி அவற்றை நிறுவுவதற்கு உழைத்தார்.

அஷ்ரஃப் மறைவிற்குப் பின்னர் அமைச்சராவிருந்த பேரியல் அஷ்ரஃப்பின் விஷேட ஆலோசகராகவும் பணியாற்றினார். ஊடகங்களில் அதிகம் கட்டுரைகளை எழுதியுள்ளார். அப்துல் சமத் இப்போதும் ஓய்வில்லாமல் செயற்பட்டு வருகின்ற ஒருவர். அண்மைக் காலமாக, மொழி பெயர்ப்பு இலக்கியத்தின் மூலம் படைப்பாளர்களை உலகின் பல பாகங்களுக்கும் அறிமுகம் செய்து வருகின்றார்.

**ஏ.எம்.பறக்கத்துள்ளாஹ்...**
*(கல்முனை)*

## அயோத்தி ஸ்ரீ இராமர்...

கர்ப்பக்கிரகத்தில் பூஜிக்கப்பட்ட புராதன நினைவுச்சின்னம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளவத்தை அருள்மிகு மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே முன்னிலையில் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிடம் இது கையளிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா சீதையம்மன் ஆலய நிர்வாக உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் கோபியோ அமைப்பின் ஸ்தாபக தலைவருமான பி.பி. தேவராஜ் ஆகியோர் இணைந்து இந்த புனித சின்னத்தை கையளித்தனர்.வர்த்தகப் பிரமுகர் பி. முத்துகிருஷ்ணன், மயூராபதி அம்மன் ஆலய அறக்காவலர் சபைத் தலைவர் பெரியசாமி சுந்தரலிங்கம் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## இன, மத அடிப்படையிலான...

இனம் மற்றும் மதத்தின் அடிப்படையின் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளின் பெயர்களை மாற்றுவது தொடர்பிலும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாகவும் கூறினார்.

அவ்வாறான அரசியல் கட்சிகளின் பெயர்களை மாற்றுவதற்கு, கால அவகாசம் வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளிட்ட ஏனைய ஆணைக்குழுக்கள், தேசிய மற்றும் மதங்களை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகளின் பதிவு தொடர்பில் முன்வைத்துள்ள பரிந்துரைகளை ஆராய்ந்தே இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## முடிவுக்கு வந்தது...

நேற்று முற்பகல் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகேயுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கிணங்க வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதாக ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கத்தின் தலைவர் ஜானக பெர்னாண்டோ தெரிவித்தார்.

ரயில்வே சாரதிகள் மற்றும் நடத்துனர்களிடம் ரயில் போக்குவரத்தின் போது ஏற்படும் தவறுகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்படுகின்றமை,

ரயில்வே ஊழியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான பரிசோதனைகளை விரைவாக நிறைவு செய்தல், வெற்றிடமாக உள்ள ரயில்வே பொது முகாமையாளர் பதவிக்கு தகுதியான ஒருவரை நியமிக்காமை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே திடீர் வேலை நிறுத்த போராட்டத்தை மேற்கொண்டதாக அந்த தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் போக்குவரத்து அமைச்சுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து நேற்று மதியம் முதல் வேலை நிறுத்த போராட்டம் கை விடப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கத்தின் தலைவர் ஜானக பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் தொழிற்சங்க நடவடிக்கைகளை ரயில்வே தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த போதிலும், பயணிகளின் சிரமத்தை கருத்திற் கொண்டு, நேற்று முன்தினம் மாலை அலுவலக ரயில்களை மாத்திரம் இயக்கியிருந்தனர். எனினும் நேற்று அதிகாலை ரயில்கள் இயங்காத காரணத்தினால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர். நேற்று அலுவலக ரயில்கள் மட்டும் இயங்கியபோதும் அந்த ரயில்களில் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு ஏறியதுடன் மிதிபலகைகள் மற்றும் கூரைகளிலும் ஏறி பயணித்ததை காணக்கூடியதாக இருந்தது. அனைத்து பயணிகளும் முகக்கவசம் அணிந்திருந்த போதும் சமூக இடைவெளியை எவரும் கடைப்பிடிக்க முடியாத நிலையே காணப்பட்டது. ரயில் நிலையங்களில் பயணிகள் நிறைந்து காணப்பட்டபோதும் அனைவருக்கும் ரயில்களில் ஏறிப்பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுக் காலை அமைச்சர் காமினி லொக்குகேக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையிலான பேச்சு நடைபெற்றது. இதனையடுத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடுவதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

## தங்குமிட விடுதியில்...

மீட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கெக்கிராவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று அதிகாலை அந்த விடுதியை சுற்றிவளைத்த பொலிஸார் 386 கிலோ கேரள கஞ்சாவை மீட்டுள்ளதுடன், 09 சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

சுமார் 200 பொதிகளில் பொதியிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கேரள கஞ்சாவையே பொலிஸார் இவ்வாறு கைப்பற்றியுள்ளனர். கஞ்சாவுடன் ரூ.08 இலட்சம் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை 07 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்ற அனுமதியை பெற்றுக் கொள்ளநடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, கேரள கஞ்சா பொதிகள், தணமல்வில பிரதேசத்திலிருந்து அநுராதபுரத்திற்கு கொண்டுவரப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இச்சுற்றிவளைப்பில், தணமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த செல்வந்தர்களில் ஒருவர், அவரது உதவியாளர்கள் இருவரும் விடுதியின் உரிமையாளர் ஒருவர் உட்பட 09 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சாவை பொதியிடுவதற்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரமொன்றும், இலத்திரனியல் தராசொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, போதையை அதிகரிப்பதற்காக பயன்படுத்திய ஒரு வகை இராசாயனத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

## அசாத் சாலியை...

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாக அசாத்சாலி பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அவரை 18 மாதங்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த முடியும். அதற்கு முன்னர் விசாரணைகளை நிறைவடைந்தால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் மற்றும் அதன் பின்னரான செயற்பாடுகள் தொடர்பில் அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

## சிறிதரன் எம்.பியிடம்...

தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் கிளிநொச்சியில் நேற்று (18) மன்னார் பொலிஸ் நிலையத்தினரால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் 03 ஆம் திகதி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி பொத்துவிலிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பொலிகண்டியில் நிறைவு பெற்றது.

மன்னார் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. நேற்று பகல் 12.30 மணிக்கு அவரது அலுவலகத்துக்கு சென்ற மன்னார் பொலிஸ் நிலையத்தினர் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

## தடுப்பூசி பெற்று...

விடுதியில் தங்க வைக்கப் பட வேண்டும் என அந்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழு நாட்களின் பின்னர் இரண்டாவது பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் போது அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படாவிட்டால் அவர் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்படுவார். அதேவேளை தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாமல் இலங்கைக்கு வருகை தருகின்றவர்கள் இலங்கையில் 14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

அத்தகையோருக்கு முதலாம் நாள் பதினோராம் நாள் 14ம் நாள் என மூன்று பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தொற்று உறுதி செய்யப்படாவிட்டால் அவர் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுவார். அதேவேளை சர்வதேச சுற்றுலாப் பயணி ஒருவர் மூன்று நாட்கள் மாத்திரமே இலங்கையில் தங்கியிருப்பாரானால் அவர் தேவை ஏற்படின் மாத்திரம் வெளியேறுவதற்கு முன்பதாக பிசிஆர் பரிசோதனை செய்துகொள்ளலாம் என்றும் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ)

## தனியார் துறையினருக்கு...

கொடுக்கும் எதிர்பார்ப்புடனேயே மேற்படி தகவல்கள் சேகரிக்கப்படுவதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக தொழில் இழந்தவர்கள்,தொழில்களுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளவர்கள் மற்றும் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளான அவர்களுக்கு எதிர்காலத்தில் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொழில் இழந்தவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொழில் புரிந்த நிறுவனத்தின் பெயர், முகவரி, தொழிலில் இருந்து நீக்கப்பட்ட திகதி, அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த காலம், அடிப்படைச் சம்பளம் உள்ளிட்ட தகவல்களைப் பெற்றுக் கொடுக்குமாறு தொழில் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். தொழில் ஆணையாளர், (தொழிலுறவு பிரிவு), 11 வது மாடி கொழும்பு 5 என்ற முகவரிக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பவர்கள் அதனை அனுப்புமாறு தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்ரகீர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார். எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பதாக மேற்படி தகவல்களை வழங்குமாறு தெரிவித்துள்ள அவர், மேலதிக விபரங்களுக்கு 0112368502 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் மஹிந்த..

விழாவிலும் பங்களாதேஷ் சுதந்திர பொன்விழா நிகழ்வுகளிலும் விசேட அதிதியாக கலந்து கொண்டு விசேட உரை நிகழ்த்தவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, அந்நாட்டின் ஜனாதிபதி முகமது அப்துல் ஹமீத், வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் அந்நாட்டின் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

அத்துடன் விவசாயம், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் சம்பந்தமாக அந்நாட்டின் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விஷேட பேச்சுவார்த்தைகளிலும் பிரதமர் ஈடுபடவுள்ளார்.

அதற்கிணங்க இருநாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விவசாயம்,தொழில், கல்வி, சுகாதாரம் மற்றும் கலாசார ஒத்துழைப்பு ஆகிய துறைகள் தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதன்போது கைச்சாத்திடப்பட்டவுள்ளன.

அந்நாட்டின் தேசிய தியாகிகள் நினைவுச் சின்னத்தை பார்வையிடவுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் சுதந்திர போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தவுமுள்ளார். அத்துடன் பங்கபந்து நினைவு அருங்காட்சியகத்தையும் பிரதமர் பார்வையிடவுள்ளார். 1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் ஒரு தனி குடியரசு நாடாக உருவாக்கப்பட்டதுடன் அதனையடுத்து அதன் மறு ஆண்டே இலங்கையுடனான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. இரு நாடுகளுக்குமிடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 50 ஆண்டு நிறைவு அடுத்த வருடம் நினைவு கூறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக முறையான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பிரதமரின் பங்களாதேஷ் விஜயம் அமையவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(ஸ)

## தனியார் துறைக்கும்...

கொரோனா நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதைத் தடுக்க தடுப்பூசி திட்டத்தில் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் தற்போது தேவையான தடுப்பூசி அளவை வழங்க அரசாங்கத்திடம் இல்லை என்றால், தனியார் துறையினர் தடுப்பூசியை வாங்க அனுமதிக்க வேண்டுமென கூறினார்.

சுகாதாரத் துறையிலிருந்து தடுப்பூசிகளை பெறுவதன் அடிப்படையில், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு, இலங்கைக்கு தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கு அனுமதி வழங்குவதில் எந்த பிரச்சினையும் இல்லையென்று அவர் கூறினார்.

## பெற்ற குழந்தையை...

கைது செய்யப்பட்டுள்ளார். பம்பைமடுவில் வசிக்கும் 04 பிள்ளைகளின் 36 வயதான தாயொருவர் கடந்த திங்கட்கிழமை குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்.

எனினும் பிரசவித்த குழந்தையை தான் வசிக்கும் காணிக்குள்ளேயே குழிதோண்டி புதைத்துள்ளார்.

கடந்த காலத்தில் அவரின் உடல் மாற்றத்தை அவதானித்த சிலர் கேள்வி எழுப்பியபோது, தனது வயிற்றில் கட்டி இருப்பதாக தெரிவித்து வந்த தாய் தொடர்பில் சந்தேகம் கொண்ட ஒருவர் கிராம சேவகருக்கு வழங்கிய தகவலில் அடிப்படையில் பொலிஸார் மூலம் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டது.

இதன்போதே தாய் தான் பெற்ற குழந்தையை புதைத்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் குழந்தையை தான் பிரசவிக்கவில்லையென தாய் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அவரை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்து பரிசோதித்தபோது அவரே குழந்தையை பிரசவித்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சந்தேகத்தின்பேரில் தாயை கைது செய்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தாய் கடந்த சில வருடங்களாக கணவனை பிரிந்து தனியாக வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான...

பரிகாரம் காணவேண்டுமென்று விரும்புகின்றேன்.

இவ்விடயத்தில் தீர்வொன்று காணப்பட வேண்டும்.

அது தீராத பிரச்சினைகளாகத் தொடர்வதால் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நன்மையுமில்லை.

இந்தப்பிரச்சினைகளை வைத்து பிழைப்பு நடத்துகின்றவர்களும், பதாகைகளை பார்வைக்கு வைத்து பணம் சம்பாதிப்பவர்களுமே இப்பிரச்சினை தீராப்பிரச்சினையாக தொடர வேண்டுமென விரும்புகிறார்கள்.

ஆனால், நாம் உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளுக்கும், காயங்களுக்கும் ஆறுதலளிக்கும் பரிகாரங்களைக் காண்பதனூடாக அவர்களை நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கி முன்நகர்த்தவே விரும்புகின்றேன்.

அதனடிப்படையில் பதாகைகளை அல்ல பாதிக்கப்பட்ட எம் உறவுகளுக்கே நான் உரிமையுடன் அழைப்பு விடுத்திருக்கிறேன்.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்துரையாடி பரிகாரத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் முயற்சித்து வருகின்றேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நீதிமன்ற கட்டமைப்பின்... (03ஆம் பக்கத் தொடர்)

கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

கல்கிஸ்சை நீதிமன்றத் தொகுதியில் நிலவும் தேவைகள் தொடர்பில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நீதியமைச்சர் அலி சப்ரி அங்கு நீதிபதிகள் மற்றும் சட்டத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நான்கு வருடங்களில் நீதிமன்ற கட்டமைப்பு டிஜிட்டல் முறைப்படுத்தப்படும் என்றும் அதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதேவேளை எதிர்காலத்தில் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றங்கள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கான செயற்திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பிலும் அங்கு அவர் கலந்துரையாடியுள்ளார். (ஸ)

## ரூபாவின் பெறுமதி... (03ஆம் பக்கத் தொடர்)

இதனால் இலங்கையால் கடன்களை திருப்பி செலுத்த முடியாத நிலையேற்படும்.

வெளிநாட்டு நாணய கையிருப்பு அற்றுப்போகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் உள்நாட்டு சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்றதெனவும் அவர் குற்றம் சாட்டினார்.

## கெசல்வத்த தினுக... (03ஆம் பக்கத் தொடர்)

அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நேற்றுக் காலை ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக இலங்கைக்கு ராஜபக்ஷ கசுன் மதுரங்க என்ற பெயரில் சடலமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்க விமானநிலைய பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கெசல்வத்தையை வதிவிடமாக கொண்டுள்ள ரேணுகாக என்பவரிடம் கையளிப்பதற்காக மலர்ச்சாலை ஒன்றினூடாக இலங்கைக்கு சடலம் கொண்டுவரப்பட்டுள்ளது. ரேணுகா என்பவர் தமது மகனின் சடலத்தை கொண்டுவருவதாக கூறியே இந்தச் சடத்தை கொண்டுவந்துள்ளார்.

எனினும், அவருக்கு இவ்வாறு மகனொருவர் இல்லையென்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக இவர் உயிரிழந்துள்ள நிலையிலேயே நாட்டுக்கு சடலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கையில் பல குற்றங்களுடன் தொடர்புடையவராக இருக்கும் கெசல்வத்த தினுக என்பவர் 2012ஆம் ஆண்டு நாட்டைவிட்டு தப்பி டுபாய் சென்றிருந்தார். இவர் அங்கு மாற்று பெயரில் இருந்துள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் கெசல்வத்த தினுகவின் பெயர் இன்டர்போல் தேடும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தற்போது நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள சடலமானது மாற்று பெயரில் இருந்த கெசல்வத்த தினுகவின் சடலமாக இருக்கக்கூடுமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். டுபாய் பொலிஸாரிடம் கடந்த காலத்தில் நாம் விசாரணைகளை மேற்கொண்டிருந்த போது ராஜபக்ஷ ஆராய்ச்சிகே திமுக மதுசான் என்ற பெயரில் டுபாயில் எவரும் இல்லையென்றும் ராஜபக்ஷ கசுன் மதுரங்க என்ற பெயரில் 35 வயதுடைய ஒருவர் இருப்பதாகவும் கூறியிருந்தனர்.

இவரின் சடலம் தற்போது சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளில் பிரகாரம் நீர்கொழும்பு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றின் அறிவுறுத்தல்களுக்கமைய உரிய சுகாதார நடைமுறைகளுடன் சடலம் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்தச் சடலம் கெசல்வத்த தினுகவின் சடலமா? என கண்டறிய கைரேகை மற்றும் டி.என்.ஏ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

## அர்ஜுனை நாடு...

விளக்கங்கள் சிங்கப்பூர் சட்ட மா அதிபரால் பரிசீலிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதென மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க நேற்று (18) கொழும்பு முதலாவது நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பிணை முறி மோசடி வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 08 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் முதலாவது பிரதிவாதியான முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைப்பது தொடர்பில் மூன்றாவது தடவையாகவும் சட்ட மாஅதிபர் சிங்கப்பூர் சட்ட மாஅதிபருக்கு அறிவித்துள்ளார்.

அதற்கான ஆவணங்களை மூன்றாவது தடவையாகவும் சிங்கப்பூர் சட்ட மாஅதிபருக்கு எமது சட்ட மாஅதிபர் அனுப்பியுள்ளதுடன் அதனை சிங்கப்பூர் சட்ட மாஅதிபர் கவனத்திற் கொண்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் முதலாவது நிரந்தர மூன்று நீதிபதிகள் கொண்ட நீதிபதிகள் குழு முன்னிலையில் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்ட மாஅதிபர் திணைக்களம் மேற்படி தகவலை நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

சம்பா ஜானகி ராஜரத்ன, தமித்தொடவத்த மற்றும் நாமல் பளல்லே ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்றைய தினம் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாலிந்த ரணசிங்க மேற்படி தகவல்களை முன்வைத்தார்.

2015 பெப்ரவரி 27ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிணை முறி விநியோகத்தின் போது 600 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்போது மலேசியாவில் தங்கியுள்ள மேற்படி வழக்கின் பத்தாவது பிரதிவாதியான பேர்ப்பச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் அஜாத் கார்டியா புஞ்சிஹேவாவை இலங்கைக்கு வரவழைப்பதற்கான பிடியாணையை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு சமர்ப்பித்துள்ளது என அவர் நேற்று நீதிபதிகள் குழாம் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்துடன் மேலுமொரு குற்றப்பத்திரம் இணைக்கப்பட்டு, திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் நாயகம் ஹரிபிரியா ஜயசுந்தர மன்றில் அறிவித்தார்.

இதனடிப்படையில், அர்ஜுன் மகேந்திரன் மற்றும் அஜாத் கார்டியா புஞ்சிஹேவா ஆகிய பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிப்பதற்காக, வழக்கு எதிர்வரும் மே மாதம் 05 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஸ)

## 'காஸ்' விலை...

கறி மற்றும் பழங்கள் போன்றே எரிவாயு நுகர்வோருக்கும் நிவாரணம் வழங்குவது தொடர்பில் பிரதமரினால் கவனம் செலுத்தப்பட்டது.

கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில் விநியோக வலையமைப்பு சீர்குலைதல், அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் விலையை அதிகரிக்க எரிவாயு நிறுவனங்கள் கோரியுள்ளமை என்பன தொடர்பிலும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தினார்.

இதன்போது மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி பிரிவின் அறிக்கையை முன்வைத்து, கொவிட்19 தொற்றுநோய்க்கு மத்தியில் உலகப் பொருளாதாரத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து வருவதாக சுட்டிக்காட்டினார். அத்துடன், இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால் வர்த்தக பற்றாக்குறை அதிகரிக்கக்கூடும் என்றும் மத்திய வங்கி பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய உள்ளூர் விவசாயத்தின் வளர்ச்சி மற்றும் உள்ளூர் வணிகங்களை வலுப்படுத்துதல் பொருட்களின் ஏற்றுமதியில் கவனம் செலுத்துவதன் மூலம் அந்நிய செலாவணியை சம்பாதிக்க வேண்டியது அவசியமென மத்திய வங்கி பிரதிநிதிகள் விளக்கினர்.

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட சுமார் 3,000 மெற்றிக் தொன் அரிசியை சதொச ஊடாக பொதுமக்களுக்கு விநியோகிக்க ஒரு திட்டத்தை வகுக்க முடியுமா? என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ வினவினார்.

நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவுக்கு அதற்கு ஒப்புதலளித்ததுடன், இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஜி.வி.ரவிப்ரியவுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான அரிசி பங்குகளை சந்தைக்கு விடுவித்தல் மற்றும் மேலும் 25,000 மெற்றிக் தொன் அரிசியை உள்ளூர் வியாபாரிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டில் அரிசி தட்டுப்பாடு இல்லையென தெரிவித்த பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, உள்ளூர் நுகர்வுக்கு போதுமான அரிசி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், புத்தாண்டு காலத்தில் காய்கறி விலை குறையும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த தெங்கு, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை ஊக்குவிப்பு மற்றும் அது சார்ந்த கைத்தொழில், உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வகைப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, எதிர்காலத்தில் சதொச ஊடாக தேங்காய்களை மலிவான விலையில் விற்பனை செய்வதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படும் என கூறினார்.

எரிவாயு விலையை அதிகரிப்பதற்கான அழுத்தம் குறித்து கருத்து தெரிவித்த பசில் ராஜபக்ஷ, கொவிட் 19 தொற்றுநோயுடன் உலக எரிவாயு விலை வீழ்ச்சியடைந்த காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் இலாபம் ஈட்டப்பட்டதாகவும், அக்காலத்தில் தனியார் துறை ஊழியர்களின் வேலைகளை பாதுகாக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு தற்போது உதவி வழங்குவது கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பந்துல குணவர்தன, விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான அஜித் நிவாட் கப்ரால், ஷஷீந்திர ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவண்ண, அருந்திக பெர்னாண்டோ, ஜானக வக்கும்புர, ஷெஹான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டப்ளியூ.டீ.லக்ஷ்மன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சுகாதார வழிகாட்டு... (03ஆம் பக்கத் தொடர்)

ஏப்ரல் புத்தாண்டு பண்டிகை காலங்களில் இயங்கும் கடை உரிமையாளர்கள் சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென்றும் அஜித் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

கடைகளுக்குள் நுழைவதற்கு முன்பு கைகளை கழுவுமாறும் அதேநேரம், வெப்பநிலையை கண்காணிப்பதுடன், சமூக இடைவெளியை பராமரிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பண்டிகையை பாதுகாப்பான முறையில் கொண்டாட விரும்பினால் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை கடைபிடிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். மக்கள் அவ்வாறு செய்யத் தவறினால், அவர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்படலாமென்றும் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

## அயல்நாட்டு செய்திகள்



# டெல்லி போராட்டத்தில் 112 நாட்களில் 300 விவசாயிகள் உயிரிழப்பு

மத்திய அரசின் விவசாய சட்டங்களுக்கு எதிரான போராட்டத்தில் 112 நாட்களில் 300 விவசாயிகள் உயிரிழந்துள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன. மத்திய அரசின் விவசாய சட்டங்களுக்கு எதிராகப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதிலும் தலைநகர் டெல்லியை முற்றுகையிட்டுள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் மூன்று மாதங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு நவம்பர் மாத இறுதியில் விவசாயிகள் தலைநகரில் தங்கள் போராட்டத்தை தொடங்கினர். கடந்த 112 நாட்களில் மட்டும் 300 விவசாயிகள் உயிரிழந்துள்ளதாக விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.





பெரும்பாலும் மாரடைப்பு, கடும் குளிர், வாகன விபத்து ஆகியவற்றாலேயே விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக டெல்லியில் கடும் குளிர் நிலவும் ஜனவரி மாதம் மட்டும் 108 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். விவசாயிகள் மிக மோசமான நிலையில் எல்லையில் வசித்து வருவதாகவும் அவர்களுக்கு முறையான கழிப்பிட வசதிகள் கூட கிடைப்பதில்லை என்றும் விவசாய சங்கங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன. இதனால் அவர்களுக்கு எளிதாக மோசமான நோய் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் அதேபோல விபத்துகளிலும் அதிகளவில் விவசாயிகள் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்தாண்டு மட்டும் சராசரியாக வாரத்தில் ஐந்து விவசாயிகள் என்று 261 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சன்யுகட் கிசான் மோர்ச்சா தெரிவித்துள்ளது. கடந்தாண்டு ஜூன் முதல் அக்டோபர் வரையிலான காலகட்டத்தில் 93 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதேநேரம் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் மட்டும் விவசாயிகள் தற்கொலை 96 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய அரசின் விவசாய சட்டங்களின் மீதான அதிருப்தியே விவசாயிகள் தற்கொலை அதிகரிக்கக் காரணம் என்று விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# அதிமுகவுக்குப் போடும் ஒவ்வொரு ஓட்டும் பாஜகவுக்குப் போடும் ஓட்டு:

### உதயநிதி ஸ்டாலின்

அதிமுகவுக்குப் போடும் ஒவ்வொரு ஓட்டும் பாஜகவுக்குப் போடும் ஓட்டு என்று திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், மாத்தூரில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்துப் பிரசாரத்தில் ஈடுபட்டார் உதயநிதி ஸ்டாலின்.

அப்போது அவர் பேசும்போது,

“கஜா உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசு உரிய நிவாரணம் அளிக்கவில்லை. ஆனால், ரூ.8,000 கோடிக்கு சொகுசு விமானங்களை வாங்கியுள்ளது.

நீட் தேர்வால் 14 மாணவர்கள் உயிரிழந்த நிலையில் தற்போது செவிலியர் படிப்புக்கும் நீட் கொண்டு வரப்பட்டுள்ளது.

நீங்கள் அதிமுகவுக்குப் போடும் ஒவ்வொரு ஓட்டும் பாஜகவுக்குப் போடும் ஓட்டு. அதிமுகவுக்குப் போடும் ஓட்டு மோடிக்குப் போடும் ஓட்டு. அதிமுகவை வெற்றி பெற வைத்தீர்கள் என்றால் ஒன்று கூவத்தூர் சென்றுவிடுவார்கள் அல்லது பாஜகவுக்குச் சென்றுவிடுவார்கள்” என்று உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

திமுக, காங்கிரஸ் வேட்பாளர்களுக்காகத் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் உதயநிதி ஸ்டாலின், இந்தத் தேர்தலில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடுகிறார்.

# 102 நாட்களுக்குப் பின் ஒருநாள் கொரோனா பாதிப்பு 35,000 ஆக அதிகரிப்பு

நாட்டில் கொரோனா பேரிடருக்கான இரண்டாவது அலை உருவாகும் சாத்தியக் கூறுகள் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் நிலையில், மிகவும் அதிர்ச்சி தரும் வகையில், 102 நாள்களுக்குப் பிறகு நாட்டில் புதிதாக 35,871 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், நாட்டில் ஒட்டுமொத்தமாக கொரோனா பாதித்தோர் எண்ணிக்கை 1,14,74,605 ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

எட்டாவது நாளாக கொரோனா பாதிப்பு தொடர்ந்து உயர்ந்து வருவதால், நாடு முழுவதும் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 2,52,364 ஆக உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் 172 பேர் பலியானதைத் தொடர்ந்து மொத்த பலி எண்ணிக்கை 1,59,216 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 102 நாள்களில் இல்லாத வகையில் நேற்று காலையுடன் நிறைவு பெற்ற 24 மணி நேரத்தில் நாட்டில் புதிதாக 35,871 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

கடைசியாக கடந்த டிசம்பர் 6ஆம் தேதி 36 ஆயிரம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இந்த தேர்தலோடு திமுக இருக்கும் இடம் தெரியாமல் போகும்

### முதல்வர் பழனிசாமி



இந்த தேர்தலோடு திமுக இருக்கும் இடம் தெரியாமல் போகும் என்பது தேர்தலுக்குப் பிறகு தெரியும் என முதல்வர் கே.பழனிசாமி பேசினார்.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் அதிமுக வேட்பாளர் அமைச்சர் ஓ.எஸ்.மணியனுக்கு ஆதரவாக முதல்வர் பழனிசாமி நேற்று மதியம் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசிய போது,

அதிமுக காணாமல் போகும் என பேசி வரும் ஸ்டாலின், வேதாரண்யத்தில் கடல் போல கூடியுள்ள இந்தக் கூட்டத்தைப் பார்த்தால் திமுக இருக்கும் இடம் தெரியாமல் போகும் என்பது தெரியும்.

உப்பளத் தொழிலாளர்களுக்கு வேலையில்லா கால நிவாரணமாக ரூ.5 ஆயிரம் வழங்கவும், மீனவர்களுக்கு வழங்கப்படும் தடைக் கால நிவாரணம் மாதம் ரூ.7 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என பேசினார்.

# வெளிநாடுகளுக்கு 5.9 கோடி – இந்தியர்களுக்கு 3 கோடி; கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் மத்திய அரசு தோல்வி

5.9 கோடி கொரோனா தடுப்பூசிகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது என்பதை எண்ணும்போது பெருமிதம் கொள்கிறேன், ஆனால், இந்தியர்களுக்கு இதுவரை 3 கோடி கரோனா தடுப்பூசி மட்டுமே போடப்பட்டுள்ளது என்பதில் ஏமாற்றமடைகிறேன் என காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அஸ்ட்ராசெனேகா நிறுவனத்துடன் இணைந்து சீரம் இன்ஸ்ட்டியூட் ஆப் இந்தியா நிறுவனம் கோவிஷீல்ட் என்ற கொரோனா தடுப்பு மருந்தையும், ஐசிஎம்ஆர், புனேவில் உள்ள வைரலாஜி நிறுவனத்துடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனம் கோவாக்ஸின் எனும் தடுப்பு மருந்தையும் தயாரித்துள்ளன. இந்த இரண்டு தடுப்பு மருந்துகளும் இந்தியாவில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

முதல்கட்டமாக முன்களப் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக முதல் 60 வயதுக்கு மேற்பட்டோர், 45 வயதுக்கு மேற்பட்டோர் 59 வயதுக்குள் இருக்கும் இணை நோய்கள் கொண்டவர்களுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது.

இதில் நீரிழிவு நோய்கள், கடந்த ஓராண்டாக இதயக்கோளாறு நோயால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள் உள்ளிட்ட 20 இணை நோய்கள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதன்படி நாடு முழுவதும் பல்வேறு மருத்துவமனைகளில் தகுதி படைத்தவர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தனது ட்விட்டர் பக்கத்தில் கூறியுள்ளதாவது:

‘‘வெளிநாடுகளுக்கு 5.9 கோடி கொரோனா தடுப்பூசிகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது என்பதை எண்ணும்போது பெருமிதம் கொள்கிறேன். ஆனால், இந்தியர்களுக்கு இதுவரை 3 கோடி கொரோனா தடுப்பூசி மட்டுமே போடப்பட்டுள்ளது என்பதில் ஏமாற்றமடைகிறேன்.

இந்தியர்களுக்கு தடுப்பூசி போடுவதில் மத்திய அரசு தோல்வியடைந்து விட்டது.

# மணிப்பால் தொழில்நுட்ப பல்கலையில் 59 மாணவர்களுக்கு கொரோனா

கர்நாடக மாநிலம் உடுப்பி மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற மணிப்பால் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் 59 மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த பல்கலை மூடப்பட்டது. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மார்ச் இறுதியில் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

எனினும் மக்களின் வாழ்வாதாரம், நாட்டின் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு கடந்த ஜூன் முதல் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. இதன்பின் கடந்த செப்டம்பரில் வைரஸ் பரவல் உச்சத்தை தொட்டது. அப்போது நாளொன்றுக்கு 90,000 முதல் ஒரு லட்சம் பேருக்கு தொற்று ஏற்பட்டது.

அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் வைரஸ் பரவல் படிப்படியாக குறைந்து வந்தது. ஆனால் கடந்த பிப்ரவரிமுதல் மகாராஷ்டிரா உள்ளிட்ட சில மாநிலங்களில் கரோனா தொற்று அதிகரித்து வருகிறது.

### பாஜக பிரசார கூட்டத்தில் தாக்குதல்;

# பாதுகாப்பை அதிகரிக்குமாறு மத்திய மந்திரி கோரிக்கை

முதல்வர் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்களுடன் ஏற்பட்ட மோதலில் பாஜக இளைஞரணி தொண்டர் பலத்த காயமடைந்ததாக மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

மேற்கு வங்க மாநில சட்டமன்றத் தேர்தலில் ஆளும் திரிணாமுல் காங்கிரசுக்கும் பாஜகவுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. குறிப்பாக முதல்வர் மம்தா பானர்ஜி போட்டியிடும் நந்திகிராம் தொகுதி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. நந்திகிராமில் மம்தாவை எதிர்த்து அவரது முன்னாள் உதவியாளர் சுவேந்து அதிகாரி போட்டியிடுகிறார். இரு தரப்பினரும் தீவிர பிரசாரம் மேற்கொண்டுள்ளனர்.

மம்தா பானர்ஜி கடந்த வாரம் வேட்பு மனு தாக்கல் செய்து பிரசாரம் தொடங்கியபோது, அவரது கால் கார் கதவில் சிக்கி நசுங்கியது. கூட்டத்தில் இருந்த சிலர் வேண்டுமென்றே தன்னை தள்ளிவிட்டதால் காலில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், இது பாஜகவின் சதி என்றும் மம்தா குற்றம்சாட்டினார். சிகிச்சைக்கு பிறகு சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி பிரசாரத்தை தொடர்கிறார் மம்தா.


www.nlb.lk

**17.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 722,873**

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 32,025,680.00**

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 34

NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம் 4429 உத்தியோகபூர்வ முடிவுகள்

### மஹஜன சம்பத

திகதி: 17-03-2021

வெற்றி எழுத்து S வெற்றி இலக்கங்கள் 3 7 6 3 5 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 3 7 6 3 5 0 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 7 6 3 5 0 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 6 3 5 0 | ரூபா. 10,000/- | 128 |
| 4 ஆம் பரிசு | 3 5 0 | ரூபா. 1,000/- | 1,297 |
| 5ஆம் பரிசு | 5 0 | ரூபா. 100/- | 12,961 |
| 6ஆம் பரிசு | 0 | ரூபா. 20/- | 128,535 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 3 7 6 3 5 | ரூபா. 10,000/- | 15 |
| 8ஆம் பரிசு | 3 7 6 3 | ரூபா. 1,000/- | 133 |
| 9ஆம் பரிசு | 3 7 6 | ரூபா. 100/- | 1,300 |
| 10ஆம் பரிசு | 3 7 | ரூபா. 50/- | 12,796 |
| 11ஆம் பரிசு | S | ரூபா. 20/- | 51,541 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,727,420.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,467,790.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

### JATHIKA SAMPATHA ஜாதிக சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு இலக்கம் 1105 திகதி 17.03.2021

வெற்றி இலக்கினம் ரிஷபம்

வெற்றி இலக்கங்கள் 5 0 8 1 3 5

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 பரிசு | 5 0 8 1 3 5 | ரூ.1,000,000.00 | பரிசு | - |
| 02 பரிசு | 0 8 1 3 5 | ரூ. 100,000.00 | பரிசு | 04 |
| 03 பரிசு | 8 1 3 5 | ரூ. 10,000.00 | பரிசுகள் | 33 |
| 04 பரிசு | 1 3 5 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 299 |
| 05 பரிசு | 3 5 | ரூ. 100.00 | பரிசுகள் | 3,154 |
| 06 பரிசு | 5 | ரூ. 20.00 | பரிசுகள் | 30,861 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 07 பரிசு | 5 0 8 1 3 | ரூ. 10,000.00 | பரிசு | 01 |
| 08 பரிசு | 5 0 8 1 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 27 |
| 09 பரிசு | 5 0 8 | ரூ. 200.00 | பரிசுகள் | 313 |
| 10 பரிசு | 5 0 | ரூ. 100.00 | பரிசுகள் | 3,098 |
| 11 பரிசு | ரிஷபம் | ரூ. 20.00 | பரிசுகள் | 25,772 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் | 122 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,910,860.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 15,124,549.30

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416 Web : www.nlb.lk

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2724 சீட்டிழுப்பு திகதி 17 / 03 / 2021

ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 49 64 66 70

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 180 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 407 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,123 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,619 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 166,587 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,376 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 214,300

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,683,320.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,383,310.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01

தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 792

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 17.03.2021

ஆங்கில எழுத்து G சுப்பர் இலக்கம் 18 வெற்றி இலக்கங்கள் 35 41 68 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 92 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 223 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,658 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,692 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 92,032 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,991 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 123,062,526.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,497,440.00

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 17/03/2021

சீட்டிழுப்பு இலக்கம் - 466

ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 09 28 48 71

ஆயிரம் முறை 1115

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 07 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 79 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 216 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,412 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,598 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 91,178 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 16,850 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 5,206,640.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 117,477

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 88,227,892.80

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல.32,சூபவ் தேசமான்ய என்.டபிள்யூ.ஜே.முதலிகே மாவத்தைரூபவ், கொழும்பு 01. தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

புத்தசாசன, சமய, மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம்

# பெறுகைக்கான அறிவித்தல்

## ஒருவருட காலத்திற்கான (2021/2022 ) சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்குதல்

**இத்திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் அந்நிறுவனத்தின் சிற்றுண்றிச்சாலையை ஒரு வருட காலத்துக்கு (2021/2022) நடாத்திச் செல்வதற்கு தகுதியுடைய மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களிடமிருந்து கேள்வி ஆவணங்களுக்காக மீள் செலுத்தப்படாத ரூபா **1000.00** கட்டணத்தை தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பதன் மூலம் **2021.03.19** ஆம் திகதி முதல் **2021.04.21** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.2.00** வரையிலான காலப்பகுதியில் இந்நிறுவனத்தின் நிர்வாகக் கிளையில் உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பம் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் **"ஒருவருட காலத்திற்கான (2021/2022) சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்குதல்"** எனக் குறிப்பிட்டு **2021.04.21 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** அல்லது குறித்த நேரத்துக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **தவிசாளர், திணைக்களத்தின் பெறுகைக் குழு, தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம், இல-07, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு - 07** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவோ. அல்லது நிறுவகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரடியாக இடவோ முடியும்.

3. கேள்வி விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் **2021.04.21** ஆம் திகதி **பி.ப.3.00 மணிக்கு** திறக்கப்படும் என்பதுடன், மேலும் நாட்டில் தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது உரிமம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்.

4. அரசாங்க ஒப்பந்தங்களின் விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் மீறிய மற்றும் தவறானமுறையில் ஆவணப்படுத்தப்பட்ட நபர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற தேசிய சுவடிகள் காப்பகத்தின் நிர்வாக அதிகாரியை (நிருவாகம்) தொடர்புகொள்ளவும். **(தொலைபேசி இல 011-2696072)**

**தவிசாளர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**இல 07, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு - 07**

**தொலைபேசி இல. 011-2696917, 011-2696072**

# பெறுகை அறிவித்தல்

வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிசக்தி மற்றும்
வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு
மத்திய மாகாணம்

## 2021 மார்ச் 02 செவ்வாய்க்கிழமை பிரசுரமான பத்திரிகை அறிவித்தலின் திருத்தம்

அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் கைத்தொழில்களுக்காக கேள்வி விநியோகித்தல் இடம் பெறுவது நிதி அமைச்சின் இல. 04/2016(iii) 2021.02.18ம் திகதிய அரச நிதி சுற்றுநிருபத்திற்கு அமைவானது எனவும் அதன்படி CIDA பதிவுத் தரம் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திருத்தப்படுகிறது எனவும் அறிவித்துக்கொள்கிறேன். அதன்படி குறித்த தினங்களில் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது.

| கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி | இரண்டாம் கேள்விக்கு முன்னரான கூட்டம் | விலைமனுக்கான திறத்தல் |
|---|---|---|
| 2021.03.30 பி. ப. 3.00 மணி வரை | 2021.03.24 மு. ப. 10.00 மணிக்கு | 2021.04.01 மு. ப. 10.30 இற்கு |

ஏனைய சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2021.03.02ம் திகதி பிரசுரமான அறிவித்தலில் உள்ளவாறு செல்லுபடியாகும் என்பதை மேலும் அறிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து மின்சக்தி, எரிசக்தி மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு**
**இல. 109, யட்டிநுவர வீதி, கண்டி.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல் (IFB)

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | CIDA தரம் | மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/DC/NWP/IR-GOSL/2021/26 | குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல கல்லூரிக்கு முன்னால் சுரங்கப்பாதை அமைத்தல் | 61.5 | C3 or C4 | 1.0 | 182 |

02. இவ் வேலைத்திட்டத்தில் சேர் ஜோன் கொத்தலாவல கல்லூரிக்கு முன்னால் சுரங்கப்பாதை அமைக்கும் பணி உள்ளடங்கும்.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தரத்தில் **பாலக் கட்டுமானத்துறையில்** நிபுணத்துவத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2021.03.18** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

மாகாணப் பணிப்பாளர் (குருணாகல்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
குருணாகல்
தொலைபேசி : 037-2223250 பெக்ஸ்:- 037-2228076

பணிப்பாளர் (கட்டுமானம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மூன்றாம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர" 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை
தொலைபேசி:- 011-2864388 மற்றும் பெக்ஸ்:- 011-2861821

06. மனு தொடர்பான கூட்டம் **2021.03.25** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு மாகாணப் பணிப்பாளர் (வடமேற்கு மகாணம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, குருணாகல் காரியாலயத்தில் இடம்பெறுவதுடன் தேவையேற்படின் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.

07. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.03.18** ஆம் திகதியிலிருந்து **2021.04.07** ஆம் திகதி வரை **09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 3 வது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளருக்கு (கட்டுமானம்) மீள் செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மீளச்செலுத்தப்படாத **ரூபா.13,500/- (வட்வரி உள்ளடங்களான)** கட்டணத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

**அ.** **கணக்கின் பெயர்** : பொது முகாமையாளர்- **RDA**
**ஆ.** **கணக்கு இலக்கம்** : 0000001943
**இ.** **வங்கி** : **இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை**

1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், **2021.08.05** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2021.04.08** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், அமைச்சரவையின் வழங்கல் குழு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, வழங்கல் குழு, 07 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. மனுக்கள் **2021.07.08** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சின் வழங்கல் குழு,**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**வழங்கல் பிரிவு,**
**முதலாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

# கொழும்பு மாநகர சபை

# மாநகர பொருளாளர் திணைக்களம்

## கேள்வி அறிவித்தல்

## பொதுச் சந்தைகளில் உள்ள வெற்று இறைச்சிக் கடைகளை 2021/2022/2023ஆம் வருடங்களில் குத்தகைக்கு வழங்குதல்

வருடம் 2021-07-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தைகளில் அமைந்துள்ள இறைச்சி விற்பனை கூடங்களின் மாட்டிறைச்சி / ஆட்டிறைச்சி / கோழியிறைச்சி என்பவற்றை விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- 2021-04-07ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை 1000.00 + VAT ரூபா வீதம் கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மாநகர பொருளாளர் திணைக்களத்தின் வருமானப் பிரிவில் கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- அவ்வாறு வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கு இயைபான வைப்புத் தொகையை 2021-04-08ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை மாநகர பொருளாளர் திணைக்களத்தின் வருமானப் பிரிவிற்குச் செலுத்தலாம் என்பதுடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையிலிடப்பட்ட கேள்விகளை 2021-04-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மாநகர செயலாளர் திணைக்களத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

- 2021-04-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாநகர செயலாளர் திணைக்களத்தில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் கலந்து கொள்வதற்கு விரும்பும் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்துகொள்ளலாம்.

- கேள்வியின் அனைத்து நிபந்தனைகளுக்கு அமைவாக அல்லாமல் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு கடைக்காகவும் கிடைக்கப்பெறும் கூடிய கேள்விக்கு குறித்த கடை ஒதுக்கப்படும். மேலதிக விபரங்களை மாநகர பொருளாளர் திணைக்களத்தின் வருமானக் கிளையின் 011-2699244 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கணக்காளர் (வருமானம்) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.


- ஏதாவது கேள்வியை அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

**கொழும்பு மாநகர சபை,**
**கொழும்பு-07.**

### அட்டவணை

| பொதுச்சந்தை | கடை அறை இல. | தன்மை | சபையின் விலை ரூபா சதம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|
| டீன்ஸ் வீதி | 44/05<br>44/10 | மாட்டிறைச்சி<br>மாட்டிறைச்சி | 165,700.00<br>114,900.00 | 83,000.00<br>58,000.00 |
| தெமட்டகொட | 50/37 | கோழியிறைச்சி | 193,000.00 | 97,000.00 |
| பம்பலப்பிட்டி | 14<br>24 | கோழியிறைச்சி<br>மாட்டிறைச்சி | 494,800.00<br>392,000.00 | 248,000.00<br>196,000.00 |
| வெள்ளவத்தை | 01<br>03<br>04<br>01<br>02 | பன்றியிறைச்சி<br>ஆட்டிறைச்சி<br>மாட்டிறைச்சி<br>கோழியிறைச்சி<br>கோழியிறைச்சி | 72,200.00<br>793,250.00<br>1,339,600.00<br>617,400.00<br>3,296,500.00 | 37,000.00<br>397,000.00<br>670,000.00<br>309,000.00<br>1,649,000.00 |
| ஜிந்துப்பிட்டி | 03<br>07 | ஆட்டிறைச்சி<br>ஆட்டிறைச்சி | 408,500.00<br>573,600.00 | 205,000.00<br>287,000.00 |
| நாகலகம் வீதி | 381/1<br>381/7<br>381/8 | கோழியிறைச்சி<br>கோழியிறைச்சி<br>பன்றியிறைச்சி | 551,300.00<br>663,800.00<br>167,200.00 | 276,000.00<br>332,000.00<br>84,000.00 |
| கிருலப்பனை | 146 | கோழியிறைச்சி | 8,290,000.00 | 4,145,000.00 |
| கொள்ளுப்பிட்டி | 01/A<br>09 | பன்றியிறைச்சி<br>ஆட்டிறைச்சி | 102,600.00<br>508,400.00 | 52,000.00<br>255,000.00 |

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
App Store Google play Windows Store


Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# கிழக்கின் குரல்



# போதைப் பொருள் பாவனையில் மாணவர்கள் சிக்குவது ஆபத்தானது

## மட்டு. மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர்

**பெரியபோரதீவு தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்**

நகரங்களில் காணப்பட்ட போதைப் பொருள் பாவனை கிராமங்களுக்குள் ஊடுருவியிருப்பது ஆபத்தானது என

மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லக்சிறி விஜேசேன தெரிவித்தார். கிராம மக்கள் விழிப்பாக இருந்து தங்களையும் எதிர்கால சந்ததியினரையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றார்.

போதைப் பொருள் பாவனை உட்பட சமகால பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் ஏறாவூர் நகர சபைத் தவிசாளர் எம்.எஸ் நழீம் தலைமையில் புதன்கிழமை (17) இடம்பெற்றது.



இக் கலந்துரையாடலில் ஏறாவூர் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.கே.ஏ. ஸவாஹிர், ஏறாவூர் நகர சுகாதார வைத்திய அதிகாரி ஷாபிறா வஸீம், ஏறாவூர் ஆதார வைத்தியசாலை மனநல மருத்துவர் சௌந்தரராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

போதைப் பொருள் வலையில் இளம் சமுதாயத்தினர் குறிப்பாக மாணவர்கள் சிக்க வைக்கப்படுகின்றனர்.

இது மிகவும் ஆபத்தானதும் அழிவைக் கொண்டு வரக் கூடியதுமான செயற்பாடாகும்.

போதைப் பொருள் விநியோக வலைப்பை தகர்த்தெறிவதில் பொலிஸாருடன் இணைந்து சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரும் அக்கறை காட்ட வேண்டும்.

போதைப் பொருள் விநியோகம் மற்றும் பாவனை பற்றி அறிந்து கொள்ளும் எவரும் எந்தவிதத் தயக்கமுமின்றி எமக்கு தெரியப்படுத்த வேண்டும்.

தகவல் தருபவர் யார் எவர் என்கின்ற விடயங்கள் எமக்குத் தேவைப்படாது. அதனால் தயக்கமின்றி எந்நேரமும் 0652224426 இந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் தர முன்வாருங்கள். போதைப் பொருள் சம்பந்தமாக நீங்கள் தரப் போகும் தகவல்கள் எதிர்கால சந்ததியினரை வாழவைக்கும் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள் என்றார்.



"நீர்ப்பாசன செழிப்பு" வேலைத் திட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மகாமாறு குளம் 66 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்வதற்கான ஆரம்பம் வேலைகள் புதன்கிழமை (17) பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரல தலைமையில் நடைபெற்ற போது. படம்; கிண்ணியா மத்திய நிருபர்

# மூதூர் பகுதி ஆற்றங்கரைகளில் சுகாதார சீர்கேடு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் ஆற்றங்கரைகள் உள்ளிட்ட பல நீரோடைகளுக்கு அருகில் கண்டபடி கழிவுகள் கொட்டப்படும் நிலையில் இவ்விடங்கள் பெரும் சுகாதார சீர்கேடுகளுக்கும், துர்நாற்றம் வீசும் இடங்களாக காணப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். மூதூர் நகரப் பகுதியிலேயே இவ்வாறான நீரோடைகள் உள்ளன.

இவ்விடங்களின் அருகாமையில் பாடசாலைகள், வைத்தியசாலை, நூலகம், சந்தை, பஸ் தரிப்பிடம் போன்றவை உள்ளன. எனவே பொது சுகாதார நலனையும், மக்கள் போக்குவரத்தையும் கவனத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்கழிவுகளை கொட்டுபவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் வேண்டி உள்ளனர்.

# முன்னாள் காழி நீதிபதி காலமானார்

**புதிய காத்தான் குடி விசேட,புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



காத்தான்குடி பிரதேசத்தில் நீண்ட காலமாக காழி நீதிபதியாக கடமையாறிய எம்.பி.எம். மீராசாஹிபு நேற்று (18) சுகவீனமுற்றிருந்த நிலையில் காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் காத்தான்குடி ஜாமிஉழ்ழாபிரீன் ஜும்ஆ பள்ளி வாசலில் தொழுகை நடாத்தப்பட்டு பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மர்ஹூம் மீராசாஹிபு பத்தொன்பது வருடங்கள் காழி நீதிபதியாக கடமையைச் செய்தவர். இவர் பல நிறுவனங்களில் பதவி நிலை வகித்து சமூக பணிகளிலும் சேவைகள் செய்தவராவார்.

# வேலை திட்டங்கள் கையளிப்பு

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தம்பலகாமம் பிரதேச செயலகப்பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (16) முள்ளிப்பொத்தானை வடக்கு கிராம உத்தியோகத்தர்பிரிவில் நடைபெற்றது.

இந் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் தர்சன பாண்டிகோரல, மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கள உத்தியோகத்தர்கள் மற்றும் முஸ்லிம் எயிட் நிறுவன அதிகாரிகள் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

# மூதூர் ஷாபி நகரில் உற்பத்தி திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு



**தோப்பூர் தினகரன் ,கிண்ணியா மத்திய நிருபர்கள்**

சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக மூதூர் ஷாபிநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் சௌபாக்கிய உற்பத்தித் திட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு புதன்கிழமை (17) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நுவன் கபில அத்துகோரலவும் விசேட விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரளவும் கலந்து சிறப்பித்தனர்.

இவர்களுடன் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள், பிரமுகர்களும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

அங்குரார்ப்பண நிகழ்வை அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிபர் ஆகியோர் ஷாபிநகர் பிரதேசத்தில் கைத்தறி உற்பத்திகளை மேற்கொள்ளும் பயனாளிகளினுடைய வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு அவர்களை ஊக்கப்படுத்தியமையும் விசேட அம்சமாகும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுத்தாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

**மட்டக்களப்பு குறூப் ,வெல்லாவெளி தினகரன், கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

சுபீட்சத்தின் நோக்கு நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக தொழில் முயற்சியில் ஈடுபடும் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்திற்கு அமைய ஒரு இலட்சம் அரச காணிகளை முதலீட்டு வாய்ப்புகளுக்காக வழங்கும் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சி ஆற்றல் உடையவர்களினால் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்கான நேர்முகப் தேர்வுகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன

இத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான ஒரு இலட்சம் அரச காணிகள் வழங்கும் திட்டத்திற்கான நேர்முக தேர்வு புதன்கிழமை (17) மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் இருந்து விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான முதல் கட்ட நேர்முக தேர்வு மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் ஏ. அருணன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் திட்டத்திற்கமைய இலங்கையின் சகல மாவட்டங்களிலும் எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்படவுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான எழுத்தாளர் சங்கம் உருவாக்குவது தொடர்பான கூட்டம் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரனினதும், மாவட்ட கலாசார திணைக்களத்தினதும் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சின் சுற்று நிரூபத்திற்கு அமைய மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேரை கொண்டதாக மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட வேண்டும். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேர் வீதம் ஒவ்வொரு பிரதேச செயலாளர்களால் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்க நிறைவேற்றுத் தலைவராக மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் செயற்படுவதுடன், தலைவராக கலாநிதி முருகு தயாநிதி, உப தலைவர்களாக இரா. தவராஜா, கே. நௌஷாத், செயலாளராக வீ. மைக்கல் கொலின், உப செயலாளராக திருமதி. சுதாகரி மணிவண்ணன், பொருளாளராக கதிரவன், ரீ. இன்பராசா மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக திருமதி. ரூபி வலன்டினா பிரான்சிஸ், ஜீனைதா ஷெரீப், ஏ. சீ. அப்துல் ரஹுமான், கே. அருளம்பலம், கலாபூஷணம் கே. தணிகாசலம், ஜிப்ரி ஹசன் ஆகியோரும் சபையோரினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் மாவட்ட கலாசார திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.சீ ஜெய்னுலாப்தீன், மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. வை. தனுஷியா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு பாடசாலைகளுக்கு குத்துவிளக்கு வழங்கும் நிகழ்வு



**கொக்கட்டிச்சோலை நிருபர்**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 20 பாடசாலைக்கு குத்து விளக்கு வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (17) நாற்பதுவட்டை பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையினால் இக் குத்து விளக்குகள் வழங்கி வைக்கப்பட்டன. குத்துவிளக்குகள் ஒவ்வொன்றும் 20,000 ரூபா பெறுமதிக்கும் அதிகமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

நாற்பதுவட்டை பாலர் பாடசாலை மாணவர்களின் கற்றல், கற்பித்தலுக்கு உதவும் வகையில், மாணவர்களுக்கான சீருடை, கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் மு. அருணன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சி. புஸ்பலிங்கம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் தெட்ஷணகௌரி தினேஷ், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை தொடக்கம் காரைதீவு வரையான வீதிகள் அபிவிருத்தி

**ஒலுவில் விசேட நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கத்திற்கமைய நாட்டில் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், கல்முனை தொடக்கம் காரைதீவு வரையான வீதிகள் 08 கோடி ரூபாய் செலவில் காபட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

இவ் வீதிகளின் அபிவிருத்தி வேலைகளை எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை இராஜாங்க அமைச்சர் விமலவிர திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான டி. எம். வீரசிங்க, டொக்டர் திலக்ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை கடற்கரை ஆகிய வீதிகள் 3.4 கிலோமீற்றர் காபட் வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் கூறினார்.

பொதுமக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டமிடலுக்கமைய நாட்டில் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இவ் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக, தெரிவித்தார்.

மேலும், சாய்ந்தமருது வைத்தியசாலை வீதி பாலம் மற்றும் சாய்ந்தமருது கடற்கரை வீதிப் பாலம் போன்றவையும் இத் திட்டத்தின் கீழ் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதை பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு





**பாசிக்குடா நிருபர்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் 'போதையற்ற நாடு சௌபாக்கியமான தேசம்' எனும் தொணிப் பொருளில், போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் மாவட்ட இணைப்பாளர் ஞா.விஜயதர்சன் தலைமையிலான குழுவினர் கோறளைப்பற்று,கோறளைப்பற்று மேற்கு மற்றும் கோறளைப்பற்று மத்தி போன்ற பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தினர்.

போதைப் பொருள் பாவனையால் மனிதனுக்கு ஏற்படும் தீங்கு தொடர்பாக பல்வேறு கருத்துக்களை வழங்கியும் முச்சக்கர வண்டிகள், ஏனைய வாகனங்கள் மற்றும் பொது இடங்களில் இது தொடர்பான துண்டு பிரசுரம் ஒட்டப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

கிராமிய போதைப் பொருள் தடுப்பு குழுக்களை உருவாக்குதல், பாதிக்கப்பட்டோர்களுக்கு, சிகிச்சை, பயிற்சிகள் வழங்குதல் போன்ற விடயங்களை பிரதேச செயலகங்கள் தோறும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை மற்றும் புணர்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அவசர அழைப்பான 1929 அழைப்பினை 24 மணித்தியாலயத்தில் தமிழ் மொழியில் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



# ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு; மூன்றாம் கட்ட நேர்முகத் தேர்வு

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பம்





(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் "சுபீட்சத்தின் நோக்கு" தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைய வறுமையற்ற இலங்கையை உருவாக்குதல் எனும் தொனிப் பொருளின் கீழ் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்கும் மூன்றாம் கட்ட நேர்முகத் தேர்வு நேற்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் மூன்றாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 39 விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. அஹமட் நசீல் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நேர்முக தேர்வில் பிரதேச செயலக கணக்காளர் ஏ.எல்.எம். றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு நேர்முக தேர்வுகளை மேற்கொண்டனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மிகக் குறைந்த கல்வித் தகைமையுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அரச தொழிலை பெற்றுக்கொடுத்து, அக் குடும்பங்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் நோக்குடன் ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாகவே இந் நேர்முக தேர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் "பல்நோக்கு அபிவிருத்தி பணி உதவியாளர்களாக" நியமனம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் நிதி மோசடி

## சந்தேகத்தில் கணக்காளர் கைது: பிரதம பொறியியலாளரைத் தேடி வலைவீச்சு

(காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்ட மட்டக்களப்பு காரியாலயத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றமை குறித்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 25 இலட்சம் ரூபா காசோலை மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2010 2014 வரையான காலப் பகுதிக்குள் இடம்பெற்ற இம் மோசடி தொடர்பில் 2019இல் திட்ட ஒப்பந்தகாரர்களுள் ஒருவரான வை.எம்.முஸம்மில் என்பவர் குறித்த 25 இலட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்றப் புலனாய்வு பிரிவுக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

அவரது முறைப்பாட்டுக்கமைய கடந்த இரு வருடங்களாக விசேட குற்றப் புலனாய்வு பிரிவுப் பொலிசார் நடாத்திய தொடர் விசாரணை மற்றும் தேடுதலின் பலனாக இத்துணிகரமோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக இந்த நிதிமோசடியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் அங்கு கடமையாற்றிய கணக்காளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கணக்காளரை நீதிமன்றில் ஆஜர்செய்த போது எதிர்வரும் 25 ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. றிஸ்வான் செவ்வாய்க்கிழமை (16) உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஜெய்க்கா திட்டத்தில் 24 இலட்சம் ரூபா மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் இவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் அதனோடு தொடர்புடைய பிரதம பொறியியலாளரைத் தேடி பொலிசார் வலை வீசியுள்ளனர்.ஓரிரு நாட்களில் இதனுடன் சம்பந்தப்பட்ட மேலும் சிலர் கைதாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அறிவூட்டும் செயலமர்வு

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் 2 இலட்சம் குடும்பங்களை பலப்படுத்துதல், 25 ஆயிரம் இளம் பெண் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துதல், புதிதாக சமுர்த்தி கொடுப்பனவு வழங்குதல் போன்ற திட்டங்கள் பற்றி கிராமியக் குழுக்களை அறிவூட்டும் செயலமர்வு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் ஏ.கே. றொஷின்தாஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிராமியக் குழுக்களில் அங்கம் வகிக்கும் மாநகர பிரதி மேயர், உறுப்பினர்கள், மத தலைவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள், சி.பி.யோ தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தொழில் முயற்சிக்கு காணி வழங்கும் நிகழ்ச்சி திட்டம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்



ஒரு இலட்சம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைவாக காணிகளற்றவர்களுக்கு அரச காணிகளை முதலீட்டு வாய்ப்பிற்காக வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச தொழில் முயற்சி காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் காணி உபயோக கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்கு அமைவாக விண்ணப்பித்துள்ளவர்களுக்கான நேர்முகத்தேர்வு புதன்கிழமை (17) ஆரம்பிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரனின் வழிகாட்டலில் உதவிப்பிரதேச செயலாளர் ஆர். சுபாகர் தலைமையில் இடம்பெற்ற நேர்முகத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ள 1427 பேரில் முதற்கட்டமாக 320 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அழைக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியதுடன் அவர்களின் தேவை தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

காணி உறுதி பெற்றுக்கொள்ளல், காணி அளவையிடப்பட்டு அளவைப்படம் தயாரித்தல், காணியின் பிணக்குகளை தீர்த்தல், காணி அடையாளம் வைத்து கடன் பெறுதல், தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்கு உதவி பெறுதல், தயாரிப்புக்களை மேம்படுத்துவதற்கு உதவி செய்தல், தயாரிப்புக்களுக்கான இயந்திரங்களை பெறுவதற்கு உதவி பெறுதல் மற்றும் ஏனைய காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் போன்ற விடயங்களும் இந்நேர்முகப் பரீட்சையின்போது ஆராயப்பட்டன.

# சுவாமி நடராஜானந்தா ஜீயின் 54வது சமாதி தின நிகழ்வு



காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவு மண்பெற்றெடுத்த மற்றுமொரு இ.கி. மிசன் துறவி சுவாமி நடராஜானந்தா ஜீயின் 54வது சமாதி தின நிகழ்வு நேற்று (18) அவர்பிறந்த காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

காரைதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள சுவாமியின் திருவுருச்சிலை முன்றலில் இந்நிகழ்வு நடைபெற்றது. முன்னதாக சுவாமிக்கு மலர்மாலை அணிவித்து புஸ்பாஞ்சலி செலுத்தி பஞ்சாராத்தி காட்டப்பட்டது.

அதிதிகளாக காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கே. ஜெயசிறில், பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கே. பார்த்தீபன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

சுவாமி நடராஜானந்தா நூற்றாண்டு விழாக் குழுச் செயலாளர் வி.ரி. சகாதேவராஜா, சுவாமி தொடர்பாக சிறப்புரையாற்றினார். சங்கச் செயலாளர் கு. ஜெயராஜி பஞ்சராத்திகாட்டி மகிழ்வுரை நிகழ்த்தினார்.

# இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு காணிகள் வழங்கும் நேர்முகத் தேர்வு

மட்டக்களப்பு குறூப் நிருபர்



சுபீட்சத்தின் நோக்கு நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக தொழில் முயற்சியில் ஈடுபடும் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்திற்கு அமைய, ஒரு இலட்சம் அரச காணிகளை முதலீட்டு வாய்ப்புகளுக்காக வழங்கும் திட்டத்தின் கீழ், தொழில் முயற்சி ஆற்றல் உடையவர்களின் விண்ணப்பங்களுக்கான நேர்முகத் தேர்வு நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான ஒரு இலட்சம் அரச காணிகள் வழங்கும் திட்டத்திற்கான நேர்முக தேர்வு புதன்கிழமை (17) மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் இருந்து விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான முதல் கட்ட நேர்முக தேர்வு மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் ஏ. அருணன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

# கிண்ணியா மகமாறு குளம் புனரமைப்பு

திருமலை மாவட்ட விசேட நிருபர்



சௌபாக்கியா வேலை திட்டத்தில் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் மகமாறு குள புனர்நிர்மாணப் பணி ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (17) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். முகம்மட் கனி தலைமையில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக் கோரளவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்டச் செயலாளர் சமன் தர்ஷனா பாண்டிகோரலா, கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் கே.எம். நிஹார், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் பொது ஜன பெரமுன கட்சியின் மூதூர் தொகுதி அமைப்பாளர் நிமல் காமினி ஹேவா விதாரன, நீர்ப்பாசன பணிப்பாளர் ஏ.கே. அப்துல் ஜப்பார், நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் உயர் அதிகாரிகள், விவசாயிகள், விவசாய சங்கத்தினர் பிரதேச செயலக ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.



வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவம் நேற்று (18) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தேவஸ்தானத்தின் பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்களின் தலைமையில் கொடியேற்ற நிகழ்வு நடைபெற்றது. பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுவதையும், அம்பாள் எழுந்தருளி இருப்பதையும் படங்களில் காணலாம்.
(படம்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)




# சப்ரகமுவ மாகாண கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாணத்தில் அனைத்து கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் 25 வீதத்தால் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் அனைத்து கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் நூற்றுக்கு 25 வீதத்தால் சம்பளம் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு அதிகரிப்பது குறித்து சுற்று நிருபத்தை தெளிவுபடுத்தி கையளிக்கும் நிகழ்வு நேற்று(18) சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண ஆளுநர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,



சப்ரகமுவ மாகாணத்தில் கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு 2017ஆம் ஆண்டு இறுதியாக சம்பளம் அதிகரிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனைத்து கூட்டுறவு சேவையாளர்களுக்கும் சம்பளம் அதிகரிப்பதற்கு எங்களால் முடிந்தது.

இதன் அடிப்படையில் கூட்டுறவு துறையில் கீழ் மட்டத்தில் சேவையாற்றும் ஊழியர் ஒருவருக்கு குறைந்தது 16800 ரூபாவாகவும், கூட்டுறவு துறை முகாமையாளர் ஒருவருக்கு குறைந்தது 32,400 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சப்ரகமுவ மாகாணத்தில் அனைத்து கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு கொடுப்பனவும் நூற்றுக்கு 50 வீதம் தொடக்கம் 100 வீதம் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் பிரிக்கப்பட்டு கொடுப்பனவை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

இதன்படி கூட்டுறவுத்துறை சேவையாளர்கள் தமது தொழில் திறமைக்கேற்ப 8800 ரூபா தொடக்கம் 24300 வரை கொடுப்பனவை பெற்று கொள்ள முடியும். கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்கான சேவையை ஆரம்பித்தது பெலியத்த கூட்டுறவுத் துறையின் மூலமாகும்.

கொவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பலநோக்கு கூட்டுறவுத்துறையின் மூலம் பாரிய சேவையினை செய்ய முடிந்தது.

சப்ரகமுவ மாகாணத்தில் கூட்டுறவுத்துறையில் சேவையாற்றும் 2559 பேர் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமையாகி உள்ளார்கள். இதுவரை கூட்டுறவுத்துறை சேவையாளர்கள் 273 பேர் ஓய்வூதியம் பெறுகின்றார்கள். கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேலும் தெரிவித்தார்.

இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்ஜனி ஜயகொடி, பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர உட்பட கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவருக்கு கொரோனா; பிரதேசசபை மறுஅறிவித்தல் வரை பூட்டு



ஹற்றன் விசேட, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்

நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து நாளை முதல் சுகாதார பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைய பிரதேச சபையை மறுஅறிவித்தல் வரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தலைவர் கே.கே. ரவி தெரிவித்தார்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையை தொடர்ந்து பிரதேச சபையின் உபதவிசாளருக்கும் வாசிகசாலை பொறுப்பாளருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அவர்களுடன் நெருக்கமான உறவினை பேணிய நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. அந்த அறிக்கையின் படி மூன்று உறுப்பினர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுப்பதற்காக நாளை முதல் மறுஅறிவித்தல் வரை பிரதேசசபை மூடப்பட்டுள்ளதாக பிரதேசசபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## தோண்டப்பட்ட இரத்தினக்கல் குழிகளால் அச்சுறுத்தல்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கல் அகழ்வின் போது ஏற்படும் குழிகளால் சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

இரத்தினக்கல் அகழ்வின் பின்னர் குழிகளை மூடிவிடாமல் கைவிட்டு செல்வதால் சுற்றாடலுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகளும் சுட்டிக்காட்டியுள்ளன.

இரத்தினபுரி மாவட்ட கிராமப்பகுதிகள் குறிப்பாக ஆற்றங்கரைகள், நீர் நிலைகளை அண்டிய பகுதிகள், கம்பனி நிர்வாகங்களில் இயங்கும் பெருந்தோட்டங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றில் இரத்தினக்கல் அகழ்வு பரவலாக இடம்பெற்று வருகிறது.

இவ்வாறாக இடம்பெறும் இரத்தினக்கல் அகழ்வுகளில் அநேகமானவை சட்ட விரோதமான முறையில் இடம் பெறுபவையாகும். அநேகமாக இரவு வேளைகளில் திருட்டுத்தனமாக குழிகளை தோண்டி விட்டு தப்பிச் செல்வது இவர்களது வழமையாகும்.

எனவே கைவிடப்பட்டு மூடப்படாமலிருக்கும் பெருந்தொகையான குழிகளாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. கவனிப்பாரற்று கிடக்கும் குழிகளில் நீர் மற்றும் கழிவு பொருட்களும் தேங்கி கிடப்பதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதாகவும் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றன. டெங்கு, மலேரியா, மூளைக் காய்ச்சல், போன்ற நோய்கள் ஏற்படும் அபாயம் இப்பகுதியில் நிலவுவதாக சுற்றாடல் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

## பதுளை மாவட்டத்தில் கொரோனா பரவல் தீவிரம்; உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரிப்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா வைரஸ் நோய்தொற்றுக்குள்ளான ஒருவர், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். அதற்கமைய பதுளை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் மரணமானவர்களின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாத காலத்தில் பதுளையில் மூன்று பேரும், தியத்தலாவையில் மூன்று பேரும், வெலிமடையில் இருவரும், பண்டாரவளையில் ஒருவருமாக ஒன்பது பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

பதுளை அரசினர் மருத்துவமனையில் நேற்று இரவு உயிரிழந்தவர், வெலிமடை, மீராவத்தை என்ற இடத்தைச் சேர்ந்த 83 வயது நிரம்பியவராவார். தொற்றுக்கு இலக்கான நபர், வெலிமடை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்கென பதுளை அரசினர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பயனின்றி மரணமானார். அவரது சடலம், கோவிட் 19 சுகாதார வழிமுறைகளுக்கமைய பதுளை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதேவேளை பசறையில் பிரபல பாடசாலையொன்றின் ஆசிரியரொருவருக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டிருப்பது பி.சி.ஆர். பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக, பசறை பொது சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.



கடந்த 16ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை நேற்று வெளியான போதே ஆசிரியரொருவருக்கு கொரோனா வைரஸ் நோய் உறுதிப்படுத்தப்பட்டது. ஆசிரியர் பிந்துனுவெள கொரோனா வைரஸ் நோய் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், பசறை பொது சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

ஆசிரியருடன் தொடர்புடையவர்களை கண்டறியும் நடவடிக்கைகளை, பொது சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். பதுளைபிட்டியவிலும் அதனை அண்மித்த பிரதேசத்திலும் கடந்த மூன்று தினங்களில் கொரோனா வைரஸ் நோயாளர்கள் 31 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 16, 17, 18 ஆகிய தினங்களில் 10, 13, 08 என்ற அடிப்படையில் 31 பேர், கொரோனா வைரஸ் நோய் தொற்றுக்கு இலக்காகியுள்ளதாகவும், இதில் ஒரு மரணம் சம்பவித்துள்ளதாகவும் பதுளை பொது சுகாதாரப் பரிசோதகர் பியல் பத்ம தெரிவித்தார். கொரோனா வைரஸ் நோய் தொற்றுக்கு இலக்காகிய 31 பேரும், பிந்துனுவெள மற்றும் ககாகொல்லை சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பதுளை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## யூரியா பசளை தட்டுப்பாடு விவசாயிகள் பாதிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை மற்றும் சுற்றுப் பிரதேசங்களில் யூரியா பசளைத் தட்டுப்பாடு காரணமாக தேயிலை மிளகு மற்றும் மரக்கறிச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் விவசாயத்துக்கு பொருத்தமான காலநிலை நிலவி வருகின்ற போதிலும் பசளை தட்டுப்பாடு காரணமாக விவசாய நடவடிக்கைகளை தொடர முடியாதுள்ளதாக விசாயிகள் தெரிவிக்கின்றனர். பலாங்கொடை பிரதேசத்தில் தேயிலை, மிளகு உற்பத்தி மற்றும் மரக்கறி செய்கை பரவலாக இடம்பெற்று வருகின்றது.

மேலும் சப்ரகமுவ மாகாணத்தின் மிகப் பெரிய கல்தோட்டை நெல் விவசாய வலயம் மற்றும் வாழை கரும்பு உட்பட தானிய பயிர்ச் செய்கை இடம்பெறும் எம்பிலிப்பிட்டிய மற்றும் மகாவலித் திட்டத்தின் எல்லைகளை கொண்ட பலாங்கொடைப் பிரதேசம் போன்றன பசளை தட்டுப்பாட்டால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பசளை தட்டுப்பாட்டினால் விவசாயிகளின் தனிப்பட்ட நலன்கள் பாதிக்கப்படுவதை போன்றே தேசிய உற்பத்தி விளைச்சலில் இந்நிலைமை பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் பிரதேச விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய கமத்தொழிற் சங்கங்கள் கவலை தெரிவிக்கின்றன.

வியாபார நோக்கத்துடனான செயற்கை பசளைத்தட்டுப்பாடும் இதற்கு ஒரு காரணம் என்பதால் அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென வேண்டுக்கோள் விடுத்துள்ளனர்.

## மாணவர்களை இலக்கு வைத்து பாமசிகளில் போதை மாபியா


இரத்தினபுரி மாவட்டத்தில் மாணவர்களை இலக்கு வைத்து பாமசிகள் மூலம் போதை பொருள் விற்பனை இடம் பெற்று வருவது குறித்து பாதுகாப்பு துறையினர் அவதானத்தை செலுத்தியுள்ளனர்.

திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் போதைப் பொருள் விற்பனை காரணமாக பாடசாலை மாணவர்கள் கிராம தோட்டப்பகுதி இளைஞர்கள் பாதிக்கப்பட்டு வருவதனால் இதனைக் கட்டுப்படுத்த இரத்தினபுரி மாவட்ட போதைப் பொருள் பொலிஸ் சுற்றி வளைப்பு பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் போதையை ஏற்படுத்தவல்ல பொருட்களை விற்பனை செய்து வந்த இத்தகைய பாமசிகளில் குறுகிய காலத்தில் உடல் உள உயிர் பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவது விசாரணைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

போதைப் பொருளுக்கு பதிலாக ச ந்தேகங்க ளை ஏற்படுத்தாத மாணவர் இளைஞர்களைக் கவரக்கூடிய குளிசை வகைகளை இவர்கள் பய ன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்ப டுறது இவற்றில் சில கொடிய நோய்களு க்கு பயன்படுத்தும் குளிசைகள் எ னவும் வைத்தியர்களின் சிபாரிசு இல்லாமல் விநியோகிக்க முடியாத இந்த உயிராபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய குளிசை வகைகள் கொள்ளை விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆலயத்தில் ஒரு நூலகம்



மஸ்கெலியா பிரவுன்லோ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் முதன் முதலாக ஆலய நிர்வாகம், சமூக கலாசார அறநெறி குழு மற்றும் மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினர் ராஜ் அசோக் ஏற்பாட்டில் 'ஆலயத்தில் ஒரு நூலகம்' என்ற வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஆலய பிரதம குரு ஆனந்தசர்மா, ஆலய நிர்வாக தர்மகர்த்தா ஆனந், மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினர் ராஜ் அசோக் அறநெறி தலைவர் முத்துலிங்கம் அறநெறி ஆசிரியர்களான சத்தியா, உமா மற்றும் அறநெறி மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். ஆலயத்திற்கு சென்று கதைத்து கொண்டிருக்காமல் அந்த நேரத்தில் ஒரு புத்தகத்தினை வாசிக்கலாம் என்ற காரணத்தின் அடிப்படையில் மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினர் ராஜ் அசோக்கின் புதிய முயற்சியாக இந்த செயற்பாடு அமைந்துள்ளது.

## பண்டிகைக் காலத்தில் கொரோனா பரவலை தடுக்க நடவடிக்கை

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் கொரோனா தொற்று பரவாமல் தடுப்பதற்கான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட கொரோனா தடுப்பு குழு கூட்டம் நேற்றுமுன்தினம்(17) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம ஆகியோர் தலைமையில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றபோதே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.



எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் சமூகங்களுக்கிடையே கொரோனா தொற்றை தடுப்பதற்கான சுகாதார விதிமுறைகள் அடங்கிய பத்திரிகை இரத்தினபுரி மாவட்டத்தில் அனைத்து நகரங்களிலும் உள்ள வியாபார நிலையங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்கள் வியாபார நிலையங்களில் கூட்டமாக கூடுவது மற்றும் புடவை கடைகளில் ஆடைகளை அணிந்து பார்த்தல் என்பவற்றுக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் கூட்டமாக கூடும் இடங்களான புடவை கடைகள் உட்பட ஏனைய வியாபார நி லை ய ங் க ளி ல் பொலிஸார் மற்றும் சுகாதார பாசோதகர்கள் அடிக்கடி கண்காணிப்பு செய்தல்.

முக கவசம் அணியாதவர்களை எந்த ஒரு வியாபார நிலையங்களிலும் உள்ளே எடுப்பதை முற்றாக தவிர்த்தல்.

தத்தமது வியாபார நிலையங்களை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் வியாபார நிலையங்களுக்கு வரும் பொது மக்களை வெப்பமானி மூலம் பரிசோதனை செய்தல் போன்ற சுகாதார விதிமுறைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

## ரயில்வே ஊழியர்கள் பணிபகிஷ்கரிப்பு பயணிகள் சிரமம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

ரயில்வே ஊழியர்களின் பணிபகிஷ்கரிப்பால் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி புறப்படவிருந்த மூன்று ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நேற்று மாலை 5.50 மணிக்கு செல்லவிருந்த தபால், ரயில் சேவையும், நேற்று காலை 5.45 மணிக்கு செல்லவிருந்த பொடி மெனிக்கே மற்றும் காலை 8.30 மணிக்கு செல்லவிருந்த உடரட மெனிக்கே போன்ற ரயில்களும் சேவையில் ஈடுபடவில்லை.

இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். இதில் சில பயணிகள் வீடு திரும்பியதோடு, சிலர் பஸ்களின் மூலம் பயணங்களை மேற்கொண்டதையும் அவதானிக்க முடிந்திருந்தது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 மார்ச் 19
வெள்ளிக்கிழமை

# என்னை சந்திப்பதும் விடுவதும் அவர்களது விருப்பம்



## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அமைப்பு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ்

கிளிநொச்சி குறூப் நிருபர்

என்னை சந்திப்பதும் விடுவதும் அவர்களது விருப்பம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு அமைப்புக்களும் ஒவ்வொரு உள் நோக்கங்களுடன் செயல்படுகின்றன.எனவே அவர்கள் அதற்கேற்ற மாதிரியே செயற்படுவார்கள். நான் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று யோசிக்கின்றேன் அவர்கள் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக வைத்திருக்க யோசிக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திப்பதற்கு கடந்த முறை நான் அழைப்பு விடுத்து நூற்றுக்கணக்கானவர்கள் வந்து சந்தித்தார்கள். பின்னர் அச்

சந்திப்புக்களை அரசியல் சூழ் நிலையால் தொடர முடியவில்லை. தற்போது நான் அதனை திருப்பி தொடர்கின்றேன் எனக் குறிப்பிட்ட அமைச்சர்,.. நான் சங்கங்களுக்கு அழைப்பு விடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கே அழைப்பு விடுத்துள்ளேன். அவர்களை நான் வலிந்து அழைக்கவுமில்லை, எனவே அவர்கள் விரும்பினால் வந்து சந்திக்கலாம்.மேலும் எனக்கும் அந்த பாதிப்புக்கள் உண்டு. எனது தம்பி மற்றும் நெருக்கமானவர்கள் என பலர் கொல்லப்பட்டுள்ளனர், காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு யார் பொறுப்புக் கூறுவது எனத் தெரிவித்த அவர் தனது அலுவலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்கப் போவதில்லை

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்



கிளிநொச்சி குறூப் நிருபர்

ஜனாதிபதியின் அறிவிப்புக்கு அமைவாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை தான் சந்திக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஆனால் நாம் அவரை ஒரு போதும் சந்திக்கப் போவதில்லை. அவரை சந்திக்கும் விருப்பமும் இல்லை என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி யோ.கனகரஞ்சினி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தங்களின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பொறுப்புக் கூற வேண்டும் என தொடர்ச்சியாக கூறி வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போதே எங்கள் உறவுக்ள அதிகம் காணாமல் ஆக்கப்பட்டனர். அந்த பின்னர் மகிந்த ராஜபக்ஸ அரசின் காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு அரசோ அவ்வரசில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவினாலோ எந்த தீர்வும் கிடைக்கவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இலங்கை அரசினால் நீதி கிடைக்கும் என்ற நம்பிகை அற்றுப் போய்விட்டது.

இந்த நிலையில் அந்த அரசின் பிரதிநிதியாக உள்ள அமைச்சரை சந்திப்பதில் பயனில்லை என்றும் சர்வதேசமே எமக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.







உலக உணவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முத்துஐயன்கட்டு பிரதேசத்திலே முத்து விநாயகபுரம் பகுதியில் நிலக்கடலை செய்கையாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்காக புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத் தொகுதியை நேற்று முன்தினம் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே திறந்து வைத்த போது,....

படங்கள் சண்முகம் தவசீலன்

# பளை கரந்தாய் காணிகளை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்

கோப்பாய் குறூப் நிருபர்



தெங்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பளை கரந்தாய் காணிகளை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சுபீட்சத்துக்கான நோக்கு செயலணியின் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

கலந்துரையாடலில் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் பனை, தென்னை பயிர் செய்கை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்,பாதக சாதக விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,...

அமைச்சர் ரமேஷ் பத்திரனவும் நானும் ஒன்றாக பாராளுமன்றம் சென்றவர்கள் பாராளுமன்றத்திலும் அருகருகே அமர்ந்திருந்தவர்கள். அந்த வகையில் எமது பிரச்சினையை அவர் தீர்த்து வைப்பார் என நம்புகிறேன் என தெரிவித்து பிரச்சினையை கூறினார்.

கரந்தாய் கிராமத்தில் பல ஆண்டுகளாக சுமார் 52 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் அவர்களை வெளியேற வேண்டுமென தென்னை அபிவிருத்திச் சபை இரவோடிரவாக அவர்களின் வாழ்விடங்களை பிடுங்கி எறிந்து அவர்களை நடுவீதியில் விட்டுள்ளது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் மக்கள் வழக்கு தொடர்ந்ததன் பயனாக மன்று மக்களை குறித்த காணியில் மீண்டும் செல்வதற்கு அனுமதி அளித்தது.

இந்நிலையில் தாங்கள் அமைச்சராக இருக்கின்ற நிலையில் அங்கு வாழும் வறிய மக்களுக்காக குறித்த காணிகளை அவர்களுக்கு மீண்டும் பகிர்ந்து அளிப்பதை தாங்கள் உறுதி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

குறித்த விடயம் தொடர்பில் பதிலளித்த அமைச்சர் நீதிமன்ற விடயங்களை ஆராய்ந்து அப் பகுதி மக்களுக்கே காணிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதாகக் கூறினார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# 11ஆயிரத்து 55 மில்லியன் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியில் தற்போது 11 ஆயிரத்து 55 மில்லியன் ரூபாய் பெறுமதியான வேலைத்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 2019 ஆண்டு அநேகமான நிதிகள் கிடைக்கப்பெற்று ரி.எப்.ஆர் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 83.4 மில்லியன் நிதி கிடைக்கப்பெற வேண்டியுள்ளது.2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் நூறுவீதமான வேலைத்திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.



மாவட்டத்தில் சௌபாக்கிய உற்பத்திக்கிராமம்,விளையாட்டு மைதானத்திற்கான புனரமைப்பு,ஆயிரம் கிலோமீற்றர் பாதைபுனரமைப்பு, பெருவீதி அபிவிருத்தி,நீர்ப்பாசன புனரமைப்பு,தேசிய நீர் வளங்கள் அதிகார சபை நிதி ஒதுக்கீடு,மாகாண சபையின் நிதி ஒதுக்கீடு ஊடான புனரமைப்புக்கள் என அபிவிருத்தி பணிகள் உள்ளிட்ட 11 ஆயிரத்து 55 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்று 36 ஆக அதிகரிப்பு

## நேற்று 10 பேர் இனங்காணல்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களில் மேலும் 10 பேருக்கு நேற்று முன்தினம் இரவு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 24 பேர் கடந்த இரு வாரங்களில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டிருந்தனர். இதனையடுத்து குறித்த ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் 1800 பேரில் 800 பேருக்கு பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களிடமும் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பி.சீ.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில (16) வெளியாகிய நிலையில் ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்த 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு தொகுதி முடிவுகள் நேற்று (17) வெளியாகிய நிலையில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 4500 குடும்பங்கள் காணியற்றவர்களாக உள்ளனர்

சாவகச்சேரி விசேட நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் 4500 குடும்பங்கள் காணி இல்லாதவர்களாகக் காணப்படுவதாக நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கிராமிய பொருளாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலின் போது மக்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4500 குடும்பங்கள் காணி அற்றவர்களாக காணப்படும் நிலையில் பளைப் பிரதேசத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளை நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இருந்து வருவோர் சுவீகரிக்கும் நிலைமை காணப்படுகிறது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் காணி இல்லாத குடும்பங்களுக்கும், இளைய தொழில் முயற்சியாளர்களுக்கும் குறித்த காணிகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கையை அடுத்து மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் பளையில் உள்ள குறித்த காணிகளை வடக்கு மாகாணத்தில் காணித் தேவைப்பாடுள்ள மக்களுக்கு மாத்திரமே வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தார்.

அத்துடன் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே,..

வடக்கில் உள்ளவர்களுக்கு பளையில் உள்ள காணிகளை முதலில் வழங்குங்கள். இங்குள்ளவர்களின் காணித்தேவை பூர்த்தியான பின்னரே ஏனைய பிரதேசத்தவர்கள் பற்றி சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I


45 நிமிடம்

**இவ்வினாத்தாளில் மொத்தம் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் 45 நிமிட நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். உங்கள் விடைகள் சரியானவையா என்று அடுத்த வாரம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

★ 01 ஆம் 02 ஆம் **வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள படத்துடன் மிகவும் நெருங்கிய சம்பந்தமுடைய சொற்கூட்டதைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**


01. 

1) எலிபிடிக்கும் ; காவல் செய்யும் ; காட்டில் வாழும்
2) அன்புடையது ; எலிபிடிக்கும் ; செல்லப்பிராணி
3) எலிபிடிக்கும் ; சுத்தம் செய்யும்' ; பாரம் தூக்கும்

02. 

1) அழுகு நடனம் , ஆணினம் , நீள்தோகை
2) பெண்ணினம் , நீள்தோகை, அழகுநடனம்
3) நீள்தோகை, அழகுநடனம், தாவரஉண்ணி

★ 03 **தொடக்கம்** 09 **வரையான வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

03. 

இவ்வுருவில் வெட்டி அகற்றப்பட்டுள்ள பகுதி பின்வருவனவற்றுள் எது?




04. கால்களின் எண்ணிக்கைகளை கூட்டும்போது கூட்டுத்தொகையில் வேறுபடும் பிராணிக் கூட்டத்தைக் கொண்ட விடை எது?
1) மாடுகள் நான்கு + கோழிகள் மூன்று + முயல்கள் இரண்டு
2) வாத்துகள் ஒன்பது + மான்கள் இரண்டு + மயில்கள் முன்று
3) புலிகள் மூன்று + புறாக்கள் ஆறு + சேவல்கள் மூன்று

05 **ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்**

இப்பழமொழியில் ஆனையும் பூனையும் ஒப்பிடப்படுவதன் காரணம் யாது?

1) வயதில் மூத்தவர்களையும், இளையவர்களையும் குறிப்பிடுவதற்கு.
2) உயர்ந்தவர்களையும் தாழ்ந்தவர்களையும் குறிப்பிடுவதற்கு,
3) உயரமானவர்களையும் குட்டையானவர்களையும் குறிப்பிடுவதற்கு,

06. **BALLOON, DOOR, WOODAPPLE**

மேலுள்ள மூன்று சொற்களிலும் இரண்டு தடவைகள் இடம்பெற்றுள்ள எழுத்து எது?
1) P 2) O 3) L

07. **'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'** இங்கு ஏட்டுச்சுரைக்காய் என்பது யாது?
1) ஏடுகளில் எழுதப்பட்ட சுரைக்காய்
2) கோடுகளால் வரையப்பட்ட சுரைக்காய்
3) முற்றிப் பழுத்த சுரைக்காய்.

★ **8 ஆம் 9 ஆம் வினாக்களில் (?) இக்குறி இடப்பட்டுள்ள இடங்களில் வரவேண்டிய மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

08. **கல்வீடு → தூண்டில் = கற்றூண்** என்பது போல **புல்வெளி → தரைக்காற்று** = ---?---
1) புல்தரை 2) புற்தரை 3) புற்றரை

09. **சிங்களம் → பனிப்போர் = போர்க்களம்** என்பது போல ---?--- → ---?--- = தரைக்காற்று
1) பூங்காற்று → பசுந்தரை
2) பசுந்தரை → பூங்காற்று
3) பசுந்தரை → பசுங்காற்று

★ 10 **தொடக்கம்** 13 **ஆம் வினாக்களின் அறிவுறுத்தல்களுக்கமைய சரியான விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

***''பரராஜசிங்கம் எனும் வேட்டைக்காரன் ஓநாய் ஒன்றைச் சுட்டு வீழ்த்தினான்''***

10 மேலுள்ள கூட்டில் காணப்படும் மிருகங்களின் எண்ணிக்கை யாது?
1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று

11. ''**கிளிநொச்சி, முல்லைத்தீவு, நெல்லியடி, பருத்தித்துறை** ஆகிய இடங்களைப் பார்வையிட மாணவர்கள் சென்றனர்.'' மேலுள்ள மூன்று இடப் பெயர்களிலும் மறைந்துள்ளவை எவை?
1) பறவைகள் 2) கொடிகள் 4) தாவரங்கள்

12. மணியம் என்னும் தொழிலாளி ஒவ்வொரு மணித்தியால நிறைவிலும் ஒரு முறை 5 நிமிடங்கள் ஓய்வெடுப்பார். காலை 9.00 மணிக்கு வேலை தொடங்கியவர் மாலை 7.00 மணிக்கு வேலை முடித்தார் எனின், அன்றைய நாள் ஓய்வெடுத்த மொத்த நேரம் எவ்வளவு?
1) 40 நிமிடங்கள் 2) 45 நிமிடங்கள் 3) 50 நிமிடங்கள்

13. **உயரமாக வளரும் பனையும் தென்னையும் கிளை விடுவதில்லை.** அப்படியாயின்
1) **கிளை விடும் தாவரங்கள் எதுவும் உயரமாக வளர்வதில்லை.**
2) **உயரமாக வளரும் தாவரங்கள் எதுவும் கிளை விடுவதில்லை.**
3) **கிளை விடாத தாவரங்கள் சில உயரமாக வளர்கின்றன.**


★ **கீழே காணப்படும் பிரசினத்திற்கேற்ப** 14 **ஆம்** 15**ஆம் வினாக்களின் விடையினை தெரிவு செய்க.**

| | |
|---|---|
| பண்ணையில் இருந்த கோழிகள் | 12 |
| பண்ணையில் இருந்த குதிரைகள் | 08 |
| பண்ணையில் இருந்த ஆடுகள் | 06 |
| மொத்த விலங்குகள் | 26 |

14. பண்ணையிலிருந்த விலங்குகளில், கால்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள விலங்கு யாதாக இருக்கும்
1) கோழிகள் 2) குதிரைகள் 3) ஆடுகள்

15. கோழிகள் தவிர்ந்த ஏனைய பிராணிகளின் கொம்புகளின் எண்ணிக்கை யாதாக இருக்கும்?
1) 12 கொம்புகள் 2) 16 கொம்புகள் 3) 28 கொம்புகள்


16. **மூன்று சகோதரர்களில் இருவர் பெண்கள். ஒருவர் ஆண்பிள்ளை. ஆண்பிள்ளைக்கு அக்காவும் உண்டு; தங்கையும் உண்டு.** எனவே, இத்தகவலுடன் பொருந்தும் கருத்து கீழ்வருவனவற்றுள் எது?
1) இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் அண்ணா உண்டு எனலாம்.
2) ஒரு பெண்பிள்ளைக்கு தம்பி உண்டு எனலாம்.
3) ஆண்பிள்ளைக்கு இரண்டு தங்கைகள் உண்டு எனலாம்.




17 மேலுள்ளவாறு ஒவ்வொரு நிமிடமும் இரண்டு அம்புக்குறிகளும் ஒவ்வொரு புள்ளி நெருங்கி வந்துகொண்டிருந்தால்; இரண்டு அம்புக்குறிகளும் ஒரே புள்ளியில் சந்திப்பது எத்தனையாவது நிமிடத்தில் ஆகும்.
1) 4வது நிமிடத்தில் 2) 5 ஆவது நிமிடத்தில் 3) 6 ஆவது நிமிடத்தில்

18. அருகேயுள்ள பொருட்களைக் காட்டுவதற்குப் பொருத்தமான உரு எது?

**தென்னை,
தென்னோலை,
தேங்காய்,
தோரணம்**




19. **கீழே சில சம்பவங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றினை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அமையும் விடையினைத் தெரிவு செய்க.**

A - நான் அண்ணார்ந்து பார்த்தேன்.
B - நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன்.
C - அப்போது மேலே ஏதோ ஒரு சத்தம் கேட்டது.
D - சற்றுக் களைப்பாக இருந்தது.
E - மரத்தின் கீழ் இளைப்பாறினேன்.
F - அங்கு ஒரு குரங்கு இருந்தது.

1) BDECAF 2) BDECFA 3) BEDCFA

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அஜந்த | | | | | | | | | | | | | | | |
| மெத்தியூஸ் | | | | | | | | | | | | | | | |
| | 15 | 14 | 13 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

அஜந்தவும் மெத்தியூசும் பழம் பொறுக்கும் போட்டியில் கலந்து கொண்டனர். இருவரும் போட்டி ஆரம்பமானதும் இலக்க ஒழுங்கின்படி (1, 2, 3......... என) பழங்களைப் பொறுக்க வேண்டும். ஒவ்வொரு பழங்களாக எடுத்து வந்து வாளியில் போட வேண்டும்.

★ **மேலுள்ள அட்டவணையையும் தகவல்களையும் துணையாகக் கொண்டு, கீழ்வரும் வினாக்களின் விடைகளை எழுதுக.**

20. முதலில் ஒரு பழத்தை வாளியில் போட்டவர் யாராக இருக்கும்?
1) அஜந்த 2) மெத்தியூஸ் 3) கூறமுடியாது

21. எல்லாப் பழங்களையும் முதலில் பொறுக்கிப் போட்டு, முதலிடத்தைப் பெற்றவர் யாராக இருக்கும்?
1) அஜந்த 2) மெத்தியூஸ் 3) கூறமுடியாது

22. போட்டியின் ஆரம்பத்தில் அதிக தூரம் ஓடியவர் யார்?
1) அஜந்த 2) மெத்தியூஸ் 3) கூறமுடியாது

*பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் அந்த பசுஞ்சோலையினுள் புகுந்தேன்.அங்கு கிளிகள், குயில்கள் எனப் பல பறவைகள் தம் இசைமொழிகளால் பேசிக்கொண்டிருந்தன. அங்கு பழங்கள் மஞ்சள் நிறத்திலும், காய்கள் பச்சை நிறத்திலும் குலைகுலையாக காட்சியளித்தன. கிளிகளும் அணில்களும் அங்குள்ள பழங்களை கோதிச் சுவைத்துக் கொண்டிருந்தன.*

23. பந்தியில் கூறப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில், அந்த சோலையிலுள்ள மரங்கள் -
1) பலாமரங்கள் 2) மாமரங்கள் 3) பனைமரங்கள்

24. **பசுஞ்சோலை** என்பதன் கருத்தாக அமையாத விடை எது?
1) பரந்து விரிந்த சோலை 2) பச்சைநிறச் சோலை 3) குளிர்ச்சியான சோலை

(14ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

(13 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I


★ மணியம், தேவி மற்றும் அவர்களது மகன், மகள் மற்றும் பிள்ளைகளின் பிள்ளைகள் போன்ற விபரங்களை பின்வரும் கோட்டுப் படம் காட்டுகின்றது. அதனை அவதானித்து 15 ஆம் 16 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




25. மணியம், தேவி ஆகியோரின் மகன் A எனின், மகள் பெற்ற பிள்ளை யார்?
1) E  2) F  3) G

26. தேவியின் மருமகளைக் காட்டும் எழுத்து எது?
1) B  2) C  3) D

27. கீழே உள்ள உருக்களுக்கிடையிலான தூரங்களை அவதானித்து விடை தருக.




A யிலிருந்து D வரையான தூரம் 80km எனின், B யிலிருந்து C வரையான தூரம் பற்றிக் கூறக் கூடியது
1) 26km இற்குக் குறைவாகும்  2) 26km ஐ விட அதிகமாகும்  3) 20km ஆகும்

28. | 2 ∅ 3 = 5 |  | 12 ⟁ 5 = 7 |  | 3 ⊟ 4 = 12 |

மேலுள்ள 3 கணிதச் செய்கைகளையும் அவதானித்து கீழே காணப்படும் கணிதச் செய்கை தொடரில் - ? - இக்குறியிடப்பட்டுள்ள மூன்று இடங்களுக்குமுரிய விடை முறையே -


| 4 ∅ 3 = ? ⊟ 2 = ? ⟁ ≠ 10 ? |


1) 14, 7, 4  2) 7, 14, 4  3) 4, 14, 7

29. கீழுள்ள கணிதச் செய்கையில் - ? - இக்குறியிடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய குறியீடு யாது?

| 16 ? 9 = 7 |  1) ∅  2) ⟁  3) ⊟

★ A, B, C, D, E, ஆகிய 5 பறவைகளை மூன்று சந்தர்ப்பங்களில் அவதானித்த தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. பறவைகளின் நிலைமைகள் கீழே உள்ள கூட்டினுள் காட்டியவாறு, குறியீடுகளினால் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து 19, 20, 21 ஆம் வினாக்களின் விடைகளைத் தெரிவு செய்க








30. பறந்து சென்று உணவு உண்டு விட்டு மீண்டும் பறந்த பறவை எது?
1) பறவை A  2) பறவை C  3) பறவை E

31. ஐந்து பறவைகளில் அநேகமானவை உணவு உண்பதை அவதானித்த சந்தர்ப்பம் எது?
1) சந்தர்ப்பம் -1  2) சந்தர்ப்பம் -2  3) சந்தர்ப்பம்- 3

32. சந்தர்ப்பம்-1 இல் எந்தப் பறவையிடமும் அவதானிக்கப் படாத நிலைமை எது?
1) தூங்குதல்  2) உண்ணுதல்  3) நீந்துதல்

★ 33 ஆம் 34 ஆம் வினாக்களுக்கு கீழுள்ள பொருள் அட்டவணையை அவதானித்து விடை தருக.




33. A கூட்டில் இடம்பெறவேண்டிய விலை யாது?
1) 76.00  2) 80.00  3) 84.00

34.  இதன் விலைப் பெறுமதி யாது?
1) 12.00  2) 14.00  3) 16.00

★ சரியான விடையின் கீழ் கோடிடுக.

A - உணவை / விடுவார் / எனக்கு / ஊட்டி / இன்று / வந்த

B - எனது / வேண்டும் / எப்பொழுதும் / தாயார் / நேற்று / விட்டார்

**மேலுள்ள A, B ஆகிய கூடுகளில் உள்ள சொற்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

35. A கூட்டிலுள்ள சொற்களை அதிகமாக கொண்ட வாக்கியம் எது?
1) எனக்கு எனது தாயார் நேற்று உணவை ஊட்டி விட்டார்.
2) எனது தாயார் எனக்கு எப்பொழுதும் உணவை ஊட்டி விடுவார்
3) நேற்று எனது தாயார் எனக்கு உணவை ஊட்டி விட்டார்.


36. A, B ஆகிய இரு கூடுகளிலுமுள்ள சொற்களை மட்டுமே கொண்டு அமைக்கப்பட்ட வாக்கியம் எது?
1) இன்று வந்த தாயார் உணவைச் சமைத்தார்.
2) நேற்றும் இன்றும் எனது தாயார் உணவு தந்தார்.
3) எனது தாயார் எப்பொழுதும் எனக்கு வேண்டும்.

5 தொழிலாளிகள் 6 தடவைகளில் 7 செங்கற்கள் வீதம் கொண்டு வந்து அடுக்கிவைத்தனர்.

37. இத்தகவல்களின்படி அவர்களால் அடுக்கி வைக்கப்பட்டுள்ள மொத்த செங்கற்கள் எத்தனையாக இருக்கும். (................)

38. ஒரு தொழிலாளி மொத்தமாக கொண்டுவந்த செங்கற்களின் எண்ணிக்கை யாது? (................)

★ 39 ஆம் 40 ஆம் வினாக்கள் கீழுள்ள கூடுகள் தொடர்பானவை. மூன்று கூடுகளையும் அவதானித்து விடைகளை அடைப்பினுள் எழுதுக.




39. ஒரு கூடு ஏனைய இரண்டு கூடுகளிலிருந்தும் வேறுபடுகின்றது. அக்கூட்டிற்குரிய இலக்கம் எது? (.....................)

40. முட்டையிடுதல் எனும் செயற்பாட்டோடு தொடர்புபடாத உருக்களைக் கொண்ட கூடு எது?

## மற்றவருக்கு அசௌகரியங்கள் தருகின்ற பொருத்தமற்ற நடத்தைகள்














## கடந்த வார வினாத்தாள் - II இற்கான விடைகள்

01) (I) கதிரவன் (II) செம்மஞ்சள்
(III) மேலெழுகின்றான்
(IV) நிலவுமகள்
(V) செம்மஞ்சள் நிறப் பந்து போல
(VI) சேவல் (VII) (வினா தவறு)
(VIII) கரைந்து
02) அ) பொலிந்த, தன்னிழலாம்
ஆ) I) அநாதை II) முன்னுரை
03) (I) அவை என்ன?
(II) சத்தமிடுவது யார்?
04) (I) O (II) a
05) I am Cleaning the black board
06) இதிரியட்ட என்ன
07) எங்கள்/ எங்களுடைய வீடு
08) 1. வழங்குகின்றது. 2. வரைந்தார்
3. உழைக்கிறார்கள் 4. தோட்டம்
09) 1. ✓ 2. X 3. X
10) சிலையில் எழுத்து
11. (I) காத்திருந்து ஏமாறுதல்
II) உதவுதல்/ உதவி செய்தல்
12) ஆம்பலும், இனியார்
13) (பொருத்தமான வசனங்கள்)
14) 14301 15) 2/6 16) 
17) XIX
18) (I) 6 l 250ml (II) 10l 900ml
19) 8மணித். 15 நிமி. 20) 548 Km.
21) பி. ப. 2.10/ 14:10 மணித்தியாலம்
22) (I) 24/40, 12/20, 6/10 (II) 0.6
23) 103 24) 104 மீற்றர் 25) ரூபாய் 17500.00
26) (I) 20 Cm (II) 12 சதுர செ. மீ
27) 4 தடவைகள் 28) 67 Kg 500g
29) 3/6 30) 1 31) 3 32) 1 33) 3 34) 3
35) 3 36) 1 37) 1 38) 3 39) 3 40) 4
41) 3 42) 1 43) 2 44) 1 45) 3 46) 2
47) 2 48) 3 49) 1 50) 3 51) 3 52) 3
53) 3 54) 3 55) 1 56) 3 57) 3 58) 2
59) 3 60) 1

# உலக வாழ்வின் சோதனைகள்

இவ்வுலகிலுள்ள மனிதர்கள் பலவிதமான நிலைகளில் வாழுகின்றனர். அப்படி பலவிதமான அமைப்பில் படைத்திருப்பது இறைவனின் அத்தாட்சிகளில் ஒன்றாகும். இவ்வாறு மனிதர்களை மாத்திரமல்ல, இவ்வுலகிலுள்ள உயிரினங்கள் உயிரற்றவைகள் என்பனவற்றை எல்லாம் இவ்வுலகில் பல்வகைத்தன்மைகளில் படைத்திருப்பதன் மூலம் இவ்வுலகத்தின் இயக்கப்பாட்டில் ஒரு சமனிலையை இறைவன் ஏற்படுத்தியுள்ளான்.

“மேலும் வானங்களையும் பூமியையும் அவற்றிற்கு இடையே இருப்பவற்றையும் நாம் விளையாட்டிற்காக படைக்கவில்லை.” (அல்குர்ஆன் 21: 16)

மனிதன் இவ்வுலகில் வாழும்போது பல விதமான வடிவங்களில் சோதிக்கப்படுவான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அந்த வகையில், சோதனை என்பது ஒரு மனிதனுக்கு ஆக்கத்தினூடாகவும் அல்லது இழப்பினூடாகவும் வர முடியும்.

மனிதர்களைப் பொறுத்தவரை இறைவன் ஒரு சாராருக்கு செல்வாக்கான நிலைமைகளை அதாவது பட்டம், பதவி, அழகு, அந்தஸ்து, பணம், சொத்துக்கள் வசதி வாய்ப்புக்கள், நல்ல பிள்ளைகள், நல்ல குடும்பம், நல்ல மனைவி, தலைமைத்துவம், நிருவாகத் திறன், அறிவு, திறன், மனப்பாங்கு போன்ற அம்சங்களையும் மனிதர்களின் ஆசைகள், எதிர்பார்ப்புக்கள், விருப்பங்கள் என்பனவற்றை அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றால் போல் அமைத்துக் கொடுத்து அவர்களை இவ்வுலகில் வாழ வைத்திருக்கின்றான். இதுவும் சோதனைகள்தான் என அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

“உங்கள் பொருள்களும் உங்கள் மக்களும் (உங்களுக்கு) சோதனைதான். ஆனால் அல்லாஹ்விடமே மகத்தான (நற்) கூலியிருக்கிறது.”
(அல்குர்ஆன் 64: 15)

ஒரு சாராருக்கு வறுமை, நோய், பட்டினி, பயம், முரண்பாடுகள், பிரச்சினைகள், யுத்தங்கள், பதற்றம், அச்சம், இழப்புக்கள், சேதங்கள், உயிராபத்துக்கள், குறைபாடுகள், ஏமாற்றங்கள், நிராசைகள், அதிருப்தி நிலைகள், குடும்ப முரண்பாடுகள், தொழில் பிரச்சினைகள் போன்றனவற்றைக் கொண்டும் சோதிக்கின்றான்.

இது பற்றி இறைவன் அத்திருமறையில் குறிப்பிடும்போது,

“நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள் மற்றும் விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்புக்களாலும் சோதிப்போம். ஆனால், பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!”
(அல்குர்ஆன்: 2 – 155)

## அச்சம்

மனிதனை அச்சத்தால் சோதிப்பதானது ஒரு கடினமான சோதனையாகும். இந்த அச்சமானது அவனது மனதில் ஏற்படுகின்ற மனவெழுச்சி சார்ந்த ஒரு சாதாரண உணர்வாகும். இது அளவு கடந்து செல்லும்போது மனிதன் தனது நிலையிலிருந்து பிறழ்வதனைக் காண முடியும்.

உலகில் மனிதன் பலவிதமாக அச்சம் கொண்டிருப்பதனை அன்றாடம் அவதானிக்க முடிகிறது.

ஒரு மனிதனை அச்சப்பட வைக்கின்ற காரணிகளாக உலகில் அதிகாரம், அடக்குமுறை, ஆயுதம், மரணம், அச்சுறுத்தல், நோய், அழிவுகள் போன்ற ஏராளமான விடயங்கள் காணப்படுகின்றன.

ஒரு மனிதன் அல்லது ஒரு சமூகம் தொடர்ந்தேர்ச்சியாக இவ்வாறான அச்சப்பாடான ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுமாக இருந்தால், அது காலப் போக்கில் நலிவடைந்த சமூகமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

## பசி:

இறைவன் மனிதனை சோதிக்கின்ற இன்னுமொரு விடயம்தான் அவனுக்கு கடும் பசியை ஏற்படுத்துவது. பசி ஒரு மனிதனில் ஏற்படுகின்ற இயல்பான ஒரு உணர்வாகும்.

மனிதனின் கட்டுப்பாட்டை மீறினால் மரணம் வரை அவனைக் கொண்டு செல்லக்கூடியது. இன்று உலகில் பல நாடுகள் உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படை வசதிகளின்றி பட்டிணிச்சாவினை எதிர்கொண்டுள்ளதனைக் காண முடியும்.

வறுமையைக் கொண்டு ஏற்படுத்தப்படும் சோதனையானது ஒன்றில் இயல்பான ஒன்றாக இறைவனால் தனி மனிதன், குடும்பம் அல்லது ஒரு சமூகத்தின் மீது ஏற்படுத்தப்படலாம் அல்லது வல்லரசு நாடுகள் தனது கட்டுப்பாட்டிற்குள் வராத நாடுகளை, தனது கொள்கைகளை தீர்மானங்களை ஏற்று கீழ்ப்படியாத நாடுகளை பழிவாங்குவதற்காக, அந்நாட்டில் வறுமையை அல்லது பட்டினியை ஏற்படுத்தவதற்காக பொருளாதார ரீதியிலான தடைகளை விதிப்பதனைக் காண முடியும்.

இவ்வாறான வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் பசி அல்லது பட்டினியை எதிர்கொள்கின்ற தனிமனிதனாக அல்லது குடும்பமாக அல்லது ஒரு சமூகமாக சோதிக்கப்படும் நிலையில், அதிலிருந்து மீள்வதற்காக பல பஞ்சமா பாதகங்களைக் கையாண்டு முயற்சிப்பதனைக் காண முடியும்.

அல்லது அதற்கு முகங்கொடுக்க முடியாது உயிரை மாய்ப்பதனையும் காண முடியும்.

“வறுமை இறை நிராகரிப்பிற்கு இட்டுச் செல்லும்” என்ற நபிகளாரின் பொன்மொழி கூட பசியினால் சோதிகப்படுவதன் கொடூரத்தை நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

## இழப்புக்கள்:

மனிதன் சோதிக்கப்படுகின்ற இன்னுமொரு வழிமுறைதான் அவனது உயிர், உடைமை, மானம், கௌரவம், அந்



தஸ்த்து, பதவி, அதிகாரம் போன்றன வற்றில் அவ்வப்போது ஏற்படுத்தப்படுகின்ற இழப்புக்களாகும்.

மனிதன் இழப்புக்களை எதிர்கொள்கின்ற நேரம் அதற்கு முகங்கொடுக்க முடியாது திணறுவதனை உணரமுடியும். உதாரணமாக, தான் உயிருக்கு உயிராக நேசித்த ஒரு மனிதனை, தனது பொருளாதாரத்தை, தனது பதவியை இழக்கின்ற போது, மனிதன் தனது உயிரையே மாய்க்கின்ற நிலைமையை இவ்வுலகில் காண முடியும்.

## பிணி:

மனிதன் சோதிக்கப்படுகின்ற இன்னுமொரு வழிமுறைதான் அவனது உயிருக்கு மற்றும் ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலான பிணிகளைக் கொண்டு சோதிப்பது. இவ்வுலகில் தொற்று நோய்களைக் கொண்டும் தொற்றா நோய்களைக் கொண்டும் மனிதன் சோதிக்கப்படுவான்.

இதில் தொற்று நோய்களைக் கொண்டு உலகில் பல கட்டங்களில் மனிதன் சோதிக்கப்பட்டிருக்கின்றான்.

இன்று உலகம் ‘கொரோனா கொவிட் 19’ என்ற வைரஸ் கிருமியைக் கொண்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உலகில் சுமார் 200இற்கு மேற்பட்ட நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. உலக வல்லரசு நாம்தான் என தம்பட்டமடித்த ஜாம்பவான் நாடுகள்கூட திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் உச்சத்தை அடைந்திருப்பதாகக் கூறிக் கொள்ளும் இன்றைய நவீன உலகமானது செய்வதறியாது விழி பிதுங்கி நிற்கின்றது. சுகாதாரத்தில் உச்ச நிலையை அடைந்த நாடுகள் கூட இயலாமைக்குள் அகப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மடிந்துள்ளன. ஒரே குடும்பத்திற்குள்ளேயே அதன் அங்கத்தவரை தனிமைப்படுத்தும் அளவிற்கு நிலைமை விகாரமடைந்து கொண்டிருக்கின்றது. பாதிக்கப்பட்ட நாடுகளின் அரச நிருவாகங்கள், பொருளாதாரம், கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன. மனிதர்களினது கூட்டான செயற்பாடுகள் அனைத்தும் அவர்களது ஆரோக்கியம் கருதி தடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சோதனைகள் மனிதனைப் பொறுத்தவரையில், தனி மனித அடிப்படையில் அல்லது முழுக் குடும்பத்திற்கும் அல்லது ஒரு சமூகமாக சோதிக்கப்பட முடியும்.

அபூ ஹம்தான்
நாச்சியாதீவு

# 'வறுமையும் ஒரு சோதனையே'

*அபூ ஸயீத் (ரலி) அவர்கள் ; நபி (ஸல்) அவர்களிடம் தம்முடைய ஏழ்மையைப் பற்றி முறையிட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘அபூ ஸயீத் அவர்களே! பொறுமையை மேற்கொள்ளுங்கள். உங்களில் யார் என்னை நேசிக்கிறாரோ அவரை நோக்கி, பள்ளத்தைநோக்கிப் பாய்கின்ற வெள்ளத்தை விட விரைவாக அல்லது மலை உச்சியிலிருந்து கீழ்நோக்கி விழுகின்ற வெள்ளத்தைப் போல வறுமை விரைந்தோடி வரும்’ என்று கூறினார்கள்.*

***அறிவிப்பவர் : ஸயீத் பின் அபீ ஸயீத்(ரலி),***

***நூல் : அஹ்மத்***

*அல்லாஹ்வை நம்பியவர்கள் வறுமையால் சோதிக்கப்படுவார்கள் என்பதை மேற்கண்ட வசனங்களும் நபி மொழியும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.எத்தனையோ நபிமார்கள் இந்த வறுமையினால் பீடிக்கப்பட்டுள்ளனர். நபி யாகூப் (அலை) அவர்கள் மிகக் கடுமையான ஏழ்மை நிலையில் வாழ்ந்திருக்கிருக்கிறார்கள். அவர்கள் ஏழ்மையின் காரணமாக தன்னுடைய மகன்களை அருகிலுள்ள நாட்டின் மன்னரிடம் சென்று உணவுப் பொருட்களை வாங்கி வருமாறு அனுப்பியதாக அல் குர்ஆன் கூறுகிறது. அவர்கள் அவரிடம் (யூஸுஃபிடம்) வந்தனர். ‘அமைச்சரே! எங்களுக்கும், எங்கள் குடும்பத்தினருக்கும் வறுமை ஏற்பட்டுள்ளது.*

*அற்பமான சரக்கு களையே கொண்டு வந்திருக்கிறோம். எனவே எங்களுக்கு முழுமையாக உணவுப் பொருள் தருவீராக! எங்களுக்குத் தானமாகவும் தருவீராக! தானம் செய்வோருக்கு அல்லாஹ் கூலி வழங்குவான்’ என்றனர்.*

ஆலமுல் இஸ்லாம்
– அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் கூறுகிற இல்லறம்

*மனிதன் தேடுகிற மன அமைதியை அல்லாஹுத்தஆலா இல்லறத்தில் அமைத்துள்ளான்.இறைவனை அடைவதற்கும்,இறையன்பை பெறுவதற்கும் குடும்பவாழ்க்கை ஒருபெரும் தடையாகவே உலகில் தோன்றிய எல்லா மதங்களும் பேசியது.*

*ஆன்மீகத்திற்கு திருமண வாழ்க்கை எந்தவகையிலும் சாத்தியப்படாது என்றும், துறவரமே கடவுளை நெருங்குவதற்கான சரியான வழி யென்றும் காலம் காலமாக பேசிக்கொண்டுவந்த மதங்களுக்கு இடையில் இஸ்லாம் தோன்றியது.*

*திருமண உறவே அல்லாஹ்வின் அன்பை பெறுவதற்கான மிகச் சிறந்த சாதனம் எனும் புரட்சிகரமான கருத்தை இஸ்லாம் முன்வைத்தது.*

*இஸ்லாத்தில் துறவரம் இல்லை என்று நபி ஸல் அவர்கள் பகிரங்கமாக அறிவிப்புச்செய்தார்கள்.*

*ஆன்மீகத்தில் ஜொலிக்க நினைக்கும் ஒவ்வொருவரும் குடும்ப வாழ்க்கையை கடந்தாக வேண்டும்.*

**ஆன்மீகத்தில் ஜொலிக்க நினைக்கும் ஒவ்வொருவரும் குடும்ப வாழ்க்கையை கடந்தாகவேண்டும். நிகாஹ்வுக்கும் ஈமானுக்கும் மிகநெருங்கிய தொடர்பு இருப்பதாக இஸ்லாம் கூறுகிறது. திருமணம் ஈமானில் பாதி என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.**

*நிகாஹ்வுக்கும் ஈமானுக்கும் மிகநெருங்கிய தொடர்பு இருப்பதாக இஸ்லாம் கூறுகிறது.*

*திருமணம் ஈமானில் பாதி என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.*

*அவ்வாறே! உங்களில் ஒருவர் மணமுடித்துவிட்டால் ஈமானின் பாதியை பூர்த்தி செய்துவிட்டார். மீதி வாழ்க்கையில் அல்லாஹ்வை அஞ்சி வாழ்ந்து கொள்ளட்டும் என்றும் நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.*

*ஒரு முஸ்லிமின் ஈமானை உறுதிசெய்வதிலும், முழுமைப்படுத்துவதிலும் திருமணத்திற்கு முக்கிய பங்குண்டு என்பதை அழகாக கூறுகிறார்கள்.*

*திருமணம் செய்யாதவன் தீனில் குறையுள்ளவனே.*

*அவனின் வணக்கமும் கூட முழுமை அடைவதில்லை என இப்னு அப்பாஸ் ரலி அவர்கள் கூறுகிறார்கள்.*

*அதனால்தான் உலகில் நிறைவாக வாழ்ந்தவர்களெல்லாம் 'நிகாஹ்' செய்தே வாழ்ந்துள்ளனர்.*



*'உலகில் உமக்கு முன்னால் பல தூதர்களை அனுப்பினோம் அவர்களுக்கு மனைவிமார்களும் மக்களும் உண்டு' அல்லாஹ் கூறுகிறான்.*

*படைப்புக்களில் அல்லாஹ்விடம் அதிகமான நெருக்கம்பெற்ற நபிமார்கள் யாவரும் திருமணம் செய்தவர்கள் தான் என்பதை இவ்விடத்தில் கவனிக்க வேண்டும்.*

*மனைவி மக்களை பெறுவதும் கூட பெரும் பாக்கியமாகும்.அதனால் தான் ஹழ்ரத் அலி ரலி அவர்கள் ஐந்து அருளை பெற்றவர்கள் ஆயுளின் அனைத்து நலவுகளையும் பெற்றவராவார் என கூறினார்கள்.*

*1.அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் நாவு.*

*2.அல்லாஹ்வை நினைவு கொள்ளும் உள்ளம்.*

*3.துன்பங்களில் பொறுமை கொள்ளும் உடல்.*

*4.சொந்த ஊரில் ரிஸ்க் பெற்றவர்.*

*5.நல்லொழுக்கமுள்ள மனைவி.*

*இந்த ஐந்தில் குறிப்பாக நல்லொழுக்கமுள்ள மனைவியை பெற்றவர் உலகிலேயே சுவனத்தை பெற்றவராவார்.*

மௌலவி இல்யாஸ்,
காத்தான்குடி

# மறுமையில் நான்கு கேள்விகள்....?

*வாலிபத்தை எவ்வாறு கழித்தாய்? என்ற வினாவுக்கு விடை கொடுக்காமல் ஓர் அடியானின் பாதம் மறுமையில் நகர முடியாது என்பதை பின்வரும் ஹதீஸ் எச்சரிக்கின்றது. ‘மறுமை நாளில் ஓர் அடியான் நான்கு வினாக்களுக்கு விடை அளிக்கும் வரை அவனது கால்கள் இரண்டும் நகர முடியாது’. அவை....*

*1. தனது வாழ்க்கையை எவ்வாறு கழித்தாய்?*

*2. தனது வாலிபப் பருவத்தை எந்த விடயங்களில் ஈடுபடுத்தினாய்?*

*3. செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து எவ்வாறு செலவு செய்தாய்?*

*4. பெற்ற அறிவின் மூலம் என்ன செய்தாய்? (ஆதாரம் – தபராணி)*

*மேற்கூறிய ஹதீஸ்களின் மூலம் இளமை பருவம் வாழ்கையில் எவ்வளவு முக்கியமானது என்பதை புரிந்து கொள்ளலாம்.*

*ஒரு மனிதனின் வாழ்க்கைக் கட்டடத்தில் வாலிபப் பருவம் சிக்கல்களும் போராட்டங்களும் நிறைந்தது. அதில் அவதானமாகவும் நிதானமாகவும் செயற்படுவது நமது கடமையாகும். விட்டில் பூச்சிகள் விளக்கின் ஒளியை பூவாக நினைத்து ஏமாந்து அதில் தமது உயிரை மாய்த்துக் கொள்வது போல சில இளைஞர்கள் தமது வாலிபத்தை அழித்துக் கொள்கின்றனர். தமது விரல்களாலே தமது கண்களை குத்திக் கொள்கின்றனர்.*

# பிறக்கின்ற குழந்தைகள்...

பிறக்கும் போது எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகவே பிறக்கின்றார்கள். அவர்கள் தீயவர்களாக ஆவது பெற்றோர்கள் வளர்க்கும் முறையில் தான் உள்ளது.

பெற்றோர்கள் உண்மையான முஸ்லிம்களாக இருந்தால் பிள்ளைகளும் அவர்களைப் போன்றே தூய இஸ்லாமியச் சிந்தனையில் வளர்கிறார்கள். பெற்றோர்கள் பெயரளவில் முஸ்லிம்களாக இருந்தால் குழந்தைகளும் பெயரளவில் முஸ்லிம்களாக வளர்கிறார்கள். பெற்றோரின் கொள்கை கோட்பாடு குண நலன்கள் குழந்தைகளிடத்தில் பிரதிபலிப்பதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

இதற்கு மாற்றமாக நல்லவர்களுக்குக் கெட்ட குழந்தைகளும் கெட்டவர்களுக்கு நல்ல குழந்தைகளும் பிறப்பதுண்டு. ஆனால் இது குறைவாகும். ”ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதைப் போல, எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)தில் தான் பிறக்கின்றன. விலங்குகள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்க சேதப்படுத்துவது போல்) பெற்றோர்கள் தம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டுத் திருப்பி) யூதர்களாகவோ, கிறித்தவர்களாகவோ, நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கி விடுகின்றனர் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி), நூல்: புகாரி**

எனவே, நம் குழந்தை ஒழுக்கத்திலும் மார்க்கத்திலும் நன்நடத்தையிலும் நற்குணத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்று நினைத்தால் முதல் நம்மிடத்தில் இவையெல்லாம் ஏற்பட வேண்டும். நமது நடவடிக்கைள் ஒவ்வொன்றும் இஸ்லாத்திற்கு உட்பட்டு அமைய வேண்டும். குழந்தைகளைப் பெற்றெடுப்பது பெரிய விஷயமல்ல. ஏனென்றால் ஆடு மாடு கோழி குதிரை இன்னும் கோடிக்கணக்கான உயிரினங்களும் குட்டியிடத் தான் செய்கின்றன. பெற்றெடுத்த குழந்தைகளை சரியான அடிப்படையில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்ப்பதில் தான் பெற்றோரின் திறமையுள்ளது.

# அல்லாஹ்வின் நிழலின் ஏழ நபர்கள்

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அல்லாஹ் ஏழு நபர்களுக்கு நிழல் கொடுப்பான்.*

*1. நீதமாக நடந்து கொண்ட ஆட்சியாளன்.*

*2. அல்லாஹ்வின் வணக்கத்திலேயே வளர்ந்த இளைஞன்.*

*3. தனது உள்ளத்தைப் பள்ளியுடன் தொடர்பு படுத்திக் கொண்டிருந்த மனிதன்.*

*4. அல்லாஹ்வுக்காக நேசம் கொண்டு அதற்காகவே இணைந்து அதற்காகவே பிரிந்த இரு மனிதர்கள்.*

*5. அந்தஸ்தும் அழகுமுள்ள பெண் தவறு செய்ய அழைத்தபோது நிச்சயமாக நான் அல்லாஹ்வைப் பயப்படுகிறேன் எனக் கூறிய மனிதன்.*

*6. வலது கை கொடுப்பதை இடது கை அறியாவண்ணம் தர்மம் செய்யும் மனிதன்.*

*7. தனித்திருந்து அல்லாஹ்வை நினைவு கூர்ந்து கண்ணீர் வடித்த மனிதன்.*

*இது ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் தான். அவர்களும் தம் செயல்கள் குறித்து விசாரிக்கப்படுவார்கள்.*

*அவர்களின் செயல்கள் நல்லவையாகயிருந்தால் நன்மையும் தீயவையாக இருந்தால் தீமையும் உண்டு.*

*கேள்வி கணக்கும் கூலியும் தண்டனையும் ஆண்களுக்கு இருப்பது போலவே பெண்களுக்கும் உண்டு.*

# “முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் ...”

# தமிழர்களின் காதல் வாழ்வியலை படம் பிடிக்கும் குறுந்தொகை



சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுவது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும் இவ்விலக்கிய நூல்கள் பழந்தமிழரின் நற்பண்புகளையும் சமூக வாழ்வியலையும் எடுத்தியம்புகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்று வாழ்வியல் நெறியை வகுத்து செம்மையாக வாழ்ந்துள்ளமையை சங்கத்தமிழ் நூல்கள் மூலம் அறியமுடிகிறது.

சங்கத் தொகை நூல்களுள் எட்டுத் தொகையில் ஒன்று குறுந்தொகை. இது ‘நல்ல’ என்ற அடைமொழி பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இந்நூல் தமிழர்களின் வாழ்வியலைப் படம் பிடிக்கும் பெட்டகமாக விளங்குகிறது உவமையழுரும் ஊன்றிப் படிப்பார்க்கு இன்பம் ததும்பச் செய்யும் இயல்புடையதாக அமைந்துள்ளது. பூரிக்கோ தொகுத்த குறுந்தொகை வழியே சங்க காலத் தமிழர்களின் வாழ்வியல் வழக்காறுகளைக் காண்பதே.

சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி வியர்த்தமையை பல்வேறு பாடல்கள் மூலம் உணரமுடிகிறது. புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும்,தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவக்குகிறார்கள். தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் வளர்ந்தவள். சமைத்தறியாதவள் இருப்பினும் தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆவல் கொண்டாள்.

அதன் பொருட்டு தயிர்க் குழம்பைத் தயார் செய்கிறாள். தோய்ந்த கட்டித் தயிரைக் கையாற் பிசைந்து கையைக் கழுவாமல் அப்படியே தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள். குழம்பைத் தாளிக்கும் போது ஏற்பட்ட புகை அவளது மையுண்ட கண்களை கலங்கச் செய்தது. இவ்வாறு அவள் அன்புடன் செய்த குழம்பைக் கணவனுக்கு இட்டாள். அவன் அது மிகவும் இனிதாக உள்ளதாகப் பாராட்டி மகிழ்ந்து உண்கிறான் அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது.

**“முளிதயிர் பிசைந்த காந்தள்**
**மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீ,**
**குவளை உன்கண் குய்ப்புகை கமழக்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதன் மகிழ்ந்தன்று**
**ஒண்ணுதல் முகனே”**
(குறுந் 167)

இந்நிகழ்வின் மூலம் இல்லாள் செய்த உணவின் தன்மை எத்தகையதாயினும் அவள் அன்புடன் செய்ததால் அதனை இனிது என்று பாராட்டி மகிழும் தலைவனின் மனப்பாங்கையும் நற்பண்பையும் உணரமுடிகிறது.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வாறு அன்பு பூண்டு ஒழுக வேண்டும் என்ற நற்கருத்தை வலியுறுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

**பொருள்வழிப் பிரிவைப் போற்றும் தலைவி**

நம் முன்னோர்கள் சேர்த்து வைத்த செல்வத்தைக் கொண்டு செலவு செய்பவர்களை குறுந்தொகை சாடுகிறது.

தம் முன்னோர்களின் செல்வத்தை வைத்திருப்பவர்கள் செல்வந்தர்கள் என்று கருதமாட்டார்கள் தாமாக ஈட்டித் தொகுத்த செல்வத்தை இல்லாதவரது வாழ்க்கையானது வளமுடையதாக இருப்பினும் பிறரிடம் பொருள் வேண்டி இரத்தலைக்காட்டினும் இழிவுடையதாகும் என்று தோழிக்கு தலைவி உரைப்பதாக கீழ்காணும் பாடல் அமைகிறது.

“உள்ளது சிதைப்போர் ஊர் எனப் படாஅர்; இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச் சொல்லிய வன்மை தெளியக் காட்டிச் சென்றனர் வாழி – (குறுந் 283)

எனவே ஒவ்வொரு தலை மகனும் தானே முயன்று செல்வம் ஈட்டி வாழ்தல் மிகவும் அவசியமான பண்பாக குறுந்தொகை சுட்டுகிறது.

வினையின்கண் தலைவியைப் பிரிந்து செல்ல தலைவன் முற்பகிறான். இதனை அறிந்த தலைவி வருந்தி உடல் மெலிவுற்றாள். அவளைத் தேற்றும் நோக்கில் தோழி

“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்ளுதல் மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என நமக்கு உரைத்தோரும் தாமே அழாஅல் தோழி! – அழுங்குபர் செலவே (குறுந் 135)

பொருள் தேடிச் செல்லுதல் என்பது ஆண்களுக்கு உயிரைப்போன்றது. அவர் தம் இல்லக் கிழத்தியாகப் போகும் நீயும் அவருக்கு உயிர்போன்றவள். எனவே நீ வருத்தத்துடன் வாடி நின்றாள் அவர் வினையின்கண் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு விடுவார். ஆதனால் நீ வருந்தி அழுவதைக் கை விடுவாயாக. அவர் வினையை வெற்றியுடன் முடித்துத் திரும்புவான் என்று கூறுகிறாள்.

இதன் மூலம் பொருள் ஈட்டும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்று திரும்புவதை சங்ககால மக்கள் போற்றி வந்தமையை அறியமுடிகிறது.

தலைவன் மீது தலைவி கொண்ட அன்பை அளவிட முடியாது என்பதை பின்வரும் பாடலால் உணரலாம்.

நிலத்தினும் பெரிதே:
வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே – சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும்
நாடனொரு நட்பே (குறு 3)

மேலும் தலைவனைப் பிரிந்திருக்க நேர்ந்த தலைவி தன் ஆற்றாமையால் தோழியிடம் பின்வருமாறு கூறுகிறாள்.

பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன
நீர் உரை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமொடு . . . ஒரு வேடம் ஆகிய
புன்மை நாம் உயிற்கே (குறு 57)

அதாவது தமக்கு இடையே ஒரு பூவினால் தடைபடும் நேரம் ஒரு நொடியானாலும் ஓர் ஆண்டு கழிந்தது போல துன்பத்தை உண்டாக்குவதாக உணர்ந்து வாழும் மகன்றிற் பறவையின் நிலைபோலத் தான் தலைவனைப் பிரிந்து வாடுவதாக கூறுகிறாள் மேலும் முன்பு இருவரும் ஒருயிராய் இருந்த நாங்கள் பிரிந்த போது உடல் வேறு உயிர்வேறாக பிரிந்து இருப்பதாக குறிப்பிடுகிறாள். இப்பாடலில் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பிற்கு மகன்றிற் பறவையை உவமையாக சுட்டுவது சிறப்பாகும்.

குறுந்தொகை வழியாக சங்ககால மக்கள் அகத்திலும் புறத்திலும் தன்னிகரில்லாத வகையில் வாழ்ந்துள்ளனர் குறிப்பாக காதல் வாழ்விலும் புரிதலுடனும் விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பக்குவத்துடனும் இருந்ததை உணர முடிகிறது..

பேராசிரியர்
ப.மணிகண்டன் ...

# கலைக் கதம்பம்

சைந்திரியன்

# மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம்

## மாவட்ட செயலாளர் தலைமையில் அங்குரார்ப்பணம்









தேசிய மரபுரிமைகள், அருங் கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் திட்டத்திற்கமைய இலங்கையின் சகல மாவட்டங்களிலும் எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்படவுள்ளது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான எழுத்தாளர் சங்கம் உருவாக்குவது தொடர்பான கூட்டம் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரனினதும் மாவட்ட கலாசார திணைக்களத்தினதும் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர கே. கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சின் சுற்று நிரூபத்திற்கமைய மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேரை கொண்டதாக மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்படவேண்டும். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேர் வீதம் மொத்தமாக 42 நபர்களை ஒவ்வொரு பிரதேச செயலாளர்களினாலும் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

இந் நிகழ்வில் எழுத்தாளர் சங்க உறுப்பினர் தெரிவுகள் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்க நிறைவேற்றுத் தலைவராக மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் செயற்படுவதுடன் தலைவராக கலாநிதி. முருகு தயாநிதி, உப தலைவர்களாக இரா. தவராஜா,கே. நௌஷாத், செயலாளராக வீ. மைக்கல் கொலின், உப செயலாளராக திருமதி. சுதாகரி மணிவண்ணன், பொருளாளராக கதிரவன். ரீ. இன்பராசா மற்றும் ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக திருமதி. ரூபி வலன்டினா பிரான்சிஸ், ஜீனைதா ஷெரீப், ஏ. சீ. அப்துல் ரஹீமான், கே. அருளம்பலம், கலாபூஷணம் கே. தணிகாசலம், ஜிப்ரி ஹசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். எழுத்தாளர்களின் செயற்றிறனை விருத்தி செய்தல்,துறைசார் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்தல், சிறந்த ஆக்கங்களை உருவாக்குதல், எழுத்தாளர்களுக்கான உதவி, வழிகாட்டல், ஆலோசனை என்பனவற்றை ஒரு கட்டமைப்பு ரீதியான செயற்பாட்டிற்கூடாக வழங்குவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந் நிகழ்வில் மாவட்ட கலாசார இணைப்பாளர் எம்.ஏ.சீ ஜெய்னுலாப்தீன், மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. வை. தனுஷியா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

படம், தகவல்; வெல்லாவெளி
க.விஜயரெத்தினம் தினகரன் நிருபர்

# முதல் சந்திப்பு



உன் முகம்
பார்க்க போகும் ஆவலில்
என் முகத்தை அத்தர் கொண்டு அலசி
வானம் என்னும் கொடியில்
காய்ந்துக் கொண்டிருந்த வானவில்லை
எடுத்து மடித்து முகம் துடைத்துவிட்டு
காற்றை முந்திக்கொண்டு
ஓடோடி வந்தேன்!

வரும் வழியில் எல்லாம்
முகில்கள் சேர்ந்து
முத்துத்தூரல் பொழிந்தது!
சாரல் மழையில்
நான் கொஞ்சம் நனைந்தேன்
நீ இருக்கும் இடம் தேடி
அங்கும் இங்குமாய் அலைந்தேன்!

உன் தேன் முகம் கண்டேன்
கண்டதும் திகைத்து நின்றேன்
இவ்வுலகம் யாவும் இருண்டு
பகலில் நிலவொன்று
என் கண் முன் நின்று ஒளிர கண்டேன்..
சந்தித்ததும் தித்தித்தது!
நெஞ்சம் பூரித்தது!
பொன் புன்னகை மொழிந்தாய்
என் நாணத்தின் திரை களைந்தாய்!

முகங்கள் கண்ட பின்
மௌனத்தில் கரையாமல்
இடைவெளியின்றி இதழ்
சிரித்துப் பேசி மகிழ்ந்தோம்..

உன்னிடம் பேசிய
சில மணித்துளிகள்
இதயத்தில் இனிப்பாய் இனித்தது...

பிரியாவிடை பெற்று
அறை விட்டு வெளியே வந்த நான்
விறுவிறுவென்று நடந்து
வீடு சென்று சேர்ந்தேன்
வீடு வந்த பின்பு தான் தெரிந்தது
நான் இருந்த இறுக்கையிலேயே
என் இதயத்தை மறந்து வைத்துவிட்டு

வந்துவிட்டேன் என்று..!

பெண்ணே!
மறுமுறை உனைக்கான வரும்போது
மறக்காமல் பெற்றுக் கொள்கிறேன்
மனதை பத்திரமாக பார்த்துக் கொள்
உன் முதல் சந்திப்பின்
நீங்கா நினைவுகளுடன் நான்!

சேக் உதுமான்

# முத்தமிழ் வித்தகரின் ஜனன தினத்தையொட்டி

## இணையவழி திறந்த கவிதைப் போட்டி



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் ஜனன தினத்தை கொண்டாடுமுகமாக உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் காரைதீவு மக்களிடையே மாபெரும் கவிதைப் போட்டியொன்று இணையத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் ஒஸ்கார் இணையமூடாக நடத்தும் இப்போட்டியில் கலந்து பெறுமதிமிக்க பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுக்குமாறு அனைத்து காரைதீவு கவிஞர்களையும் அன்புடன் அழைக்கிறது.

இப்போட்டியில் இலங்கையிலிருந்து 10 போட்டியாளர்களும் ஏனைய நாடுகளிலிருந்து 10 போட்டியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதிப்போட்டியில் அவர்கள் பங்கெடுப்பர்.

வெற்றியாளர்கள் இலத்திரனியல் பொது வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்யப்படுவர்.

ஆர்வமுள்ள கவிஞர்கள் இந்த உறுப்பினர்களைத் தொடர்புகொண்டு போட்டி சம்பந்தமான மேலதிக விபரங்களைப் பெற்று கொள்ள முடியும்.

லாவண்யன் திருச்செல்வம்,சஞ்சீவ் மயில்வாகனம்

அவுஸ்திரேலியா, சத்தியஜித் நடேசலிங்கம்,சுலக்ஷன் லோகராஜு இலங்கை

போட்டியின் உயர் தரத்தை உறுதிசெய்ய சில புதிய கவிதை தலைப்புகளை ஒஸ்கார் வழங்குகின்றது,

அந்தவகையில்

★ காரைதீவு சுவாமி விபுலாநந்தர் புகழ் கரையில்லா விண்ணை எட்டட்டும்.
★ காரேறு மூதூர் முத்தமிழ் முனி புகழ் காலமெல்லாம் பரவட்டும்.
★ காரைதீவு பெற்றிட்ட கடாட்ச முனி விபுலாநந்த அடிகள் புகழ் வீசட்டும் பாரினிலே.
★ காரைதீவு தந்த தமிழ் பேராசான் சுவாமி விபுலானந்த அடிகள்.

வயதெல்லை கிடையாது உலகெங்கும் பரந்து வாழும் உறவுகள் இதில் பங்கு பெறலாம். இறுதி வெற்றியாளர் இணையவழி திறந்த வாக்கெடுப்பின் மூலமே தெரிவுசெய்யப்படுவர் .

போட்டிகளின் நம்பகத் தன்மையை ஒஸ்கார் நிர்வாக்க் குழு உறுதி செய்யும்.

தகவல்: விவேகராசா

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்.

**மக்கள் வங்கி**

**பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை**

## மொனராகலை கிளை

**காணித்துண்டம் :**

1. எல்லாவற்றுடனும் சேர்த்து பரப்பளவில் ஒரு றூட் இருபத்தாறு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுக்களைக் (A:0 - R:1- P:26.90) கொண்டதும், நூகளுகஹலந்தபூ எனவழைக்கப்படுவதும், பதுளை உரிமம்பெற்ற நில அளவையாளர் திரு. எம்.ஹியுவேர்ட் ஸ்மைல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996.06.16 ஆந்திகதிய 4612ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதுமான காணி. அக்காணி, பரப்பளவில் மூன்று றூட் மற்றும் பதினாறு பேர்ச்சுக்களைக் (A:0 - R:3- P:16) கொண்டதும், ஊவா மாகாணம் மொணராகலை மாவட்டத்தில் மொனராகலை பிரிவு எனக் குறிப்பிடப்பட்ட மிகச் சரியாக மொனராகலை பிரதேச செயலாளர் பிரிவில் புத்தல வெடிரட்ட கோரளேயின் முப்பனே கிராம அலுவலர் பிரிவிடல் முப்பனே கிராமத்தில் அமைந்துள்ளதும்,நூகளுகஹலந்தபூ எனவழைக்கப்படுவதும், மொனராகலை மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவில் வழக்கு இல.8023 இன் தீர்ப்புத் தொடர்பில் எனக்குச் சேரவேண்டியதுமான காணியிலிருந்து பிரிக்கப்பட்டதாகும்.
2. மொனராகலை ஹின்டிக்குவல உரிமம்பெற்ற நில அளவையாளர் திரு.எல்.கே. குணசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.12.07 ஆந்திகதிய 1785ஆம் இலக்க வரைபடத்தின் இல.01 எனும் காணித்துண்டு அது நூகளுகஹலந்தபூ எனவழைக்கப்படும் காணியிலிருந்து பிரிவிடல் செய்யப்பட்டதாகும்.

**காணியின் விஸ்தீரணம் :** கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்தும் செல்வழியுரிமையுடனும் பத்து பேர்ச்சுக்கள் A:0 - R:0- P:10.)

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், மக்கள் வங்கி மொனராகலை கிளையில் 2021 ஏப்ரல் 21 ஆந்திகதி மு.ப. 10.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன். ஏலவிற்பனையானது, கொவிட் 19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:**
2019.03.15 ஆந்திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.04.22 ஆந்திகதிய தினமின, டெய்லி நியுஸ் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:**
மொனராகலை நகரிலிருந்து கொழும்பு வீதியூடாக சுமார் 20 மீற்றர்கள் செல்லும்போது வலப்பக்கத்தில் மக்கள் வங்கி சேவை நிலையத்தை அடைந்து அவ்வீதியில் சுமார் 300 மீற்றர்கள் பயணிக்கும்போது 23ஆம் இலக்கத்தில் இவ்வாதனத்தை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை**
தீ ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூரதிகாரசபை வரி 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1000
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி. பிராந்திய தலைமை அலுவலகம் (மொணராகலை), இல.199, வெல்லவாய வீதி, மொனராகலை எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி: 055 2276347/ 055 2276351
சொல்லப்பட்டதொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் (10%) தொகையை மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்கூறிய முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**11:55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286, 072 3207533, 076 9217329, 072 0881014**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும் உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளரும்,**
**மதிப்பீட்டாளர் மற்றும்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

**For classified advertisements and for replies**
**received in response to advertisements published under Lake House box numbers**
Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| HC -2XXX | NISSAN | SUNNY FB15 | 1999 |
| KA -0XXX | HYUNDAI | ATOS GLS A | 2001 |
| KW -9XXX | TOYOYA | PRIUS ZVW30 | 2011 |
| CAA -6XXX | TOYOTA | PRIUS ZVW30 | 2012 |
| CAE -0XXX | SUZUKI | CELERIO VXT | 2014 |
| **ஜீப்** | | | |
| CAE -5XXX | SUBARU | DAA-GPE | 2014 |
| CAU -0XXX | TOYOTA | CRUISER GSJ15W | 2014 |
| CAH -7XXX | MITSUBISHI | OUTLANDER GG2W | 2014 |
| **லொறி** | | | |
| HD -6XXX | MAZDA | BONGO | 1998 |
| LH -8XXX | TATA | LPT1109 | 2010 |
| PQ -3XXX | TATA | ACE | 2011 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HK -9XXX | BAJAJ | RE 2 STROKE | 2003 |
| JB -1XXX | BAJAJ | RE 2 STROKE | 2004 |
| QC -2XXX | BAJAJ | RE 2 STROKE | 2005 |
| QQ -7XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| YE -1XXX | BAJAJ | AR RE 200 | 2010 |
| YC -7XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| ABB -4XXX | BAJAJ | RE | 2015 |
| **டிராக்டர்** | | | |
| RA -4XXX | FARMTRAC FT45 | | 2005 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 மார்ச் 19ஆம், 22ஆம், 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 மார்ச் 24ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 0711624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

## இலங்கை மருத்துவ சபைக்கான அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவித்தல்

இலங்கை மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 12(1)(C)ஆம் உட்பிரிவின் கீழ் இலங்கை மருத்துவ சபைக்கான அங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பதற்கான பெயர் குறித்த நியமனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பின்வரும் செல்லுபடியான பெயர் குறித்த நியமனங்கள் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1. ANANDA KUTTIGAMA ATHIGE SAMANTHA KUMARASIRI ANANDA
2. ASELA SURENDA ABEYSUNDERA
3. CHANDANA KALILA RANASINGHE
4. CHANDANA SUDASSI DHARMARATNE
5. CONILPRASANNAJITH GANEGODA
6. HARITHA PUNU ALUTHGE
7. JAYASIRI DESHAPRIYA DIAS
8. KOTTASA VIDANELAGE NIHAL DEVAPRIYA
9. RYAN JAYALATH
10. SARADA UDAJEEWA KANNANGARA
11. SURIYAKUMARA WANNISINGHE KANCHANA MALINDA BANDARA BULANKULAME

மேற்குறித்த வேட்பாளர்களிலிருந்து ஐந்து (05) அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடாத்தப்பட வேண்டியுள்ளது. மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியான பதிவினைக் கொண்டுள்ள மருத்துவ பயிற்சியாளர்கள் வாக்களிப்பதற்கான தகைமைகளைப் பெறுகின்றார்கள்.

நேரடி வாக்களிப்பு 2021 ஏப்ரல் மாதம் 20 செவ்வாய்க்கிழமை மற்றும் ஏப்ரல் ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும்.

ஏதேனும் தேர்தல் தவறொன்றில் சம்பந்தப்பட்டிருப்பதாக கண்டறியப்படுகின்ற ஒரு வைத்தியர் குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவதோடு, இலங்கை மருத்துவ சபையின் ஒழுக்காற்று நடபடி ஒழுங்கு விதிகளுக்கமைய இலங்கை மருத்துவ சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**பேராசிரியர் வஜிரா திசாநாயக்க,**
**தெரிவத்தாட்சி அலுவலர்/ஜனாதிபதி**
**இலங்கை மருத்துவ சபை,**
**31, நொறிஸ் கால்வாய் வீதி,**
**கொழும்பு -10.**

திகதி: 17.03.2021

## பெறுகை அறிவித்தல்

### தொழில் திணைக்களம் - நாரகேன்பிட்டி

### தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலகங்களுக்காக கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

**ஒப்பந்த இல. FG/TB/24/2020**

தொழில் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் தொழில் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக பின்வரும் தொழில் அலுவலகங்களுக்காக மூன்று வருட காலத்திற்கு கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெற்ற மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | அலுவலகம் | ஊழியர்களின் எண்ணிக்கை | தரை பரப்பளவு | கட்டிடத்தை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கும் பிரதேசம் |
|---|---|---|---|---|
| 1 | ஜா-எல மாவட்ட தொழில் அலுவலகம் | 41 | 5500 சதுர அடிகள் மற்றும் அதற்கு மேல் | ஜா-எல நகர சுற்றுப்புறத்தில் |
| 2 | வென்னப்புவ மாவட்ட தொழில் அலுவலகம் | 29 | 3100 சதுர அடிகள் | வென்னப்புவ நகர சுற்றுப்புறத்தில் |
| 3 | சிலாபம் மாவட்ட தொழில் அலுவலகம் | 33 | 2200 சதுர அடிகள் | சிலாபம் நகர சுற்றுப்புறத்தில் |
| 4 | வரக்காபொல மாவட்ட தொழில் அலுவலகம் | 14 | 1600 சதுர அடிகள் | வரக்காபொல நகர சுற்றுப் புறத்தில் |

**விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு பின்வரும் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

1. ஒவ்வொரு அலுவலகத்திற்கும் மேற்குறிப்பிடப்பட்ட தரை பரப்பளவு இருத்தல் வேண்டும்.
2. குறைந்தபட்சம் 03 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
3. சேவை பெறுநர்கள் இருப்பதற்கான இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
4. பணியாட் தொகுதியினர் மற்றும் சேவை பெறுநர்களுக்காக உரிய தரத்துடனான மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.
5. மின் வழங்கல்களுக்காக தனியான மின் மானியொன்று இருத்தல் வேண்டும்.
6. நேரடி குழாய் நீர் இணைப்புடன் தனியான நீர் மானியொன்று இருத்தல் வேண்டும்.
7. தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
8. இயற்கை அனர்த்தங்களிலிருந்து கவனிக்கத்தக்க பாதுகாப்புடனான இடமாக இருத்தல் வேண்டும்.
9. ஊனமுற்ற நபர்களுக்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
10. இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கான இணக்கத்தை தெரிவித்தல் வேண்டும்.
11. பொது போக்குவரத்து வசதிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.

கட்டிடத்தின் விபரங்கள், கட்டிடம் அமைந்துள்ள முகவரி, மாதாந்த வாடகை (வரியின்றி மற்றும் வரியுடன்) குத்தகை செலுத்துவதானால் குத்தகை பதிவுச் சான்றிதழின் பிரதி, தொலைபேசி இலக்கம், கட்டிடம் தொடர்பில் வழங்கும் ஏனைய வசதிகள் போன்ற தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவம் உரிமையாளரால் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் ஆவணங்களை அத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. உரித்து உறுதி மற்றும் காணியின் அளவுத் திட்டப் பிரதி
2. முறையாக வரிப்பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கான பற்றுச்சீட்டுகளின் பிரதி
3. கட்டிடத்திற்குப் பிரவேசிக்கக் கூடிய பாதையின் வரைபடம்
4. கட்டிடத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடத்தின் பிரதி

தெரிவு செய்யப்படும் விலைமனுதாரருக்கு முற்பணம் செலுத்தப்பட மாட்டாது.

உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2021-06-23ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுக்களை 2021-04-08ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நிதிப் பிரிவின், 9ஆம் மாடி, தொழில் திணைக்களம், கொழும்பு - 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் நிறைவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் (நிர்வாகம்) அவர்களை 011-2581970 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இந்த விலைக்கோரல் தொடர்பில் தொழில் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தொழில் ஆணையாளர் நாயகம்,**
**தொழில் திணைக்களம்,**
**நாரகேன்பிட்டி,**
**கொழும்பு - 05.**

## உலர்ந்த மற்றும் மூல மருந்துகளை கொள்வனவு செய்தல் – 2021

### மாகாண ஆயுர்வேத திணைக்களம்

### சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு

### மத்திய மாகாண சபை

மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு 2021 ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவையை பெற்றுக்கொள்வதற்காக தகுதியை பூர்த்தி செய்திருக்கும் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | விபரம் | மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | பணமாக (ரூபா) | பிணையாக (ரூபா) |
| 1 | உலர்ந்த மற்றும் மூல மருந்து வழங்கல் - 2021ஆம் ஆண்டு | 1500/- | விலைமனு பெறு மதியின் 1% | விலைமனு பெறுமதியின் 2% |

02. விலைமனு ஆவணங்கள் 2021.03.19 ஆம் திகதி தொடக்கம் 2021.04.07 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் உதவி நிதியாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற ஆவணத்தை மாத்திரம் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் விலைமனு நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும்.

03. விலைமனு பிணையானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு இலங்கை மத்திய வங்கி அங்கீகரித்த வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் பெயருக்கு வழங்கப்படும் 2021.07.10 ஆம் திகதி வரை செல்லுபடியான விலைமனுப் பிணை ஒன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அந்த விலைமனு பிணை பணமாக செலுத்துவதாயின் மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் உதவி நிதியாளரிடம் இலங்கையின் செல்லுபடியான பணத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனு பிணையாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. உலர்ந்த மற்றும் மூல மருந்துகளுக்காக விலைமனுக்கள் முன்வைக்கின்ற விலைமனுதாரர்கள் ஒவ்வொரு மருந்துக்காகவும் மாதிரிகளை வெவ்வேறாக பொருத்தமான வகையில் பொதியிட்டு முத்திரை இட்டு 2021.04.08 ஆம் திகதி மு.ப. 08.30 தொடக்கம் 10.30 வரை மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்கு பிரிவிடம் பட்டியலுடன் முறையான வகையில் ஒப்படைத்து சரியான முறையில் மாதிரிகளை ஒப்படைத்ததாக சான்று ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

05. அனைத்து விலைமனுக்களும் இரு பிரதிகளாக தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக உறைகளில் இட்டு பெயரிட்டு முத்திரை இட்டு இரண்டையும் ஓர் உறையில் இட்டு முத்திரை இட்டு அந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுக்களை சமர்ப்பிப்பது தொடர்பில் வழங்கல் பெயர் மற்றும் நிறுவனத்தை குறிப்பிட்டு 2021.04.08 ஆம் திகதி மு.ப. 10.30க்கு அல்லது அதற்கு முன்னர் குண்டசாலை, பல்லேகல முகவரியில் மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படுவது அன்றைய தினம் மு.ப. 10.30க்கு மேற்கொள்ளப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

06. விலைமனுக் கோரலுடன் தொடர்புடைய முந்தைய பெறுகைக் கூட்டம் 2021.03.31 ஆம் திகதி மு.ப. 10.30க்கு மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

07. பெறுகை செயற்பாடு தொடர்பில் அனைத்து முடிவுகளையும் எடுக்கும் அதிகாரம் பெறுகை குழு வசமானதாகும்.

08. விலைமனு தொடர்பில் மேலதிக விபரங்களை 081-2423144 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடே பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு குறித்த ஆவணங்களை திணைக்கள கணக்கு பிரிவில் 2021.03.19 ஆம் திகதி தொடக்கம் 2021.04.07 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் 12.00 – 13.00 மணிகளில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண ஆயுர்வேத திணைக்களம்,**
**பல்லேகல, குண்டசாலை.**
**19.03.2021**

## அற்றோர்ணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

டிக்கிரி ஹென்னதிகே சமன் குமார (தே.அ.அ.இல. 671680154 V) ஆகிய நான் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும், மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதாவது:- என்னால் எனது சட்டரீதியான அட்டோர்ணி தத்துவக் காரராக **ரத்நாயக முதியன்சேலாகே பெரகும் செனரத் பண்டார** (தே.அ.அ.இல. 197625702982) என்பவரை நியமித்து வழங்கப்பட்ட இல. 438 மற்றும் 2020.07.25ம் திகதிய கண்டி பகிரங்க நொத்தாரிசு திரு. **என். டீ. சிவரூபன்** இனால் எழுதி உறுதி செய்யப்பட்ட எழுத்துமூல அதிகாரம் மற்றும் அட்டோர்ணி அனுமதிப் பத்திர புத்தகத்தின் 312 பகுதியில் 14ஆம் பக்கத்தில் 8289ஆம் நாளேடு இலக்கத்தின் கீழ் 2020.08.17ம் திகதியின் கீழ் பதிவு செய்துள்ள விசேட அட்டோர்ணி அதிகாரம் இதன் பிறகு இரத்துச் செய்யப்படும் என்றும் இனிவரும் காலங்களில் அதன் செயற்பாடுகள் இல்லை எனவும் அறிவிக்கிறேன்.

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**அயோமால் கலெண்டின் (பிவீடீ) எல்டீடி**
பதிவிலக்கம் : PV 00227660
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 19.09.2020
பதிவு முகவரி : இல. 241/3, கஹன்தொட்ட வீதி, மாலபே.

**கம்பனி செயலாளர்**

## பெறுகை அறிவித்தல்

**2021 ஆண்டிற்கு சொத்துக்களை குத்தகைக்கு விடல்**

### ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள 07 மாட்டிறைச்சிக்கடைகள், 04 கோழியிறைச்சிக் கடைகள் மற்றும் 1 பன்றியிறைச்சிக் கடைக்கு 2021.05.01 முதல் 2021.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட பெறுகைப் படிவங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பெறுகைப் படிவங்கள் விநியோகித்தல் -**
2021.03.19 முதல் 2021.04.05 பி.ப.14.30 வரை

**பெறுகைப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் -**
2021.04.06 மு.ப. 10.30 வரை

**பெறுகை திறத்தல் -**
2021.04.06 மு.ப. 10.45 இற்கு

மேலதிக விபரங்களுக்கு 0322259783/80 தொ.பே இலக்கத்தில் அல்லது Arachchikattuwapradeshiyasabha facebook பக்கத்திற்கு பிரவேசித்து அறிந்து கொள்ளலாம்.

**2021.03.16**
**தலைவர்**
**ஆரச்சிகட்டுவ பிரதேச சபை**

## Covid – 19 தொற்று காரணமாக தனியார் துறையில் தொழில்களை இழந்த ஊழியர்கள் தொடர்பான கணக்கெடுப்பு

தனியார் துறையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும்போது கொவிட் தொற்று காரணமாக தொழில்களை இழந்த ஊழியர்கள் பின்வரும் வகையில் தமது விபரங்களை தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளருக்கு (தொழில் உறவுகள்) 2021-04-01ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. பெயர்:
2. முகவரி:
3. தொலைபேசி இலக்கம்:
4. தேசிய அடையாள அட்டை:
5. சேவையாற்றிய நிறுவனத்தின் பெயர்:
6. சேவையிலிருந்து விலகிய திகதி:
7. அந்த நிறுவனத்தில் சேவையாற்றிய வருடங்கள்:
8. இறுதியாக பெற்ற அடிப்படைச் சம்பளம்:

தொழில் ஆணையாளர் (தொழில் உறவுகள்) 11ஆம் தளம், மெஹெவர பியஸ, கொழும்பு 05.

Fax: 011-2369484 Email: lrlabur456@gmail.com Tel: 011-2368502

தற்போது தொழில் திணைக்களத்தில் முறைப்பாடுகளைச் செய்துள்ள நபர்கள் மீண்டும் இந்த விபரங்களை அனுப்பத் தேவையில்லை என தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

**தொழில் ஆணையாளர் நாயகம்,**
**தொழில் திணைக்களம்.**

## கழிவு பொலித்தீன்

### L.D.P.E/H.D.P.E/PP

தொழிற்சாலை கழிவு மற்றும் கழுவப்பட்ட சுத்தமான கழிவு (பிலிம் தரம்)
மற்றும்
LDPE/HDPE/PP மீள்சுழற்சி செய்யப்பட்ட துகள்கள் உயர் விலையில் விற்கப்படும்.

Polypak Secco Ltd.
4th, Floor "Propertex Court"
108, W.A.D. Ramanayake Mw.,
Colombo -02.

Tel: 2330128-30, 2326658, 2447712

## மீட்கப்படாத அடகுப்பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

உத்துருஉடுவ/கெபெல்லகொட/பலன்னோருவ/ஹொரண/மொறகஹஹேண/பொக்குணவிட்ட/வீடியகொட/மூணகம/ரன் சுரக்கும் ஹொரண/பலன்னோருவ/கோறளைம மற்றும் பொக்குணவிட்ட ஆகிய நிலையங்களில், இதுவரை அடகு வைக்கப்பட்ட மற்றும் மீட்கப்படாத அனைத்து ஆபரணங்களும் 2021 ஏப்ரல் 03,04ஆகிய தினங்களில், மு.ப.9.00 மணிக்கு ஹொரண வ/ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக வளவில், பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்**
**வ/ப ஹொரண ப.நோ.கூ.ச,**
**இல.113,**
**ஸ்ரீ சோமானன்ட மாவத்தை,**
**ஹொரண**

EDCS
අධ්‍යාපන සමුපකාර සමිතිය
கல்வி கூட்டுறவுச் சங்கம்
Education Co-operative Society

### வ/ப - கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன, கடன் வழங்கும் சங்கம்.

## தமிழ் சிங்கள புதுவருட விடுமுறை அறிவித்தல்

தமிழ் சிங்கள புது வருட நிகழ்வை முன்னிட்டு 2021.04.11 முதல் 2021.04.19 வரை அலுவலகம் மூடப்பட்டிருக்கும் அத்துடன் மீண்டும் 2021.04.20ம் திகதி அலுவலகம், திறக்கப்படுவதுடன் 2021.04.21 புதன் முதல் அங்கத்துவ விடயங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

**அவ்வாறே தமிழ் சிங்கள புத்தாண்டு உற்சவம் சார்பாக அங்கத்தவர்களாகிய உங்களது கொடுக்கல் வாங்கல் விடயங்களுக்காக 2021.03.29. 2021.04.05 ஆகிய திங்கள் தினங்களில் அலுவலகம் திறக்கப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கிறேன்**

பிரதம செயலாளர்

**வ/ப கல்வி சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன கடன் வழங்கும் சங்கம்,**

இல. 294, காலி வீதி,
கொழும்பு-03.

தொலைபேசி இல: 011-2370067/ 011-2575737/ 011-2370717

### மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு

TVEC

**தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் NCT (சிவில் / கணிய அளவையியல் / மின்னியல் மற்றும் இலத்திரனியல் / எந்திரவியல்) மற்றும் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் NCIT (சிவில் / எந்திரவியல் / மின்னியல்) ஆகியவற்றை தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் 5 இற்கு சமன் செய்யும் பொதுப் பரீட்சை**

## தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் NCT மற்றும் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் NCIT ஆகியவற்றிற்கு தேசிய தொழிற் தகைமை (NVQ)

1. தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (சிவில் / கணிய அளவையியல் / மின்னியல் மற்றும் இலத்திரனியல் / எந்திரவியல்) கைத்தொழில் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் NCIT (சிவில் / எந்திரவியல் / மின்னியல்) ஆகியவற்றை தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 இற்கு சமமான தகைமையாக விருதளிப்பதற்காக பொதுப் பரீட்சையை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்டுமான தொழில்நுட்பவியல் (Construction Technology) / கணிய அளவையியல் (Quantity Surveying) / மின்னியல் தொழில்நுட்பவியல் (Electrical Technology) / உற்பத்தி தொழில்நுட்பவியல (Production Technology) / தன்னியக்க வாகன தொழில்நுட்பவியல் (Automobile Technology) / குளிர்விப்பான் மற்றும் வளிசீராக்கி தொழில்நுட்பவியல் (Ref & AC Technology) / காய்ச்சி இணைத்தல் தொழில்நுட்பவியல் (Welding Technology) மட்டம் 5 தொடர்பாக அவற்றுக்குரிய தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் தேர்ச்சிசார் பாடத்திட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் இப் பரீட்சையானது நடாத்தப்படும்.

2. 2014 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் மேற்கூறிய பாடநெறிகள் தொடர்பாக சான்றிதழ்களை பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தேர்வுநாடியாக இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கமுடியும்.

3. பரீட்சை கட்டணமாக ரூபா 1,000.00 (ஆயிரம்) இனை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இக் கட்டணம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் 078100172266044 என்ற "மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு" இன் கணக்கு இலக்கத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை கட்டணம் மீண்டும் செலுத்தப்படமாட்டாது. கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

4. இவ் எழுத்துமூல பரீட்சையில் சித்தியெய்தும் தேர்வுநாடிகள் தொழில் மீளாய்வொன்றின் பொருட்டு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அச் சந்தர்ப்பத்தில் ரூபா 2,000.00 கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும்.

5. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமானது தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NCT மற்றும் NCIT பொதுப் பரீட்சை" என்றவாறாக தமக்குரிய பரீட்சையினை மட்டும் குறிப்பிட்டு "பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு, 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் **23.04.2021** ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னராக அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு : குறிப்பிட்ட திகதிக்கு முன் விண்ணப்பிக்க இயலாமை ஏற்படின், "Mature Candidate" அல்லது "External Candidate Route NVQ Circular 5/2017" மூலமாகவும் விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைக்கு பதிவினை மேற்கொள்ள இறுதித் திகதிக்கு முன்னர் பின்வரும் இணைப்பை பயன்படுத்தவும
**https://nvq.gov.lk/NCT/ApplicationWelcome**

### தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (சிவில் / கணிய அளவையியல் / மின்னியல் மற்றும் இலத்திரனியல் / எந்திரவியல்) கைத்தொழில் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் NCIT (சிவில் / எந்திரவியல் / மின்னியல்) தகைமையினை தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் 5 இற்கு சமன் செய்வதற்காக நடாத்தப்படும் பொதுப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவம்

1. தேர்வுநாடியின் முழுப்பெயர் (சான்றிதழில் உள்ளவாறு)
   (தமிழில்) : ........................................
   (ஆங்கிலத்தில்) : ........................................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ........................................
3. முகவரி (தமிழில்) : ........................................
   (ஆங்கிலத்தில்) : ........................................
4. மின்னஞ்சல் முகவரி : ........................................
5. தொலைபேசி இலக்கம் : ........................................
6. பாடநெறி காலம் : ........................................
7. சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி
   (தயவுசெய்து சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியினை இணைக்கவும்) : ........................................

8. NCT/NCIT பாடநெறியின் பிரகாரம் பொதுப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றவிருக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப துறையை கோடிட்டு காட்டுக.

Construction Technology / Quantity Surveying / Electrical Technology / Production Technology / Automobile Technology / Refrigeration & Air Conditioning Technology / Welding Technology

9. தேர்வுநாடியின் உறுதியுரை
   - மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மக்கள் வங்கி கணக்கு இலக்கமான 078100172266044 இற்கு ரூபா 1,000.00 இனை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
   - மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதனை சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி: ............................ கையொப்பம்: ............................

பணிப்பாளர் நாயகம்,
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு,
நிபுணதா பியச, 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.
தொலைபேசி இல.: 011-760 8000, 011-760 8060

## திருத்தம்

**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்**

### கல்வி தர அபிவிருத்திக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பாடசாலை உபகரணங்களைப் பழுதுபார்த்தல்

2021 மார்ச் 15ஆம் திகதி பிரசுரமான பெறுகை அறிவித்தலில் தொடர் இல 05 இன் கீழ் குறிப்பிடப்படும் கேள்விக்கு முன்னரான சந்திப்பு நடத்தப்படும் தினம் 2021 மார்ச் 29ஆம் திகதி மு.ப.9.00 மணியென திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனிக்கவும் முன்பு பிரசுரமான அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களும் மாற்றமின்றி இருக்கும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்**
**வெலகெதர வீதி, பதுளை**

## பெறுகை அறிவித்தல்

**நாரம்மல பிரதேச சபை புதிய அலுவலகத்திற்குத் தேவையான அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.**

இதற்கு இயைபான சகல கேள்விப் படிவங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை நாரம்மல பிரதேச சபைக்கு 1000.00 ரூபா படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு இயைபான கேள்விப் படிவங்கள் வழங்குதல் 2021-04-01ஆம் திகதி பி.ப. 12.30 வரை மேற்கொள்ளப்படும் என்பதுடன் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறுத்தப்படும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

(விபரக்குறிப்புகள் தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் அல்லது மேலதிக விபரங்களுக்கு 037-2249275, 037-4947461 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு தொழில்நுட்ப அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.)

**தலைவர் / செயலாளர்,**
**நாரம்மல பிரதேச சபை,**
**நாரம்மல.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# மக்கள் வங்கி

**1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.**

1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ....................திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ.எஸ்.லோரன்ஸ் அவர்களால் 20.10.2017 ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11645 மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு தமயந்தி டீ.ரனதுங்க அவர்களால் 22.08.2016ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 975 இலக்கம் கொண்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் நிஸ்ஸங்க டெனால் க்லெனி மென்டிஸ் மற்றும் அபேசிங்க முதியன்செலாகே காமினி விஷ்வகுமாரி அபேசிங்க என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்போது ரூபாய் பதின்மூன்று இலட்சத்தி நாற்பத்தி ஆறாயிரத்து அறுநூற்றி அறுபத்தி ஆறு சதம் எழுபது (ரூபாய் 1,346,666.70) மற்றும் ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்தி பத்தொன்பதாயிரத்தி நானூற்றி இரண்டு சதம் பத்தொன்பது (ரூபாய் 4,119,402.19)

பணத்தொகைகள் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் ரூபாய் பதின்மூன்று இலட்சத்தி நாற்பத்தி ஆறாயிரத்து அறுநூற்றி அறுபத்தி ஆறு சதம் எழுபது (ரூபாய் 1,346,666.70) பணத்தொகைக்காக 01.01.2019 ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 19% வட்டியுடன் மற்றும் ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்தி பத்தொன்பதாயிரத்தி நானூற்றி இரண்டு சதம் பத்தொன்பது (ரூபாய் 4,119,402.19) பணத்தொகைக்காக 01.12.2018ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை வாராந்த விகிதத்தில் சாதாரண முக்கிய கடன் வழங்கும் விகிதம் + 3.5% + 2% வருடாந்த வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L" பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட ரூபாய் பதின்மூன்று இலட்சத்தி நாற்பத்தி ஆறாயிரத்து அறுநூற்றி அறுபத்தி ஆறு சதம் எழுபது (ரூபாய் 1,346,666.70) மற்றும் ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்தி பத்தொன்பதாயிரத்தி நானூற்றி இரண்டு சதம் பத்தொன்பது (ரூபாய் 4,119,402.19) பணத்தொகைகளை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம என்பவர்களினால் குறிப்பிட்ட இலக்கம் 11645 மற்றும் 975 கொண்ட ஈட்டு முறிகளின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல்மாகாணம் ,கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம் பத்து ஜா எல பிரதேச செயலாளர் பிரிவில் ஜாஎல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இலக்கம் 181D பேரலந்த கிராம சேவையாளர் பிரிவில் பேரலந்த கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹவத்தை எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.ஏ.குனவர்தன அவர்களால் 11.06.2016 ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2018 எனும் வரைபடத்தில் காணப்படும் பிரிவினை செய்யப்பட்ட H காணித்துண்டின் எல்லைகளாக வடகிழக்கில் 10337J எனும் வரைபடத்தில் காணப்படும். எனும் காணித்துண்டும், எம்.டீ.ஜே.வீ.பெரேரா உத்தரவு பெற்ற நில அளவையாளரின் 13337H எனும் வரைபடத்தில் காணப்படும் H 1 எனும் 20 அடி அகலமான பாதையும் தென்கிழக்கில் எம்.டீ.ஜே.வீ.பெரேரா உத்தரவு பெற்ற நில அளவையாளரின் 13337L எனும் வரைபடத்தில் காணப்படும் 1ம் இலக்கக் காணித்துண்டும் தென்மேற்கில் பீ.ரூபசிங்கவின் காணியும் மற்றும் வடமேற்கில் கொட்வின் பெரேராவின் வாரிசுகளின் காணியும் எல்லைகளாக அமைந்த பதிநான்கு பேர்ச்சஸ் (00ஏ.00றூ.14பே) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இலக்கம் J 353/51 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பாதை ஒதுக்கீடும் ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

மக்கள் வங்கி
பிராந்திய தலைமை அலுவலகம் கம்பஹா
இல: 131, கண்டி வீதி பெலும்மஹர முதுன்கொடை

**பிராந்திய முகாமையாளர் கம்பஹா**

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ.எஸ். லோரன்ஸ் அவர்களால் 20.10.2017ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11645 இலக்கம் மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு தமயந்தி டீ.ரனதுங்க அவர்களால் 22.08.2016ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 975 இலக்கம் கொண்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் பரிசீலனை செய்யப்பட்டது.

**மக்கள் வங்கி**
**பிரதேச தலைமை அலுவலகம் கம்பஹா**
**இல: 131, கண்டி வீதி பெலும்மஹர முதுன்கொடை**

**சட்ட அலுவலர்**

PEOPLE'S BANK

CargillsBank
Banking on the Human Spirit

**கார்கில்ஸ் வங்கி லிமிடெட்**
**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

வாடிக்கையாளரின் பெயர் : **ரீவ்ஸ் எஜ் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்**

2021/02/25 ஆந்திகதியன்று நடைபெற்ற கார்கில்ஸ் வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

**ஈடுவைப்பவராக ரீவ்ஸ் எஜ் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்,** PB 4847 ஆம் பதிவிலக்கத்தைக்கொண்டதும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை இல.696, காலி வீதி, கொழும்பு 3 இல் கொண்டுள்ளதும் (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) கார்கில்ஸ் வங்கி லிமிடெட் சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.பீ.டபிள்யூ.ஜயவீர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018/01/19 ஆந்திகதிய **6371 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம்** ஈடுவைக்கப்பட்டதும் அடைமானம் வைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டதுமான ஆதனத்தின் பிணைப்பொறுப்புக்கெதிராக அளிக்கப்பட்ட நிதிவசதியை மீளக்கொடுப்பனவுசெய்வதில் தவணைதவறியுள்ளதாதலாலும்,

**அத்துடன்** சொல்லப்பட்ட 6371 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது 2020/9/1 ஆந்திகதியிலிருந்து முழுமையாகக் கொடுப்பனவுசெய்யப்படும் திகதிவரை 75,000,000.00 ரூபாவான எல்லைவரை ஆண்டொன்றுக்கு 13.5% வட்டியுடனும் 75,000,000.00 ரூபாவை விஞ்சுகின்ற தொகைமீது ஆண்டொன்றுக்கு 18% வட்டியுடனும் 2020/08/31 ஆந்திகதிவரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் நூறு மில்லியன் மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து முந்நூற்றியெட்டு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ.100,348,308.56) கொண்ட பணத்தொகை சொல்லப்பட்ட 6371 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வங்கிக்கு இப்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் வந்துள்ளது **ஆதலாலும்.**

**இத்தாற் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது:-**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி, இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டவையும் **6371 ஆம் இலக்கத்தைக்கொண்ட ஈட்டுமுறிமூலம் ஈடுவைப்பவராக ரீவ்ஸ் எஜ் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினால்** வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனங்களை, சொல்லப்பட்ட நூறு மில்லியன் மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து முந்நூற்றியெட்டு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ.100,348,308.56) கொண்ட பணத்தொகையையும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனைத்தேதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியையும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுதொகைகளையும் பணங்களையும், பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காகப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வதற்கு கொலன்னாவ, விஹார மாவத்தையில், 182/3 (50/3) ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் **துசித் கருணாரத்ன** என்பவருக்கு அதிகாரமளிக்கப்படுதலும் தத்துவமளிக்கப்படுதலும் வேண்டுமென்றும்;

**மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் அளுத்குருக் கோறளையின் ராகம் பத்துவில் வத்தளை பிரதேசசபை எல்லைகளினுள் வத்தளை பிரதேச செயலகப் பிரிவில் உஸ்வெட்டகியாவ கிராம அலுவலர் பிரிவினுள் பறண அம்பலமவில் அமைந்துள்ளதும், கொழும்பு வீதி வழியாக (உஸ்வெட்டகியாவ) அமைந்துள்ளதும் காலி வீதியில் 300 ஆம், 304 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் "தொம்பகஹாவத்த கொட்டச" மற்றும் "தொம்பகஹாவத்த", "கல்பனதோட்டேவத்த" மற்றும் "மூனமல்கஹாவத்துபங்குவ" எனவழைக்கப்படுவதும் இப்போது "ரீவஸ் எஜ் ஹொட்டேல்" எனவறியப்படுவதுமான காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ் விக்ரமசிங்க என்பவரினால் எல்லாம் தயாரிக்கப்பட்ட 2007/04/19 ஆம் திகதிய 4575/9000 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் A இன், இரண்டும் 2012/02/23 ஆந்திகதிய 6430/9000 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் X இன் மற்றும் 6430A/9000 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் Y இன் மீள்நிலஅளவையாகவும் ஒன்றுசேர்க்கையாகவும் உள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ்.விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012/05/07 ஆந்திகதிய 6490/9000 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்ளூ சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது:- **வடக்கில்** வெடிங் ஹவுஸ் பீச் ஹொட்டேல் எனவழைக்கப்படும் வளவுகள், **கிழக்கில்** கொழும்பு வீதி (உஸ்வெட்டகியாவ), **தெற்கில்** கொழும்பு வீதியில் 314 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்ட வளவுகள் (த பீச் ஹட்) மற்றும் **மேற்கில்** கடற்கரைக்கான ஒதுக்கிடம், பரப்பளவில் இது, அதன்மீதுள்ள மரங்கள், கட்டிடங்கள், பயிர்கள், மண் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 6490/9000 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று ரூட் முப்பத்தைந்து தசம் மூன்று இரண்டு போர்ச்சுக்களை (ஏ0-ரூ3-பே35.32) கொண்டுள்ளது. கம்பஹாக் காணிப்பதிவகத்தில் உரித்து தொகுதி/பக்கம் L 44/03 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**சமீல அபேசூரிய**
**தலைவர் – அறவீடுகள்**

skillsads

# பெறுகை அறிவித்தல்

## நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டம்

**சுகாதார சேவைத் திணைக்களம்**

**சபரகமுவ மாகாணம்**

01. சபரகமுகவ மாகாணத்தின் சுகாதாரத் சேவைத் திணைக்களத்தினால் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் செயற்படுத்தப்படுத்தப்படும் நாய்கள் மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக சேவை வழங்குதல் சார்பாக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்கள் அல்லது சங்கங்களிலிருந்து சபரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரால் 2021 ஏப்ரல் 09 மு.ப.10.00 வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.
02. 2021 மார்ச் 19 முதல் 2021 ஏப்ரல் 07 வரையான அரச வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் மற்றும் 2021 ஏப்ரல் 08 மு.ப.9.00 முதல் நண்பகல் 12.00 வரையும், இல.75, தர்மபால மாவத்த, இரத்தினபுரி என்ற இடத்தில் சபரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். ஒரு நிறுவனத்திற்கு கேள்வி பத்திரம் விநியோகிப்பதற்கு அறவிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.3,0000.00 ஆவதுடன் மீளளிக்கப்படும் கட்டணம் ரூ.150,000.00 ஆகும். கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக குறித்த கட்டணத்தை இவ் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்தில் வேண்டும்.
03. 2021 ஏப்ரல் 09ஆம் திகதி மு.ப.10.00 இற்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.
04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் முகவரிக்கு 2021 ஏப்ரல் 09ஆம் திகதி மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களை எந்த கொடுப்பனவும் இன்றி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. மேலதிக விபரங்களுக்கு இவ் அலுவலகத்தின் பிரதம கணக்காளரை அழையுங்கள்

**தொ.பே : 045-2222277**
**045-2222322**

**இல.75, தர்மபால மாவத்த**
**இரத்தினபுரி**
**2021 மார்ச் 19**

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்**

## மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்
## பொது அறிவித்தல்
## (பீவீ 16193)

**சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (கம்பனி பதிவெண் பீவீ 6330) உடன் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் இன் (கம்பனி பதிவெண் பீவீ 16193) முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட (சட்டம்) 242 ஆம் பிரிவின் (3)(பீ) ஆம் உப-பிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்**

கம்பனிச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் உடன் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் ஐ ஒன்றிணைப்பதற்காகவும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் ஆனது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாக தொடர்ந்து செயற்படவும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் இன் பணிப்பாளர்கள் சபையும் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இன் சபையும் 2021 மார்ச் 5 ஆம் நாள் தீர்மானித்துள்ளது.

கம்பனிச் சட்டம் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் உத்தேசிக்கப்பட்ட கம்பனி ஒன்றிணைப்பிற்கான ஆவணங்களையும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவை, பதிவிற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்ததின் பிரகாரம் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாட்களிற்கு குறையாத காலப்பகுதிக்குள், கம்பனிகளின் பதிவாளர் நாயகம் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பு சான்றிதழை வழங்கிய பின்னர், ஒன்றிணைப்பானது செயல்வலுப்பெறும்.

மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் சபைகளினால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் தீர்மானங்களை அடக்கியுள்ளதாகக் கருதப்படும் ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதிகள் சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன்கொடுநர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு-02, ப்ரேப்ஷரூக் பிளேஸ், 85 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளன.

கம்பனியின் ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கம்பனி ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள உரித்தாவார்.

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்**

**(கையொப்பமிட்டது)**
**பி டபிள்யூ கார்ப்பரேட் செகடெரியல் (பிரைவேட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**

**2021 மார்ச் 05 ஆம் திகதியாகிய இந்நாளன்று**

## மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
## பொது அறிவித்தல்
## (பீவீ 6330)

**சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (கம்பனி பதிவெண் பீவீ 6330) உடன் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் இன் (கம்பனி பதிவெண் பீவீ 16193) முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட (சட்டம்) 242 ஆம் பிரிவின் (3)(பீ) ஆம் உப-பிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்**

கம்பனிச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் உடன் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் ஐ ஒன்றிணைப்பதற்காகவும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் ஆனது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாக தொடர்ந்து செயற்படவும் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இன் பணிப்பாளர்கள் சபையும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் இன் சபையும் 2021 மார்ச் 5 ஆம் நாள் தீர்மானித்துள்ளது.

கம்பனிச் சட்டம் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் உத்தேசிக்கப்பட்ட கம்பனி ஒன்றிணைப்பிற்கான ஆவணங்களையும் மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவை, பதிவிற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்ததின் பிரகாரம் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாட்களிற்கு குறையாத காலப்பகுதிக்குள், கம்பனிகளின் பதிவாளர் நாயகம் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பு சான்றிதழை வழங்கிய பின்னர், ஒன்றிணைப்பானது செயல்வலுப்பெறும்.

மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் சபைகளினால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் தீர்மானங்களை அடக்கியுள்ளதாகக் கருதப்படும் ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதிகள் சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன்கொடுநர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு-02, ப்ரேப்ஷரூக் பிளேஸ், 85 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளன.

கம்பனியின் ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கம்பனி ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள உரித்தாவார்.

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**மெட்ரோபொலிட்டன் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**

**(கையொப்பமிட்டது)**
**பி டபிள்யூ கார்ப்பரேட் செகடெரியல் (பிரைவேட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**

**2021 மார்ச் 05 ஆம் திகதியாகிய இந்நாளன்று**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு**

# பெறுகைக்கான அழைப்பு

## மருத்துவ உபகரணப்பொருட்கள் வழங்கல் - 2021

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security | Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| PSSP/ MEP/2021/01 | Autoclave | 4 | 48,000.00 | PSSP/ MEP/2021/04 | Folding Screen | 04 | 16,000.00 |
| PSSP/ MEP/2021/02 | Bp Apparatus Aneroid | 17 | 12,000.00 | | Folding Screen | 04 | |
| | BP Apparatus Digital | 10 | | | IV Stand | 06 | |
| | Stethoscope | 03 | | | Medicine Trolley | 12 | |
| PSSP/ MEP/2021/03 | ECG Machine | 03 | 41,000.00 | | Ward Round Trolley | 05 | |
| | Hand Held Doppler | 06 | | | Wheel Chair | 02 | |
| | Multipara monitor (Basic) | 04 | | | Oxygen Regulator | 04 | |
| | Nebulizer | 03 | | | Stretcher | 02 | |
| | Ophthalmoscope | 02 | | | | | |
| | Pulse Oxy Meter (adult) | 01 | | | | | |
| | Suction Apparatus | 01 | | | | | |

விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 19.03.2021 தொடக்கம் 08.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கேள்விகள் 09.04.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 09.04.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (T.P:021 229 0111 , Fax : 021 2290 104) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact MANAGER FRONT OFFICE Hotline: 1949
LAKE HOUSE

# மாகொல முஸ்லிம் அநாதை நிலையம் முஸ்லிம் அநாதைச் சிறுவர்களுக்கான அனுமதி 2021

கடந்த 58 ஆண்டுகளாக முஸ்லிம் அநாதைச் சிறுவர்களைப் பராமரித்து வழிகாட்டும் மேற்குறித்த நிறுவனம் அநாதைச் சிறுவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது:

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:**

1. தந்தை மரணித்த ஆண் சிறாராக இருத்தல்.
2. 6 முதல் 12 வயதிற்குட்பட்டவராக இருத்தல்.
3. ஏதாவது ஒரு மொழியில் எழுத, வாசிக்க தெரிந்தவராக இருத்தல்.

**இந்நிலையத்தினால் வழங்கப்படும் கல்வி வசதிகள்:**

**1. அல்குர்ஆன் மனனம் (ஹிப்ழ் பிரிவு)**

**2. ஷரீஆ கற்கை நெறி (அன்வாருல் உலூம் அறபுக்கல்லூரி.)**

அல் ஆலிம், மௌலவி பாடத்திட்டத்திற்கமைய பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன், க.பொ.த சாதாரண (O/L) தராதரத்தைப் பெறுவதற்கான கல்வி போதிக்கப்படுவதோடு கணினிப் பயிற்சியும் வழங்கப்படும்.

**3. பாடசாலைக் கல்வி (யதாமா பாடசாலை)**

தரம் 1 முதல் க.பொ.த சாதாரண தர (O/L) வகுப்பு வரை அரசாங்க பாடத்திட்டத்திற்கமைய அரபு, சிங்களம், ஆங்கிலம் உள்ளடங்கலாக சகல பாடங்களும் கற்பிக்கப்படுவதுடன், சகல மாணவர்களுக்கும் கணினி , மின் இணைப்புப் பயிற்சி மற்றும் தண்ணீர் குழாய் சீர் செய்யும் பயிற்சி (Plumbing) போன்றனவும் வழங்கப்படும்.

**இந்நிலையத்தில் அனுமதி பெறும் சிறுவர்களுக்கு கல்வி, உணவு, உடை, மருத்துவப் பராமரிப்பு, தங்குமிட வசதி உள்ளடங்கலாகச் சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.**

**அனுமதியின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:**

1. பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
2. தந்தையின் மரண அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
3. பெற்றோர் விவாகப் பதிவு

தபால் மூலம் விண்ணப்பிப்பவர்கள் மேற்படி ஆவணங்களின் நிழற் பிரதியை (Photo Copy) மாத்திரம் இணைத்து கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிடவும்.

The Secretary,
**MAKOLA MUSLIM ORPHANAGE**
Haji Fathima Garden,
Udupila Road, Makola
Tel: 077-3911852, 0112913262
Email: yathama@slt.lk

"சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு"

**மத்திய மாகாண சுகாதாரத் சேவைத் திணைக்களம்**

# கண்டி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை ஆரம்ப சுகாதார சேவை அமைப்பை வலுவூட்டும் செயற்றிட்டம் (PSSP)

மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்ட 2021.03.02ஆம் திகதிய தினமின பத்திரிகையில் 25ஆம் பக்கத்தில் பிரசுரமான கேள்விக்கான அழைப்புடன் சம்பந்தப்பட்டது.

நிதி அமைச்சின் 2021.02.18ஆம் திகதி அரச நிதி சுற்றுநிருபம் இல-04/2016 (iii) இன் 3:3இன் படி ரூ.50 மில்லியன் வரை நிர்மாண பெறுகைக்காக தகைமை பெறும் ஒப்பந்தக்காரர்களுக்காக CIDA பதிவுத்தரம் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது. அதன்படி கேள்விகோரல் இடம்பெறும் போது CIDA பதிவு மற்றும் பிரதேச பதிவு பற்றி இச் சுற்று நிருபத்திற்கு அமைவாக செயற்படுத்தப்படும்.

| | நிர்மாண மற்றும் பழுது பார்ப்பு வேலைகள் | பதிவு (CIDA Grade) |
|---|---|---|
| 01 | கடுகன்னாவ பிரதேச வைத்தியசாலையின் ஆண் வார்ட் மற்றும் ஊழியர் குழாம் ஓய்வறையை பழுதுபார்த்தல் | C8 மற்றும் C7 |
| 02 | ஜம்புகஹபிட்டிய பிரதேச வைத்தியசாலையின் சிகிச்சையக கட்டிடத்தை பழுது பார்த்தல் | C8 மற்றும் C7 |
| 03 | தலாத்து ஓய பிரதேச வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவு மற்றும் ஊழியர் குழாம் பிரவேச வழியை மேம்படுத்துதல் | C9 மற்றும் C8 |
| 04 | தொலுவ சுகாதார மருத்துவ பிரிவின் முல்கம சிகிச்சையக நிலைய பழுதுபார்த்தல் | C8 மற்றும் C7 |
| 05 | உடுவெல பிரதேச வைத்தியசாலையின் வடிகாலமைப்பு அமைப்பு, மலத்தாங்கியை நிர்மாணித்தல் | C9 மற்றும் C8 |
| 06 | தித்த பஜ்ஜல பிரதேச வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் கராஜ் மற்றும் ஓய்வறையை நிர்மாணித்தல் | C8 மற்றும் C7 |
| 07 | கொட்டலிகொட பிரதேச வைத்தியசாலையின் பெண்கள் வார்ட் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு பழுது பார்த்தல் | C8 மற்றும் C7 |
| 08 | மைலபிட்டிய ஆரம்ப மருத்துவ பிரிவு பழுது பார்த்தல் | C7 மற்றும் C6 |
| 09 | கொட்டலிகொட பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் "சுவசிதி சிகிச்சையக நுழைவு வழியை மேம்படுத்தல் | C8 மற்றும் C7 |
| 10 | கட்டுகஸ்தொட்ட பிரதேச வைத்தியசாலையின் வார்ட் மற்றும் அம்பியூலன்ஸ் கராஜ் பாதுகாப்பை மேம்படுத்தல் | C8 மற்றும் C7 |
| 11 | சங்கராஜபுர பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு பழுதுபார்த்தல் | C9 மற்றும் C8 |
| 12 | மெனிக்ஹின்ன பிரதேச வைத்தியசாலையின் பற்சிகிச்சையகத்தை மேம்படுத்தல் | C9 மற்றும் C8 |
| 13 | கட்டுகஸ்தொட்ட பிரதேச வைத்தியசாலையின் பற்சிகிச்சையகத்தை மேம்படுத்தல் | C9 மற்றும் C8 |
| 14 | ஹதரலியத்த பிரதேச வைத்தியசாலையின் ஆண் மற்றும் பெண் வார்ட், சிறுவர் வார்ட் மற்றும் சமையலறையை பழுதுபார்த்தல் | C7 மற்றும் C6 |
| 15 | குண்டசாலை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் மத்திய சிகிச்சையகத்தின் தங்கும் இடத்தை நிர்மாணித்தல் | C8 மற்றும் C7 |
| 16 | புஸ்ஸல்லாவ பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கான மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்தல் | C9 மற்றும் C8 |
| 17 | குருந்துவத்த பிரதேச வைத்தியசாலையின் சாக்கடைத் தொகுதியை பழுது பார்த்தல் | C9 மற்றும் C8 |
| 18 | குருந்துவத்த பிரதேச வைத்தியசாலையின் நுழைவு வழியை பழுது பார்த்தல் | C9 மற்றும் C8 |
| 19 | யக்கஹபிட்டிய பிரதேச வைத்தியசாலையின் ஆண்/பெண் வார்ட் பழுது பார்த்தல் | C8 மற்றும் C7 |
| 20 | உலபனே பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு பழுது பார்த்தல் | C7 மற்றும் C6 |

கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் : 2021.03.29 பி.ப.3.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் : 2021.03.30 மு.ப.10.00 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை கண்டி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்காளர் அல்லது நிர்மாண பொறுப்பதிகாரியை தொலைபேசி இல - 0812236452, 0812232456 மற்றும் பொறியியல் சேவைத் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் அல்லது மாவட்ட பொறியியலாளரின் (சுகாதார கட்டிடங்கள்) தொலைபேசி இல - 081-2201624/0812203611 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை**
**கண்டி.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம், கல்முனை அலுவலக தளபாடம், மருத்துவ உபகரணங்கள், கணனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் உபகரணங்களின் பெறுகை**

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டம் – 2021

கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | உபகரணத்தின் பெயர் | அலகுகள் | மீளளிக்கப்படாத கட்டணம் | விலைமனுப்பிணை |
|---|---|---|---|---|
| | **பொதி இல. 01. மருத்துவ உபகரணங்களின் பெறுகை** | | | |
| | Ref. No. EP/KAL/RDHS/PSSP/P1/MEQ Den/2021 | | | |
| 1. | பற்சிகிச்சை கதிரைகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல் | 2 | 1,000.00 | 15,000.00 |
| | **பொதி இல. 02.** கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்பவியல் உபகரணங்களின் பெறுகை. | | | |
| | Ref. No. EP/KAL/RDHS/PSSP/P2/IT.Equi/2021 | | | |
| 2. | Laptop | 4 | 1,000.00 | பெ.சே.வரி நீங்கலாக விலைமனுவின் மொத்த பெறுமதியின் 1% - மூடும் திகதியிலிருந்து 45 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். |
| 3. | Barcode Reader | 4 | | |
| 4. | POS Printer | 4 | | |
| 5. | Sticker Printer | 4 | | |
| 6. | HD Web Camera | 4 | | |
| 7. | Wireless Laser Printer | 4 | | |
| 8. | Laminating Machine | 4 | | |
| 9. | Desktop Computer set | 4 | | |
| 10. | Printer | 4 | | |
| 11. | Portable sound system | 6 | | |
| | **பொதி இலக்கம்-03.** அலுவலக தளபாடம் மற்றும் ஏனைய உபகரணங்களின் பெறுகை | | | |
| | Ref. No. EP/KAL/RDHS/PSSP/Hos fur/2021 | | | |
| 13. | Iron cupboard with glass | 8 | 1,000.00 | பெ.சே.வரி நீங்கலாக விலைமனுவின் மொத்த பெறுமதியின் 1% - மூடும் திகதியிலிருந்து 45 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். |
| 14. | Waste Collection Bins | 68 | | |
| 15. | Waste Collection Cart | 12 | | |
| 16. | High Back Chairs | 8 | | |
| 17. | Office Table | 8 | | |
| 18. | OPD waiting chairs | 200 | | |
| 19. | OPD 3 seater Gang chairs | 60 sets | | |
| 20. | Low back chairs | 20 | | |
| 21. | Visitor chairs for Auditorium (Cushion chair with Arm) | 250 | | |
| 22. | Head table for Auditorium | 4 | | |

1. பெறுகை முறைமையானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரலின் ஒரு-கட்ட உறை முறைமையிலமைந்திருக்கும்.
2. பின்வருவனவற்றை சமர்ப்பித்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து 2021.03.19 ஆம் திகதியிலிருந்து 2021.04.08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் ஒவ்வொரு பொதிக்குமான விலைமனுக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
   - மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணங்களை ஒவ்வொரு பொதிக்கும் ரொக்கப் பணத்தில் செலுத்தி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலக நிதியிடல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு.
   - கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   - வியாபார பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2021.04.09 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கல்முனை, பொலிஸ் நிலைய பாதை, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். வழங்கல்களின் உரித்தான விலைமனு தலைப்பு தபாலுறையின்/ உறையின் இடது பக்க மேல் மூலையில் தனித்தனியாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

   தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதியின் முன்னால் திறக்கப்படும்.
4. அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை யொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விலைமனுப் பிணையானது இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள தகுதியான விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக நிதியிடல் பணிமனை/ திட்டமிடல் பணிமனையிலிருந்து அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு: 067-2224067 மற்றும் 067-2223640.
6. இக்கேள்வி தொடர்பாக பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**டொக்டர் ஜி. சுகுணன்,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், பொலிஸ் நிலைய பாதை, கல்முனை.**

# பெறுகை அறிவித்தல்

**ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்குத் தேவையான கைத்தறி நூல், சாயம், இரசாயனப் பொருட்கள், கைத்தறி உபகரணங்கள், சுயதொழில் உபகரணங்கள் மற்றும் அரியப்பட்ட மரங்களைக் கொள்வனவு செய்தல் - 2021**

ஊவா மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 2021ஆம் வருடத்திற்குத் தேவையான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வகை | கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் அளவு | மீளளிக்கப்படும் விலைக் கோரல் வைப்பு (ரூபா) | மீளளிக்கப் படாத விலை வைப்பு |
|---|---|---|---|---|
| 01 | கிறே நூல் (கைத்தறி இயந்திரங்களுக்கு) | 5,000 kg | 50,000.00 | 3,000.00 |
| 02 | 2/80 நிற நூல் (கைத்தறி இயந்திரங்களுக்கு) | 3,000 kg | 50,000.00 | 3,000.00 |
| 03 | நிற நூல் மற்றும் ரெயோன் நூல் கோர்ன் (கைத்தறி இயந்திரங்களுக்கு) | 2,000 kg | 50,000.00 | 3,000.00 |
| 04 | சாயங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் | 500 kg | 50,000.00 | 3,000.00 |
| 05 | கைத்தறி உபகரணங்கள் | | 50,000.00 | 3,000.00 |
| 06 | மரம் சார்ந்த உற்பத்திக்குத் தேவையான பொருட்கள் | | 50,000.00 | 3,000.00 |
| 07 | அரியப்பட்ட மரங்கள் | 15000 நீள் அடிகள் | 50,000.00 | 3,000.00 |
| 08 | சுய கைத்தொழில் உபகரணங்கள் | | 50,000.00 | 3,000.00 |
| 09 | தையல் இயந்திரங்கள் | | 50,000.00 | 3,000.00 |

02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள கட்டணங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களை வழங்குதல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் என்பன பின்வரும் திகதி மற்றும் நேரங்களில் இடம்பெறும்.

விலைமனுக்கள் வழங்குதல் - 2021-03-22ஆம் திகதி முதல் 2021-04-18ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தில்

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் - 2021-04-19ஆம் திகதி வரை பி.ப. 2.00 ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தில்

விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2021-04-19ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணிக்கு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தில்

04. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது 055 2222607 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**2021-03-19ஆம் திகதி**
**ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**

**அஜித் திசாநாயக்க,**
**பெறுகைக் குழுவின் தலைவர்.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**லெங்காரா லெஷர் (பிறைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: PV 00234936
கூட்டிணைக்கப்பட்ட திகதி :
**15.02.2021**
பதிவு முகவரி :
**இல. 27/8, சில்வா லேன், மீத்தொட்டமுல்ல ரோட், கொலன்னாவ, வெல்லம்பிட்டிய.**

**பணிப்பாளர்கள் சபை.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**கஸ்தானே சிலோன் (பிறைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: PV 00235936
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 05.03.2021
பதிவு முகவரி :
**இல. 359/1A, காலி வீதி, கல்கிசை, ரத்மலானை.**

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**கிரேகொரிஸ் பார்ட்னர்ஸ்,**
**கம்பனி செயலாளர்,**
**53/3B, கிரேகெரிஸ் ரோட்,**
**கொழும்பு-07.**

## அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் விதிகளுக்கமைய விடுக்கப்படும் அறிவித்தல்

கம்பனியின் பழைய பெயர்:
**எம்எஸ்எல் ஒடிட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனியின் புதிய பெயர்:
**முல்கம்பொள பொரொபர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம் : **PV 15039**
பதிவு அலுவலக முகவரி :
**இல. 209, டீ சேரம் பிளேஸ், கொழும்பு -10**
பெயர் மாற்ற சான்றிதழ் திகதி:
**2021.03.02**
மேற்படி கம்பனியின் சார்பாக மெனேஜர்ஸ் அன்ட் செக்ரடரீஸ் (பிரைவட்) லிமிட்டட்

**செயலாளர்கள்**
**இல. 08, டிக்கெல் ரோட், கொழும்பு -08**

## அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் விதிகளுக்கமைய விடுக்கப்படும் அறிவித்தல்

கம்பனியின் பழைய பெயர்:
**எம்எஸ்எல் ஒடிட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனியின் புதிய பெயர்:
**முல்கம்பொள பொரொபர்டி இன்வெஸ்ட்மன்ட் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம் : **PV15329**
பதிவு அலுவலக முகவரி :
**இல. 839/2, பேராதனை வீதி, கண்டி**
பெயர் மாற்ற சான்றிதழ் திகதி:
**2021.03.11**
மேற்படி கம்பனியின் சார்பாக மெனேஜர்ஸ் அன்ட் செக்ரடரீஸ் (பிரைவட்) லிமிட்டட்

**செயலாளர்கள்**
**இல. 08, டிக்கெல் ரோட், கொழும்பு -08**

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

**IFB No.: SPC/SU/L/2021/FI/06**

### டிஜிட்டல் அச்சடிக்கும் இயந்திரமொன்றின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல்

- அரச அச்சக கூட்டுத்தாபனமானது தகுதியும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள், இறக்குமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து டிஜிட்டல் அச்சடிக்கும் இயந்திரத்தின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றது.
- விலைமனுதாரர் 70,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
- விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
- நிகரான தன்மையிலுள்ள இயந்திராதிகளின் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தலில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட முன் அனுபவமுள்ள உரித்தான முதன்மையாளர்களின் சார்பாக விலைமனுக்கள் உள்ளூர் முகவர்களினால் சமர்ப்பிக்கப்படலாம்.
- மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான 3,500 ரூபாவைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டுடன் இணைக்கப்பட்டு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். 2021.03.19 ஆம் திகதியன்று ஆரம்பித்து 2021.04.08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு பொருத்தமான இரு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அவையிரண்டும் இன்னொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் ''**Bid for Digital Printing Machine: SPC/SU/L/2021/FI/06**'' என அடையாளமிடப்பட்டு 2021.04.09 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பாணலுாவ, பாதுக்க அரச அச்சக கூட்டுத்தாபன வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனு சமர்ப்பிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 2021.04.09 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம், பாணலுாவ, பாதுக்க.**

SPC

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**வெர்ப்ஸ் இன்டர்நெஷனல் (பீவீடீ) எல்டீடி**

பதிவிலக்கம்:
**பிவீ 00235146**

பதிவு செய்யப்பட்ட முகவரி:
**76, பூர்வாராம வீதி, நுகேகொட**

கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**19.02.2021**

## பெயர் மாற்றம்

61 கோரக்கோவில் வீதி, மட்டக்களப்பு தரரை 2, சம்மாந்துறை என்ற முகவரியை உடைய இளங்குமாரன் நரரேஸ் குமார் (தே.அ. அட்டை இல. 198908703596) ஆகிய நான், எனது பெயரை 19.03.2021 முதல் இளங்குமரன் நரேஸ்குமார் என்று மாற்றுகின்றேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சகல மக்களுக்கும் அறியதருவதுடன் வரும் காலங்களில் எனது பெயரை இளங்குமரன் நரேஸ்குமார் என்றே பயன்படுத்துவேன் என்று உறுதி செய்கிறேன்.

**இளங்குமரன் நரேஸ்குமார்.**

## அட்டோர்ணி தத்துவப்பத்திரம் ரத்து செய்தல்

இல.62/1, 2ம் குறுக்குத் தெரு, புத்தளம் எனும் முகவரியில் வசிக்கும் ஏரம்பு செல்வராசா (தே.அ.அ.இல.472220225V) ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசுக்கும், பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது, 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் திகதி புத்தளம் பிரசித்த நொத்தாரிஸ் இஸ்னி ஆசிப் இக்பால் அவர்களினால் உறுதி செய்யப்பட்டதும், பதிவாளர் நாயகத்தின் வடமேல்/வடமத்திய பிரதிப்பதிவாளர் நாயக வலய அலுவலகத்தில் 43 இலக்க நாளாந்த பதிவேட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டு இல.62, 2 ம் குறுக்குத் தெரு, புத்தளம் எனும் முகவரியில் வசிக்கும் (1) செல்வராசா தர்சன (தே.அ.அ.இல. 915630200V) மற்றும் (2) கனகசபாபதி ஐங்கரதாசன் (தே.அ.அ.இல.850322015V) என்பவர்களுக்கு வழங்கப்பட்ட 1216ம் இலக்க பொது அட்டோர்ணி தத்துவப்பத்திரம் 23.01.2021 ம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் ரத்து செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கிறேன்.

**ஏரம்பு செல்வராசா**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

# விலைக்கேள்விக்கான கோரல் – 2021

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீக்கான, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும், இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார/ கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி5), Schedule (பகுதி3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021-2290111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் அட்டவணையின் படி காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 19.03.2021 தொடக்கம் 08.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 09.04.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 09.04.2021 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.
8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் 31.03.2021 ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost / (Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/03/PSSP/B/01 | Construction of Ambulance Garage with Drivers' Room at DH-Naddankandal | 3.20 | 89 Days | C8 and C7 (Buildings) | 33,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/02 | Construction of Mortuary BH Mankulam | 8.04 | 121 Days | C7 and C6 (Buildings) | 81,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/03 | Construction of Kitchen BH Mankulam | 7.31 | 117 Days | C7 and C6 (Buildings) | 73,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 03/PSSP/B/04 | Modification and Improvement of OPD building at DH- Alampil | 6.57 | 113 Days | C7 and C6 (Buildings) | 66,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/05 | Construction of Vehicle Park at AMC Mankulam | 0.89 | 67 Days | C9 and C8 (Buildings) | 9,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/06 | Improvement of RMO/AMC Office to accommodate COVID treatment center staff at AMC Mankulam | 53 | 57 Days | C9 and C8 (Buildings) | 6,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/Line/B/07 | Improvement & Renovation of Drug store at RMSD | 1.50 | 74 Days | C9 and C8 (Buildings) | 15,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/Line/B/08 | Improvement & Renovation the raking system to increase Drug store capacity at BH Mankulam | 0.42 | 47 Days | C9 and C8 (Buildings) | 5,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |
| NP/MU/2021/03/PSDG/B/09 | Improvement of Doctors' Summary Quarters at BH Mallavi | 0.47 | 53 Days | C9 and C8 (Buildings) | 5,000.00 | Till 23.07.2021 | 2,000.00 |

**வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# கொழும்பு மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் சேவை மற்றும் உருப்படியின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் கோருகின்றார்.

| | தொடர்பிலக்கம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | **CPD/08/1886/2020** | ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்களுக்கான பெறுகை |
| 2 | **CPD/09/3366/2020** | 2021ஆம் வருடத்தில் கொமாச வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான காப்புறுதி காப்பீடுகளை புதுப்பித்தல் |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

1) கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம் (www.colombo.mc.gov.lk)
   i. மீளளிக்கப்படாத 5400.00 ரூபா விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
      அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
      ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
      - மாவட்ட அலுவலகம் 04,
        இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
        கொழும்பு 06.
      - சாக்கடை மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
        மாளிகாகந்த, கொழும்பு 10.
   ii. பற்றுச்சீட்டு/ வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

2) நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.
   i. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமாக 5400.00 ரூபாவை நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு 2021 ஏப்ரல் 08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள, பெறுகைக்கான பிரதான கணக்காளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்காது / 2021 ஏப்ரல் 08ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் இரு பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் (விலைமனு பெட்டி) 2021 ஏப்ரல் 09ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2021 ஏப்ரல் 08ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

011-2686389 மற்றும் 011-2673173 ஆகிய தொலைபேசி எண்களினூடாக பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதும் இருப்பின் அவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நகர அபிவிருத்தி அதிகார சபை

## கேள்வி அறிவித்தல்

### கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பழைய மெனிங் சந்தை வளாகத்தின் கட்டிடங்களை உடைத்து அகற்றும் போது மிகுதியாகவுள்ள கழிக்கப்பட்ட இரும்பு மற்றும் பலகை தொகையை அகற்றுவதற்காக போட்டி விலைமனுக் கோரல்

1. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான புறக்கோட்டை பழைய மெனிங் சந்தை வளாகத்தில் கட்டிடங்களை உடைத்து அகற்றும் போது மிகுதியுள்ள கழிக்கப்பட்ட இரும்புகள் மற்றும் பலகை தொகையை போட்டி விலைமனுக் கோரல் மூலம் அகற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. இரும்புத் தொகை மற்றும் பலகை தொகையை கொள்வனவு செய்வதற்கு முன்வருபவர்களிடமிருந்து அதிகூடிய பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்படும் ஒரு கொள்வனவாளருக்கு மட்டும் சகல பொருட்களும் அகற்றப்படும் அத்துடன் இரும்பு மற்றும் பலகை தொகைக்கு வேறு வேறாக வழங்கப்பட மாட்டாது. எனவே எதிர்பார்க்கும் கொள்வனவாளர்கள் இரும்பு ஒரு கிலோவை கொள்வனவு செய்யும் விலையையும் முழுமையான பலகைத் தொகைக்கான விலையையும் வேறு வேறாக தெளிவாக சமர்ப்பிப்பதுடன், இரும்பு மற்றும் பலகைத் தொகைக்காக சமர்ப்பிக்கப்படும் அதிகூடிய விலைமனுவின் அடிப்படையில் வெற்றிகரமான கொள்வனவாளர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. மேற்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றிக் கொள்ளும் குறைந்த பட்ச பெறுமதிகள் இங்கு கீழே தரப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கும் கொள்வனவாளர் கீழே தரப்பட்டுள்ள விலைமனுக்களுக்கு கூடிய விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**மதிப்பிடப்பட்ட குறைந்தபட்ச பெறுமதிகள்**

| விபரம் | குறைந்த பட்ச பெறுமதி |
|---|---|
| கழிக்கப்பட்ட இரும்புத் தொகை (தகடுகள் உட்பட) | ஒரு கிலோவின் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 20.00 |
| கழிக்கப்பட்ட பலகைத் தொகை | முழுமையான தொகையின் பெறுமதி ரூபா 1,850,000/- |

4. இவ் விலைமனுவைக் கோருவதற்கு குறித்த விண்ணப்பங்களை மீளளிக்கப்படாத ரூ. 5,000/- தொகையை அதனோடு சம்பந்தப்பட்ட அரச வரித்தொகையுடன் பத்தரமுல்ல, 'செத்சிரிபாய' கட்டம் I கட்டிடத்தின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு 2021.03.22 முதல் 2021.04.06 வரை வாரத்தின் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கொடுப்பனவுகளின் பின் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021.04.08 பி.ப. 2.00 இற்கு முன் பத்தரமுல்ல, 'செத்சிரிபாய', கட்டம் I கட்டிடத்தின் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன், குறித்த நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் விண்ணப்பங்கள் எந்தக்காரணமும் கூறாமலேயே ஏற்கப்படமாட்டாது. தபால் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் குறித்த நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் 'தலைவர், வருமான கேள்விச் சபை (சிறிய), நகர அபிவிருத்தி அதிகார சபை, 6ஆம் மாடி, 'செத்சிரிபாய' கட்டம் I பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'புறக்கோட்டை பழைய மெனிங் சந்தையில் உள்ள இரும்பு மற்றும் பலகைகளை அகற்றிக் கொள்வதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

5. மேலதிக விபரங்களை பத்தரமுல்ல ' செத்சிரிபாய', கட்டம் I கட்டிடத்தின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. இல. 0113357363 அல்லது 0112875916-20 நீடிப்பு 2937

**தலைவர்,**
**வருமான கேள்விச் சபை (சிறிய)**
**நகர அபிவிருத்தி அதிகார சபை**
**6ஆம் 7ஆம் மாடி, 'செத்சிரிபாய', கட்டம் I**
**பத்தரமுல்ல.**

# இரணைதீவு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்குள் வாழ்கின்றனர்

## சிவஞானம் சிறிதரன் எம்.பி



பரந்தன் குறூப் நிருபர்

நிலத் தொடர்புகள் இல்லாத இரணைதீவு பகுதியில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி இரணைதீவு பிரதேசத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கான உலர் உணவுப் பொருட்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைதீவு பகுதியில் தங்கியிருக்கின்ற மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் கனடா நாட்டில் வசிக்கும் சிறி என அழைக்கப்படும் சின்னத்துரை சண்முகலிங்கம் என்பவரால் வழங்கி வைக்கப்பட்டது. நேற்றுக் காலை 9 மணிக்கு குறித்த உணவுப் பொருட்கள் இரணைமாதா நகர் இறங்குதுறையில் வைத்து பங்கு தந்தையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. நிலத் தொடர்புகளுடன் இருக்கின்ற மக்களைவிட நில தொடர்புகள் இல்லாத இரணைதீவு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

இந்த மக்கள் இன்று தங்களுடைய சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ முடியாமலும் சொந்த கடலில் தொழில் செய்ய முடியாத ஒரு நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலேயே இந்த பங்களிப்பு பங்குத்தந்தை விடுத்த கோரிக்கைக்கு அமைவாக சின்ன துரை சண்முகலிங்கம் இந்த உதவியை வழங்கி இருக்கின்றார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆறு மாவட்டங்களில் தேசிய நெல் கொள்முதல் வெற்றியளித்துள்ளது

## அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே

சுப்பிரமணியம் நிஷாந்தன்



அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய ஆறு மாவட்டங்களில் தேசிய நெல் கொள்முதல் நடவடிக்கை வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கிளிநொச்சியிலுள்ள நெல் கொள்முதல் அலுவலகத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 10,000 மெற்றிக்தொன் நெல்லை எளிதில் கொள்முதல் செய்ய முடியும் என்பது தெரியவந்தது

தேசிய நெல் கொள்முதல் நடவடிக்கையில் ஒரு மாதத்தில் 200,000 மெற்றிக்தொன் நெல் வாங்கும் திட்டம் மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளதாக அமைச்சர் இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

"அரசாங்கத்திடம் 300,000 மெற்றிக்தொன் நெல்லை கையிருப்பில் வைத்திருப்பதன் மூலம் விவசாயிகளையும் நுகர்வோரையும் நெல் மற்றும் அரிசி மாபியாவிலிருந்து பாதுகாக்க முடியும். இந்த பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நெல்லை வாங்குவதற்கான அரசாங்கத்தின் முடிவு அவர்களுக்கு ஒரு நல்ல பொருளாதார சூழ்நிலையை உருவாக்கியுள்ளது" – என்றும் அமைச்சர் இதன்போது கூறியுள்ளார். இதேவேளை ஆறு மாவட்டங்களில் தேசிய நெல் கொள்முதல் நடவடிக்கைக்காக 366 அதிகாரிகள் விவசாய அமைச்சால் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதுடன், ஆலைகளுக்கு சென்று நெல்லை ரொக்கமாக வாங்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சரால்

# கிழக்கில் தானிய செய்கையை ஊக்குவிக்கும் விசேட திட்டம்



(ஏறாவூர் நிருபர் )

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக் கிணங்க நாட்டில் முன்னெடுக்கப்படும் 'சுபீட்சத்தின் நோக்கு" தேசிய திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் இறக்குமதி தானியப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் விசேட திட்டம் மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் புதன்கிழமை (17) ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் மாவட்ட செயற்பாட்டாளர் பீ. சந்திரகுமார் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். சோலை விவசாய அமைப்பின் தலைவர் தி. சிவநிதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இராணுவ கட்டளையதிகாரி மேஜர் சில்வா மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் வாகரையில் முந்நூறு ஏக்கர் நிலத்தில் உழுந்து, பயறு, கௌபி, கச்சான் மற்றும் குரக்கன் போன்ற தானியப் பயிர்கள் செய்கை பண்ணப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-84

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 09.04.2021 ஆந்திகதி பி.ப. 2 மணி வரையாகும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலை மனுக்கள் திறக்கப்படும்.

01. White Printing Paper-20"x25"-80 GSM
    - Material : White Printing Paper
    - Quality : Wood Free & Surface Sized
    - Substance : 80 ± 2.5% GSM
    - Size : 20"x25"
    - Quantity Required : 100 ± 10% Metric Tons
    - Bid Reference No. : SI. 2021/26
    - Bid Fee : Rs. 7,000.00
02. White Printing Paper-30"x40" - 80 GSM
    - Material : White Printing Paper
    - Quality : Wood Free & Surface Sized
    - Substance : 80±2.5% GSM
    - Size : 30"x40"
    - Quantity Required : 50 ± 10% Metric Tons
    - Bid Reference No. : SI. 2021/30
    - Bid Fee : Rs.4,000.00

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்துடன், அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு முந்திய தினம் பி.ப.2 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ்க் காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்கள வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3 மணி வரை உரிய விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை, கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
**பொருட்கொள்வனவுக்குழுத் தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளங்கள்: www.documents.gov.lk**
**www.npa.gov.lk**
**16.03.2021**

---

**Cargills Bank**
Banking on the Human Spirit

**கார்கில்ஸ் வங்கி லிமிடெட்**
**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

வாடிக்கையாளரின் பெயர் : **ரீவ்ஸ் எஜ் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்**

2021/02/25 ஆந்திகதியன்று நடைபெற்ற கார்கில்ஸ் வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

**கடப்பாட்டாளராக ரீவ்ஸ் எஜ் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்,** PB 4847 ஆம் பதிவிலக்கத்தைக்கொண்டதும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை இல.696, காலி வீதி, கொழும்பு 3 இல் கொண்டுள்ளதும் (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) கார்கில்ஸ் வங்கி லிமிடெட் சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.பீ.டபிள்யூ.ஜயவீர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018/01/19 ஆந்திகதிய **6369 ஆம் இலக்க** ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்டதும் அடைமானம் வைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டதுமான ஆதனத்தின் பிணைப்பொறுப்புக்கெதிராக அளிக்கப்பட்ட நிதிவசதியை மீளக்கொடுப்பனவுசெய்வதில் தவணைதவறியுள்ளதாதலாலும்,

**அத்துடன்** 202009/10 ஆந்திகதியிலிருந்து முழுமையாகக் கொடுப்பனவுசெய்யப்படும் திகதிவரை ஐஅடொ 2,429,166.64 கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு 7% வட்டியுடன் 2020/09/09 ஆந்திகதிவரையில் முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் இரண்டு மில்லியன் ஐந்து இலட்சத்து இருபதாயிரத்து நூற்றிப்பதினான்கு ஐக்கிய அமெரிக்க டொலர் எழுபது சதம் (ஐஅடொ 2,520,114.70) கொண்ட தொகை சொல்லப்பட்ட 6369 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வங்கிக்கு இப்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் வந்துள்ளது **ஆதலாலும்.**

**இத்தாற் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது:-**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி, இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டவையும் **6369 ஆம் இலக்கத்தைக்கொண்ட ஈட்டுமுறிமூலம் கடப்பாட்டாளராக ரீவ்ஸ் எஜ் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினால்** வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனங்களை, சொல்லப்பட்ட இரண்டு மில்லியன் ஐந்து இலட்சத்து இருபதாயிரத்து நூற்றிப்பதினான்கு ஐக்கிய அமெரிக்க டொலர் எழுபது சதம் (ஐஅடொ 2,520,114.70) கொண்ட தொகையையும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனைத்தேதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியையும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுதொகைகளையும் பணங்களையும், பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காகப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வதற்கு கொலன்னாவ, விஹார மாவத்தையில், 182/3 (50/3) ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் **துசித் கருணாரத்ன** என்பவருக்கு அதிகாரமளிக்கப்படுதலும் தத்துவமளிக்கப்படுதலும் வேண்டுமென்றும்,

**மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் அளுத்குருக் கோறளையின் ராகம் பத்துவில் வத்தளை பிரதேசசபை எல்லைகளினுள் வத்தளை பிரதேச செயலகப் பிரிவில் உஸ்வெட்டகியாவ கிராம அலுவலர் பிரிவினுள் பறண அம்பலமவில் அமைந்துள்ளதும், கொழும்பு வீதியில், 304 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் "தொம்பகஹாவத்த மற்றும் தொம்பகஹாவத்த கொட்டச கல்பனதோட்டே கல்பனதொட்டாவத்த" எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கேஈஜேபி பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994/05/25 ஆந்திகதிய 3509 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டங்கள் 1 மற்றும் 2 இன், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம்டிஜேவீ பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996/09/10 ஆந்திகதிய 15125 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் யு இன், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கேஈஜேபி பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994/05/25 ஆந்திகதிய 3508 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டங்கள் 1 மற்றும் 2 இன், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம்டிஜேவீ பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1981/08/08 ஆந்திகதிய 6123 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 2 இன் மற்றும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ் விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007/02/09 ஆந்திகதிய 4479/9000 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டங்கள் X1, X2, X3 மற்றும் X4 இன் மீள்நிலஅளவையாகவும் ஒன்றுசேர்க்கையாகவும் உள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ் விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012/02/29 ஆந்திகதிய 6424A/9000 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் X1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் X1 பின்வரும் எல்லைகளையுடையது:- வடக்கில் எல்ஈஎன் ரீட்டா நாணயக்கார மற்றும் ஏனையோரினாலும் ஜேடிஆர் ஜயமண்ணவினாலும் உரிமைகோரப்பட்ட காணிகள், 3519 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 இன் பாகம், ஓடை மற்றும் ரூபன் நாணயக்காரவின் காணி, கிழக்கில் ஓடையும் மேட்டுநிலமும், தெற்கில் முன்னர் சென்றல் பினான்ஸுக்குரிய காணியும் ரண்வெலி கார்டன்ஸ் ஹொட்டேலுக்குரிய வளவுகளும் மற்றும் மேற்கில் ஓடை, ஒக்கான் ஸ்பிரேக்குரிய வளவுகள் மற்றும் ரண்வெலி கார்டன்ஸ் ஹொட்டேலுக்குரிய வளவுகள் அத்துடன் கொழும்பு - உஸ்வெட்டகியாவ வீதி, பரப்பளவில் இது, அதன்மீதுள்ள மரங்கள், கட்டிடங்கள், பயிர்கள், மண் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 6424A/9000 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஆறு ஏக்கர் பதினெட்டுப் பேர்ச்சுக்களை (ஏ6-ரூ0-பே18) கொண்டுள்ளது. கம்பஹாக் காணிப்பதிவகத்தில் உரித்து தொகுதி/பக்கம் L 44/04 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**சமீல அபேசூரிய**
**தலைவர் – அறவீடுகள்**

skillsads

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
LAKE HOUSE

---

# சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் 122

விற்பனைக்கு

WP ABN-1388 Bajaj, 2016, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810. 021069

WP BHW- 7363 Honda Dio, 2019, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 021066

### வர்த்தகம்

### மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை 218

உடல் பருன் கூட்டுதல், குறைத்தல், புகை மது பாவனை நிறுத்துதல், அதிக நித்திரை, நித்திரையின்மை, மனச்சோர்வு, கோபம், சரும நோய்கள் உள்நாட்டு மருத்துவம் மூலம் நிவாரணம் பெறலாம். Dr. ஆப்டீன் சுஐப், நிவ்திஹாரிய மெடிக்கல், 116 C, கொழும்பு கண்டி வீதி, திஹாரி சந்தி பெற்றோல் நிலையம் அருகே. 07183 6 9 333, 07406 5 6 333. 016928

### சொந்த விடயம்

### முத்திரைகள், நாணயங்கள் 524

இலங்கை சுதந்திர முத்திரை சேகரிப்போர் சங்கத்தினால் நடாத்தப்படும் பழைய முத்திரை, நாணயம் மற்றும் நாணயத்தாள்கள் விற்பனைச் சந்தை மார்ச் மாதம் 19, 20, 21 ஆகிய தினங்களில் கொழும்பு 07 மக்கள் நூலக நுழைவு மண்டபத்தில் முற்பகல் 8.00 முதல் பிற்பகல் 5.00 வரை நடைபெறும். 0779785111. 019655

Repeat Your Ad For Better Offers

---

## மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| WP BBG - 19XX | APACHE RTR | BIKE |
| NC BCN-35XX | PULSAR 135 LS | BIKE |
| SG BIP-50XX | FZ | BIKE |
| CP BIQ - 50XX | NTORQ | BIKE |
| WP BIR - 55XX | MT-15 | BIKE |
| WP BGO - 64XX | APACHE RTR | BIKE |
| WP BGX-68XX | NTORQ | BIKE |
| NC BIK - 70XX | FZ VRSION 0.2 | BIKE |
| WP BGE - 74XX | DIO | BIKE |
| WP BIN - 74XX | FZ VERSION 03 | BIKE |
| WP BCB-75XX | PULSAR 150 | BIKE |
| WP BGX-85XX | XL HEAVY DUTY | BIKE |
| UP BER-90XX | APACHE RTR | BIKE |
| SP BIO - 19XX | RAY-ZR | BIKE |
| SP BHA-23XX | RAY-ZR | BIKE |
| SP BFN 33XX | PULSAR 200 NS | BIKE |
| SP BHC-44XX | XL SUPER HD | BIKE |
| SP BFB-54XX | FZ-S | BIKE |
| SP BFS - 58XX | METRO | BIKE |
| SP BIC-63XX | NTORQ | BIKE |
| SP BBW - 64XX | ZEST | BIKE |
| SP BGS - 65XX | XL SUPER HD | BIKE |
| SP BHR - 83XX | DIO | BIKE |
| SP BBC - 86XX | METRO | BIKE |
| SP BGH - 93XX | WEGO | BIKE |
| SP BIK - 70XX | RAY-ZR | BIKE |
| UP BFU - 98XX | ROCKSTAR | BIKE |
| WP BGR-35XX | DIO | BIKE |
| WP BIQ - 92XX | NTORQ | BIKE |
| NW BIK-77XX | DIO | BIKE |

இல.17/1, பின்ஹென ஜங்ஷன், ஹொரண வீதி, கொட்டாவ வாகன சாலையில் 2021 மார்ச் 23ம் & 24ம் திகதியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.

முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்குரிமையுண்டு

உங்கள் இருக்கையை முன்கூட்டியே முன்பதிவு செய்ய (கட்டணம் ரு.1,500) 0719919986 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

**0719 919 986 / 0712 591 067**

**ஏலத் திகதி : 25.03.2021**
**நேரம்: காலை 10.00 மணி**

*நிபந்தனைக்குட்பட்டது
நுழைவு முதல் வரும் 50 நபர்களுக்கு மட்டும்

தலைமை அலுவலகம்
**ஆப்பிகோ பினான்ஸ் கோ. பி.எல்.சி**
146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.
தொடர்புகளுக்கு : 0115 553663
Estd.1951 PQ 92

diadem DSM

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**

வர்த்தக அமைச்சு

**2021ஆம் வருடத்தில் பாதுகாப்பாக அரிசித் தொகைகளை களஞ்சியப்படுத்திக் கொள்வதற்காக வழங்குநர்களின் ஆர்வத்தைக் கோருதல்**

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் திருத்தம் செய்தல்**

மேற்படி விடயம் தொடர்பில் **2021.03.18ஆம் திகதி** பிரசுரமான பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆர்வத்தைக் கோரும் விண்ணப்பத்திற்கான திகதி **2021.03.18**ஆம் திகதியிலிருந்து **2021.03.25** ஆம் திகதி என மாற்றப்படுதல் வேண்டும்.

ஆர்வத்தைக் கோரும் விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் **2021.03.26**ஆம் திகதி **பி.ப.3.00** மணி என மாற்றப்படுதல் வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை 0112304078/0762566047 எனும் தொலைபேசி இலக்கத்தில் உதவிச் செயலாளர் (நிர்வாகம்) அவர்களிடம் மேற்கொள்ளலாம்.

செயலாளர் - வர்த்தக அமைச்சு,
7ஆம் மாடி,
இல. 27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.
திகதி: 2021.03.19

---

## 60 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களை லெபனான் நாட்டிற்கு வேலைவாய்ப்புக்கு அனுப்புதல்

லெபனான் நாட்டிலுள்ள இலங்கை தூதரக அறிக்கையின்படி வயது கூடிய இலங்கையர்கள் காப்புறுதி மற்றும் வதிவிட அனுமதியில்லாமல் அந்நாட்டில் தங்கியுள்ளனர். அவ்வாறானவர்கள் தொற்றா நோய்களுடன் காணப்படுவதுடன் COVID-19 இனாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமையில் அவர்கள் போதிய மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் லெபனான் நாட்டில் COVID - 19 கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும் வரை 60 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களை அந்நாட்டிற்கு வேலைவாய்ப்பிற்காக அனுப்ப வேண்டாமென தூதரகம் அறிவித்துள்ளது.

எனவே லெபனான் நாட்டில் COVID – 19 கட்டுப்படுத்தப்படும் வரை 60 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களை அந்நாட்டுக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது பொது மக்களை வேண்டிக் கொள்கின்றது.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்** 24மணி நேர சேவை 1989

# இரத்தினபுரி தோட்டப்புற மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

இரத்தினபுரி, பலாங்கொட, பெல்மதுல்ல, இறக்குவான ஆகிய தோட்டப்புறங்களிலுள்ள தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கவனம் செலுத்தியுள்ளார்.

இதன்போது தோட்டங்களில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சுகாதாரம், வீடமைப்பு, கல்வித்துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இப்பிரதேசங்களுக்கு இந்திய வீடமைப்பு திட்டத்தினூடாக வீட்டுத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



மேலும் அப்புகஸ்தன்னை தோட்ட வைத்தியசாலையை அரசாங்கம் பொறுப்பேற்று கவனிப்பாரற்ற நிலையில் கடந்த மூன்று, நான்கு வருடங்களாக காணப்படுகின்றது.

இது தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடி வெகு விரைவில் தீர்வு பெற்று தருவதாகவும் உறுதியளித்தார்.

இக் கலந்துரையாடலில் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் சிரேஷ்ட இயக்குனர் ராஜமனி குறித்த தோட்டத்தின் தலைவர்கள், தலைவிகள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# சகலருக்கும் மின்சாரம் வழங்கும் செயற்திட்டம்

அநுராதபுரம் மேற்கு தினகரன்

'சகலருக்கும் மின்சாரம்' வழங்கும் செயற்திட்டத்தினை சிறந்த முறையில் முன்னெடுப்பது தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தலையிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். நாடளாவியரீதியில் மின்சாரமில்லாத சகல வீடுகளுக்கும் மின்சாரத்தை வழங்கும் நோக்குடன் அரசினால் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனூடாக தற்றோது மின்சார வசதி இல்லாத குறைந்த வருமானமுடையோர்களை இனங்கண்டு அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைககளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் கடந்த 15 நடைப்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

"சகலருக்கும் மின்சாரம்" செயற்திட்டத்தின் கீழ் இவ்வருட இறுதிக்குள் மின்சாரம் இல்லாத சகல வீடுகளுக்கும் மின்சாரத்தை வழங்க கேபில்கள் இழுப்பதற்கு அல்லது வேறு வழிமுறைகளைப் பின்பற்றி அவ்வீடுகளுக்கு மின்சாரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் மின்சாரம் பெற்றுக் கொள்ள முடியாமல் நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள வசதி குறைந்த பயனாளிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளன.

அதனால் மின்சாரமில்லாத சகல குறைந்த வருமானமுடைய வீட்டு உரிமையாளர்களுக்கும் குறைந்த பட்ச 4 வீத வட்டி அடிப்படையில் 20 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.





கிராமிய குளங்கள் அணைக்கட்டுகள் அபிவிருத்தி செய்யும் "நீர்ப்பாசன செழுமை "தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் அனுராதபுரம் மாவட்ட பல்லேகாகம குளத்தின் புனரமைப்பு பணிகளை இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்காவால் ஆரம்பித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம்.

( படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

# மஸ்கெலிய மொக்கா தோட்ட மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

மஸ்கெலிய பிரதேச சபைக்குட்பட்ட மொக்கா மிட்லோதியன் பிரிவில் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் வைபவரீதியாக மக்கள் பாவனைக்கு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த திட்டத்தை செயற்படுத்த உலக வங்கி 54.5 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 600 குடும்பங்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வர். நேற்று முதல் இவர்களுக்கு நீர் பெறுவதற்கான மானி பொருத்தப்பட்டுள்ளது.

மாதாந்தம் 100 ரூபாய் அறவிடபடவுள்ளது.

இத்திட்டம் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு, நேற்று நிறைவு பெற்று மக்கள் பாவனைக்கு கையளித்தனர்.

இந்நிகழ்வில் திட்ட பொறியியல் அதிகாரி என்.யு. கெ. ரணதுங்க, தேசிய நீர் வடிகால் சபையின் உதவி அதிகாரி சுனில் சாந்த. பொது துறை உயர் அதிகாரி முதன்நாயக்க, மஸ்கெலிய பெருந்தோட்டயாக்க உதவி பொது முகாமையாளர் இசுரு கருணாரட்ன.

தோட்ட முகாமையாளர் நரேந்திர விஜயரத்ன. ஆகியோருடன் ஏனைய அதிகாரிகள் பலர் உட்பட தோட்ட மக்கள் கலந்து கொண்டார்.

# கொட்டகலையில் மேலும் 10 பேருக்கு கொரோனா

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

கொட்டகலை பொது சுகாதர பரிசோதகர் பகுதியில் ஆசிரியை ஒருவர் உட்பட மேலும் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து இதுவரையில் 150 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

அண்மையில் ஆசிரியர்கள் மாணவர்கள் என 10 பேருக்கு தொற்று உறுதியானதையடுத்து அவர்களோடு தொடர்பை பேணியவர்களுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை நேற்று வெளியான போதே ஆசிரியை ஒருவர், கெம்ர்ஷியல் பகுதியை சேர்ந்த ஐவர் மற்றும் டெரிகிளேயர், லோகி தோட்ட பகுதியை சேர்ந்த நால்வர் என 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. தொற்றுக்குள்ளானவர்களை சுயதனிமை மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதுவரையில் 150 பேருக்கு கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொட்டகலை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.



கண்டி, ஹந்தானை பாரதி பெண்கள் சங்கம் மற்றும் ஈரோஸ் ஜனநாயக முற்போக்கு கூட்டணி என்பன இணைந்து ஹந்தானையில் அண்மையில் மகா சிவராத்திரி விழா வை நடத்தியது இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். அக்குறணை குறூப் நிருபர்

# மோட்டார் சைக்கிள் திருட்டு

கல்நேவ தினகரன் விசேட நிருபர்

கல்நேவ வாராந்த சந்தைக்கு பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு வருகை தந்த விவசாயி ஒருவருடைய மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக கல்நேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் இம்மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. அவுக்கன விகாரைக்கு அருகில் வசிக்கும் 51 வயதுடைய நபர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் கல்நேவ வாராந்த சந்தைக்கு சென்றுள்ளார். தமது வீட்டுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வருகை தந்த இவர் சந்தைக்கு பின்னால் நிறுத்தி விட்டு சென்றுள்ளார். ஒரு மணி நேரத்திற்கு பின்னர் மீண்டும் வீட்டுக்கு செல்வதற்காக மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைத்த இடத்தில் வந்து பார்த்த போது தனது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

51 வயதுடைய அவுக்கன பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கல்நேவ பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய சமாதானப் பேரவையின் உணவு கலாசார விழா

வெல்லாவெளி தினகரன் நிருபர்

இனங்களுக்கிடையே உணவுக் கலாசார பன்மைத்துவத்தின் ஊடாக சமாதான மேம்பாடு எனும் தொனிப்பொருளில் அமைந்த உணவு கலாசார விழா மட்டக்களப்பில் நேற்று (18) இடம்பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மாவட்ட சர்வமதப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் இலங்கையின் பாரம்பரிய சமூக கலாசார பண்பாட்டு ரீதியில் அந்தந்த சமூகங்களுக்கே உரித்தாக அமைந்த உணவுகள் பரிமாறப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே. கருணாகரன் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் சிரேஸ்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சமன் செனவிரெட்ன மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளர் இராசையா மனோகரன்,தேசிய சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு பணிப்பாளர் எஸ்.எச்.ஹமீர், பட்டிப்பளை பிரதேச அலுவலர் ஏ. தயாசீலன்,ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே. சங்கீதா உள்ளிட்டோரும்,தேசிய சமாதானப் பேரவையின் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த சமயப் பெரியார்கள் அதன் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பலாங்கொடை நகரசபையினால் குப்பை கூளங்களை சேகரிக்கும் பணி இடைநிறுத்தம்

## பொதுமக்கள் அசௌகரியம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை நகரசபை எல்லைப்பகுதிகளில் குப்பை கூளங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நகரை சுத்திகரிக்கும் பணிகள் கடந்த 17ஆம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமை காரணமாக நகரத்திலும் நகரசபை எல்லைப் பகுதிகளிலும் பல்வேறு இடங்களில் பாரிய அளவில் குப்பை கூளங்கள் குவிந்துள்ளதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். அதேசமயம் நகரசபை எல்லைப் பகுதியில் உள்ள வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பை கூளங்களை கொண்டு செல்ல நகரசபையின் டிராக்டர் வண்டி வராமையினால் வீடுகளிலும் குப்பைகள் குவிந்து துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டுள்ளது.

2021 ஆம் வருடத்திற்கான பலாங்கொடை நகரசபையின் அத்தியாவசிய பணிகளை நிறைவேற்ற நிதியினை செலவு செய்வதற்கு அனுமதி கோரும் விசேட கூட்டம் கடந்த 16ஆம் திகதி நகர சபையில் இடம்பெற்றதுடன் அந்த தீர்மானம் வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தமையால் நகர சபையின் அனைத்து பணிகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து பலாங்கொடை நகரிலுள்ள அசுத்த நீர் வழிந்தோடும் சாக்கடைகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டமையினால் நகர் முழுவதும் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர். இந்த நிலைமை காரணமாக நகரிலுள்ள வியாபார நிலைய உரிமையாளர்களும் நகரத்துக்கு வருகை தருகின்ற பொதுமக்களும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

# அருகிவரும் வெசாக் மலர்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சினால் 2005 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாண மலராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வெசாக் மலர் மிகத் துரிதமாக சுற்றாடலிலிருந்து அருகி வருவதாக இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

வெசாக் மலராகவும் "டெட்றோபியம் மெகொராய்" எனும் தாவரவியல் பெயராகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஊதா நிறத்தையுடைய இந்த மலர் சிங்கராஜ வனம் மற்றும் சிவனொளிபாத மலை யாத்திரை பிரதேசங்களில் அதிகமாக காணப்படுவதுண்டு.

சுமார் ஒரு மாத காலம் மலர்ந்த நிலையில் உதிராமல் காணப்படும் வெசாக் மலர்ச் செடியில் 15 பூக்கள் வரை பூத்திருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது

# ஜயபிம மயான பாதைக்கான பாலம் புனரமைப்பு

புத்தளம் தினகரன் நிருபர்

ஜயபிம மக்களின் நீண்டகால தேவையாக இருந்த ஜயபிம மயானத்துக்கு செல்லும் பாதைக்கான பாலம் புனரமைக்கப்படவுள்ளது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் வேண்டுகோளுக்கிணங்க 19.6 மில்லியன் ரூபா செலவில் இந்த மயான வீதி புனர் நிர்மாணம் செய்யப்படவிருக்கின்றது.

20 அடி அகலமும் 40 அடி நீளமும் கொண்ட பாலமாக இது அமைய இருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், சிலாபம் நகர சபை உப தலைவர் அமீன், வண்ணாத்திவில்லு பிரதேச சபை உறுப்பினர் அனஸ்தீன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம்.ரியாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# இரத்தினபுரி மாவட்ட ஆறுகளில் 1393 இடங்களில் நீர் மாசு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தில் நீர் மாசடையும் ஆறு இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மத்திய சுகாதார அதிகார சபையின் பணிப்பாளர் டப்ளிவ்.விக்ரமசிங்க நேற்று தெரிவித்தார்.

சுரகிமு லங்கா வேலைத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இரத்தினபுரி மாவட்டத்தில் மூன்று பிரதான ஆறுகள் மற்றும் கிளை ஆறுகளில் 1393 இடங்களில் நீர் மாசடையும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்படி ஆறுகளுக்கு குப்பை கொட்டுதல், வீடுகள் வியாபார நிறுவனங்களின் அழுக்கு மற்றும் கழிவு நீரைத் திருப்புதல், இரத்தினக்கல் அகழ்வு போன்ற காரணங்களினால் சுற்றாடல் மாசடைதல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தகவல் தருகையில் இதற்கிணங்க களுகங்கையில் 739 இடங்கள் வளவை கங்கையில் 636 இடங்கள் களனி கங்கையில் 15 இடங்கள் உட்பட ஏனைய ஆறுகளும் இவ்வாறு மாசடைகின்றன.

இதேவேளை எஹலியகொடை பிரதேசத்தின் கழிவு நீரும் குப்பைகளும் களனி கங்கைக்கும் கலவான பிரதேசத்தின் கழிவு குப்பைகள் கின் கங்கைக்கும் ஒதுக்கப்படுகிறது.

மனித செயற்பாடுகளால் நீர்நிலைக ளுக்கு ஏற்படும் பாதிப்பினை தடுப் பதற்கு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போதே இத்தகவல் வெளியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# தொழில்சார் சுப்பர் லீக் உதைபந்தாட்டம் அப்கண்றி லயன்ஸ், புளு ஸ்டார் அணிகள் வெற்றி

**வடகொழும்பு தினகரன், திருகோணமலை குறுப் நிருபர்கள்**

இலங்கை உதைபந்தாட்ட வரலாற்றில் முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொழில்சார் சுப்பர் லீக் முன் தயார்படுத்தல் சுற்றின் இரு போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த (17ம் திகதி) இடம்பெற்றன.

இச்சுற்றின் குழு பி பிரிவைச் சேர்ந்த வென்னப்புவ நியுயங்ஸ் எதிர் நாவலப்பிட்டி அப்கண்றி லயன்ஸ் அணியினரும் ஏ பிரிவிற்கான போட்டியில் களுத்துறை புளு ஸ்டார் அணியும் கொட்டாஞ்சேனை றினோன் அணியினரும் மோதினர்.

நியுயங்ஸ் எதிர் அப்கன்றி லயன்ஸ் அணியினர் மத்தியிலான போட்டியில் அப்கண்றிலயன்ஸ் அணியினர் மிகத்தீவிரமாக விளையாடி 7 கோல்களை பெற்று பெரும் வெற்றியை கைப்பற்றினர். இறுதி வரை போராடியும் நியுயங்ஸ் அணியினரால் ஒருகோலையும் பெற இயலாது இப்போட்டியில் பெரும் தோல்வியைபெற்றனர்.

இச் சுப்பர்லீக் போட்டியில் மிகவும் அதிகப்படியான ஏழு கோல்களை பெற்ற அணியாக நாவலப்பிட்டி அப்கண்றி லயன்ஸ் அணியினர் திகழ்கின்றனர். இவ் அணியின் கவிந்து இஷான் போட்டியின் 44 ஆவது,45ஆவது, 77 ஆவது நிமிடங்களில் மூன்றுகோல்களை பெற்றார். இவ் அணியின் மற்றுமொரு வீரரான எம்.சிபான் 51 ஆவது,56 ஆவது 63 ஆவது, நிமிடங்களில் அடுத்தடுத்து மூன்று கோல்களைபெற்று அசத்த கவிந்துபெர்னாண்டோ 85 ஆவது நிமிடத்தில் ஒருகோலை பெற்று 07 கோல்களால் நியுயங்ஸ் அணியை படுதோல்வி அடையச் செய்தனர்.

மின்னொளியில் இரவு ஏழு மணிக்கு இடம்பெற்ற ப்ளு ஸ்டார் அணி எதிர் றினோன் அணிகளுக்கு மத்தியிலான போட்டி மிக விறுவிறுப்பாக இடம்பெற்றது. புளு ஸ்டார் அணியின் வீரர் எம்.அசாத் 22 நிமிடத்தில் முதலாவது கோலை பெற்றார். றினோன் அணியின் வீரர் திலீப் பீரிஸ் 63 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலை மிக இலகுவாகசுவீகரித்தார்.இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில் போட்டி சூடு பிடிக்க புளுஸ்டார் அணியின் வீரரான சந்தேஷ் 82 ஆவது நிமிடத்தில் தனக்கான கோலைப் பெற்றுதன் அணியை வெற்றிப் பாதைக்குச் எடுத்துச் சென்றார்.

போட்டியின் இறுதியில் 2 1 கோல்கள் வித்தியாசத்தில் புளு ஸ்டார் அணி றினோன் அணியை தோல்வி அடைய வைத்தது.

புளு ஸ்டார் எம்.முன்பீக் (67 நிமிடம்) றினோன் அணியின் ஜூட் சுபன் ( 15 நிமிடம்) எம்.றிஸ்னி (81 நிமிடம்) ஆகியோர் மத்தியஸ்த்தரின் மஞ்சள் அட்டைக்கு உள்வாங்கப்பட்டனர்.புளு ஸ்டார் அணியின் வீரர் எம்.முன்பிக் இரு முறைமஞ்சள் அட்டைக்கு உள்வாங்கப்பட்ட நிலையில் (84 நிமிடம்) மத்தியஸ்தரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.







சிட்டி லைன் வெற்றிகிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி:

# கல்முனை கோல்ட் ஸ்டார் சம்பியன்

**சவளக்கடை குறுப் நிருபர்**



சிட்டி லைன் பருவம் 04 வெற்றிகிண்ணம் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கல்முனை கோல்ட் ஸ்டார் விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இத்தொடரில் இறுதிச் சுற்றுக்கு சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகமும், கல்முனை கோல்ட் ஸ்டார் விளையாட்டு கழகமும் தெரிவானது.

சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 07 ஓவர்கள் நிறைவில் 6 விக்கட்டுகளை இழந்து 62 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை கோல்ட் ஸ்டார் விளையாட்டு கழகம் 5.2 ஓவர்கள் நிறைவில் 2விக்கட்டுகளை இழந்து 64 ஓட்டங்களை பெற்று வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர் ஆசீக், சிறப்பு ஆட்ட நாயகனாக கோல்ட் ஸ்டார் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த வீரர் நஜாத் ஆகியோர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளரும், சட்டம் ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும், அரச பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம். சலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



இதில் சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் பொதுச் செயலாளர் காலீதின், விளையாட்டு ஆசிரியர் அலியார் பைசர், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் இஷட்.எம். ஸாஜீத் உள்ளிட்ட விளையாட்டு வீரர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பரபரப்பான போட்டியில்

# மே.தீவுகள் ஜாம்பவான் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்தியா




வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், முதலாவது அரையிறுதிப் போட்டியில் இந்தியா ஜாம்பவான்கள் அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு இந்தியா அணி முன்னேறியுள்ளது.

ராய்பூர் மைதானத்தில் (புதன் கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், இந்தியா ஜாம்பவான்கள் அணியும் மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 218 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சச்சின் டெண்டுல்கர் 65 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், பெஸ்ட் 2 விக்கெட்டுகளையும் அஸ்டின் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 219 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 206 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் இந்தியா ஜாம்பவான்கள் அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டுவைன் ஸ்மித் 63 ஓட்டங்களையும் டியோ நரைன் 59 ஓட்டங்களையும் லாரா 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியா ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், வினய் குமார் 2 விக்கெட்டுகளையும் இர்பான் பதான், கோனி மற்றும் ஓஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 20 பந்துகளில் 6 சிக்ஸர் 1 பவுண்டரி அடங்கலாக ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களை பெற்றுக் கொண்டயுவராஜ்சிங்தெரிவுசெய்யப்பட்டார்.







நுவரெலியா கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த காலங்களில் நுவரெலியாவில் நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டிகளை மத்தியஸ்துவம் செய்தவர்களுக்கும் கால்பந்தாட்ட குழுக்களை பராமரித்து வழி நடத்தியவர்களுக்கும் கால்பந்தாட்ட பயிற்றுவிற்பாளர்களுக்கும் விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. நுவரெலியா மாநகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரட்ன மாநகரசபை உறுப்பினர்களான ஆர். கேதீஸ், விஸ்ணுவர்தன், ஜெயராம் வினோஜ் மற்றும் நுவரெலியா கால்பந்தாட்ட லீக்கின் தலைவரும் முன்னாள் நுவரெலியா மாநகரசபை பிரதி முதல்வருமான எல். நேருஜி உட்பட பலர் கலந்துக்கொண்டனர். படங்கள்: நூரளை சுப்பிரமணியம்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.